# CNS BHAJAN BOOK

**Edition 3.24.04.29    Apr, 2024**



# Editor's Message



*__Kannan Muthiah__ is the founder of the CNS community magazine __"Vaanga Pazhagalaam"__. He is passionate about art, photography, IT, and the Tamil language. He lives in Vaughan, ON and he is from Karaikudi.*

**Editor, Sponsor**

Is it the age? Or everything has a time and a place? I started to get a lot of interest in listening to devotional songs in recent times. When thinking about this, as a kid growing up in India, I listened to many bhajan songs. Whether it is LR Eswari's "Karppoora Naayagiyae", or, Sirkaazhi Govindarajan's "Vinaayaganae Vinai Theerppavanae", or K Veeramani's "Pallikkattu Sabarimalaikku", or KJ Yesudas' "Harivaraasanam", I woke up to so many popular songs during holy seasons. Some relatives and friends used to perform Pazhani Kaavadi Paatha Yaatthirai and Aiyappan Kovil Iru Mudi. Before starting the procession, a bhajan will be conducted. Many popular bhajan songs will be sung along with musical instruments. The vibe in the room will be something else. I guess all those listening made a great impact and just remained deep inside.

In recent days, this hidden passion and interest started to take center stage. When some of the good singers sang during our recent bhajans, I wondered, "Wow, see how good this song is, and look at how good they are singing it! Why don't we sing as well?". There were so many aspects to the song that attracted me: their commanding voice, modulations, and pronunciation, the song's tune, and lyrics. Thanks to those who inspired me and brought me back into Bhajan participation!

At CNS, we have a good Bhajan book collection. Thanks to Subi Subramanian Annan, who first conceptualized, compiled, and published the 1st edition. Later, with support from Subi Annan, Chinna Meyyappan Annan, and Valliappan Annan, the 2nd edition came out in both book & and PDF formats. My intention with this 3rd edition is to compile an updated Bhajan collection, by building on the legacy that is already established.

Here are the highlights of this edition:

- New and popular songs from recent Bhajans are added to the collection
- Both Tamil and English lyrics are given adjacent to each other for easier reading
- English meaning is given for Sanskrit and old Tamil songs that are hard to understand
- The YouTube link is given if available, so you can listen and learn the song's tune
- Book from which the song is from and its author's name is given if available
- The history behind some of the authors or the songs is given if available
- Benefits of singing the songs are given if available
- Months in which popular religious events occur, for which gods, and why they are celebrated are given, so that we can sing more of that god's songs in that Month's Bhajan

This edition would not have been possible without the tremendous understanding and support from my family. Also, thanks a ton to numerous volunteers who guided me throughout this process, whether by giving feedback for the layout, validating that the font and size chosen for print were readable, providing similar Bhajan books as reference and to inspire from, suggesting additional songs to include, writing the foreword, etc. A special mention goes for proofreading, as it was a meticulous task, where the entire book had to be printed on paper, and then thoroughly checking all the content letter by letter, at the same time ensuring both English and Tamil lyrics were in sync.

I hope everyone takes time to learn the meaning of the devotional songs and try to sing them with tune. I am sure the Gods will bless us with health, wealth, positivity, and good vibrations!

# Table of Contents


**TABLE OF CONTENTS.....A02**

Foreword....A03
Pronunciation Guide....A03

**KADAVUL VAAZHTTHU...A04**

Vaakkundaam Nalla....A04
Paalum Theli Thaenum....A04
Kullak Kullanae Gundu....A04
Ainthu Karatthanai....A04
Kaitthala Niraikani....A05
Vinaayaganae Vinai....A05

**PILLAIYAAR...............A06**

Pillaiyaar Pillaiyaar....A06
Ganaesa Pancha Rathnam....A07
Gowri Nanthana Gajaana....A08
Ganaesa Charanam....A08
Seethak Kalaba....A09
Prabhoa Ganapathae....A11
Aanai Mugatthaan....A12
Appanae Appanae....A12
Thonthi Ganapathi....A13
Mangalatthu Naayaganae....A13

**MURUGAN.................B01**

Anbarukku Anbanae....B01
Santhamigu Chenthamizh....B02
Subramanyam Subraman....B02
Aaduga Oonjal....B03
Mutthaith Tharu....B04
Charana Kamalaalayam....B05
Viralmaaran Ainthu....B06
Aaloalam Paadugira....B06
Neerundu Pozhigindra....B07
Chinnach Chinna Baalan....B08
Mayil Vanthu Aaduthu....B08
Kaavadiyaam Kaavadi....B09
Vattraatha Poigai Vala....B10
Oyilaattam Mayilaattam....B12
Pacchai Mayil Cheeni....B14
Vaelaada Mayilaada....B14
Sutta Thiru Neeredutthu....B15
Pacchai Mayil Vaagananae....B16
Mutthaana Mutthu....B16
Kanthar Sashti Kavasam....B17
Padiyaerappa Padiyaeru....B24

**SIVAN.......................C01**

Kallaarkkum Kattra....C01
Lingaashtakam....C01
Manthiramaavathu Neeru....C03
Vaeyuru Thoali....C05
Boaloa Naathaa....C07
Ulagelaam Unarnthu....C07
Siva Puraanam....C08
Ganga Jadaathara....C11
Samboa Mahaathaeva....C12

**SAKTHI, LAKSHMI......D01**

Saraswathi Namasthubyam....C12
Aaya Kalaigal Arubatthu....D01
Kaadu Vettippoattu....D01
Gaayathri Manthiram....D01
Dhukka Nivaarana....D02
Om Sakthi Om....D03
Karppoora Naayagiyae....D04
Mahaalakshmi Ashtakam....D06

**VISHNU.....................E01**

Aathi Saeshaa Anantha....E01
Thiruppathi Malai....E01
Hari Om Hari Om....E02
Sreenivaasaa Goavinthaa....E02
Maadu Maeikkum Kannae....E03
Guruvaayoorukku Vaa....E04
Aayarpaadi Maaligaiyil....E04
Pullaanguzhal Koduttha....E05
Theeraatha Vilaiyaattu....E06
Kaakkaich Chiraginilae....E07
Chinnach Chinna Patham....E07
Raama Naama Thaaragam....E07
Kurai Ondrum Illai....E08

**AIYAPPAN.................F01**

Bhagavaan Charanam....F01
Harivaraasanam in Tamil....F02
Pallikkattu Sabarimalaikku....F04
Pazhaniyilae Muruganukku....F05
Engae Manakkuthu....F06

**OTHERS....................G01**

Aanjanaeya Veeraa....G01
Jai Jai Hanumaan....G01
Hanumaan Chaaleesaa....G02
Navagraha Sloakam....G05

**MANGALAM...............G06**

Kallaap Pizhaiyum....G06
Vaan Mugil Vazhaathu....G06
Om Mangalam....G07
Naatha Vinthu....G07


---

## Bhajan Months and Corresponding Holy Occasions

*Important holy events that are celebrated in various months are listed here;*
*During monthly Bhajans, you could sing more songs for the god for which there is an event;*

**Jan/Feb** - Thai Poosam, Hanuman Jeyanthi
**Feb/Mar** - Mahaa Sivaraathri
**Mar/Apr** - Raama Navami, Panguni Uthram
**May/Jun** - Agni Nakshthram, Vaikaasi Visaakam
**Jul/Aug** - Varalakshmi Viratham
**Aug/Sep** - Krishna Jeyanthi, Vinayaga Chathurthi
**Sep/Oct** - Vijaya Dhasami, Navaraathri
**Oct/Nov** - Kantha Sashti Soorasamhaaram
**Nov/Dec** - Periya Kaartthigai
**Dec/Jan** - Pillaiyaar Nonbu, Vaikunta Aekaathasi

# முன்னுரை



***Dr. Chidambaram Yegappan****, a retired Professor of Medicine (Neurology) at McMaster University, is an ardent Saivite, and is passionate for Tamil Literature. He lives in Ottawa, ON and he is from Devakottai.*

இந்துமத சனாதனக் கோட்பாடுகளில் வீடுபேறு, அதாவது மோட்சம் அடைவதற்கு நான்கு நிலைகள் கூறப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், மற்றும் ஞானம் ஆகியவை ஆகும். இவற்றில் சாதாரண மக்களாகிய நமக்கு யோகமோ அல்லது ஞானமோ பெறுவது கடினம். ஆகவேதான் சரியை மற்றும் கிரியை ஆகியவை நமக்கு வகுத்துத் தரப்பட்டுள்ளது. பஜனை பாடுவது, தேவாரம் ஓதுவது, கோவிலுக்குப் போவது போன்றவை தான் சரியை மற்றும் கிரியை எனப்படுகிறது. இவை யோகம் மற்றும் ஞானத்திற்குச் சமமானவை. ஆக, சாமானிய மக்களாகிய நமக்குச் சுலபமான வழியில் முக்தி பெறுவதற்கான முதல் படி, பக்திப் பாடல்களைப் பாடி இறைவனைத் துதிப்பது. அதற்கு மிகவும் உறுதுணையாக இந்தப் புத்தகம் அமையும் என்பதில் ஐயமில்லை. இதை அருமையானபடி புத்தகமாகவும், கணினி வழியாகவும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நமக்குத் தந்துள்ளார்கள் சத்யாவும், கண்ணனும். வாழ்க வளமுடன்!

---

## Pronunciation Guide

**Uyir Ezhutthukkal:**
**அ** = **a**; **ஆ** = **aa**; **இ** = **i**; **ஈ** = **ee**; **உ** = **u**; **ஊ** = **oo**;
**எ** = **e**; **ஏ** = **ae**; **ஐ** = **ai**; **ஒ** = **o**; **ஓ** = **oa**; **ஔ** = **av** (or) **au** (or) **ow**;
**அ**டி = **a**di; **ஆ**டி = **aa**di; **இ**ன்று = **i**ndru; **ஈ**ன்று = **ee**ndru; **உ**மை = **u**mai; **ஊ**மை = **oo**mai;
**எ**ன் = **e**n; **ஏ**ன் = **ae**n; **ஐ**வர் = **ai**var; **ஒ**ட்டு = **o**ttu; **ஓ**ட்டு = **oa**ttu; **ஔ**வை = **av**vai;

**Uyir Mei Ezhutthukkal:**
**க**ல் = **ka**l; **கா**ல் = **kaa**l; **கி**ளி = **ki**li; **கீ**ரி = **kee**ri; **கு**டு = **ku**du; **கூ**டு = **koo**du;
**கெ**டு = **ke**du; **கே**டு = **kae**du; **கை**து = **kai**thu; **கொ**டி = **ko**di ; **கோ**டி = **koa**di;
**கௌ**ரி = **gow**ri; **கௌ**தாரி = **kau**thaari;

**Mei Ezhutthukkal:**
These variations are not differentiated to keep it simple: **ன், ண், ந்** = **n**; **ர், ற்** = **r**; **ல், ள்** = **l**;
எ**ன்**, எ**ண்** = e**n**; எ**ந்**தன் = e**n**than; கூ**ர்**, கூ**ற்**று = koo**r**, koot**tr**u; வ**ல்**லி, வ**ள்**ளி = va**l**li;
Only this letter has a special notation: **ழ்** = **zh**; யா**ழ்** = yaa**zh**;

**More Examples for Uyir Mei Ezhutthukkal:**
மூ**ர்க்**கன் = moo**rkk**an; க**ற்க** = kar**kka**; அ**ரை**, அ**றை** = ar**ai**; பா**ராய்** = paa**raai**;
ச**த்த**ம் = sa**tth**am; அ**ச்ச**ம் = a**cch**am; பு**ற்று** = pu**ttru**; அ**ஞ்சு** = an**ju**; **ஞா**னி = **gnaa**ni;
**ஏ**கன் = **ae**gan; **வெ**ல்  = **ve**l; **வே**ல் = **vae**l; சொல்**வோம்** = sol**voam**;
அ**ழ**கன் = a**zh**agan; ப**ழி** = pa**zhi**; ந**ந்த**ன் = na**nth**an; ம**ன**ம், ம**ண**ம் = ma**na**m;

**Some Exceptions:**
Commonly known words and nouns may not follow the above pattern;
**ஓ**ம் = **o**m; முரு**கா** = muru**ga**; வி**நா**ய**னே** = vi**na**yaga**ne**;
**நாராயணா** = **narayana**; **கோ**வில் = **ko**vil; கண்**ணா** = kan**na**;
**தேவா** = **deva**; பெரு**மாளே** = peru**male**; ம**கா**லக்ஷ்மி = ma**ha**lakshmi; **நோ**ன்பு = **no**nbu;

# Kadavul Vaazhtthu

*There is a Tamil tradition to start any event with a “Salutation” to the God. That too if you start with Lord Ganaesaa, it is believed that he will remove all the obstacles on your way. Here is a compilation of a few salutation songs, along with their meaning!*

## YouTube Id: 7X8kmmRgOR4 Vaakkundaam Nalla

***Salutation song from Avvaiyaar's “Moothurai”!*** *Those who seek the trunk-faced Lord with red-coral like complexion and worship his feet with flowers will be blessed with good speech and thoughts. They will have the favorable looks of Goddess Lakshmi and their bodies shall not be afflicted with diseases.*

| | |
|---|---|
| வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்<br>நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு<br>துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்<br>தப்பாமல் சார்வார் தமக்கு! | Vaakkundaam Nalla Manamundaam Maamalaraal<br>Noakkundaam Maeni Nudangaathu - Pookkondu<br>Thuppaar Thirumaeni Thumbikkaiyaan Paatham<br>Thappaamal Saarvaar Thamakku! |

---

## YouTube Id: cwYoargxi9c Paalum Theli Thaenum

***This song from Avvaiyaar's moral book “Nal Vazhi”*** *offers Lord Ganaesaa, who loves to eat, four well-mixed eatables: Milk, Pure Honey, Jaggery, and Dhal. In return, Avvai only asks for the three aspects of Tamil: Literature, Music & Drama, so that she can praise the lord even more with the wisdom earned!*

| | |
|---|---|
| பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும்<br>இவை நான்கும் கலந்துனக்கு நான் தருவேன்<br>கோலம்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே<br>நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா! | Paalum Theli Thaenum Paagum Paruppum<br>Ivai Naangum Kalanthunakku Naan Tharuvaen<br>Koalamsei Thungak Karimugatthuth Thoomaniyae<br>Nee Enakku Sangatthamizh Moondrum Thaa! |

---

## குள்ளக் குள்ளனே குண்டு Kullak Kullanae Gundu

| | |
|---|---|
| குள்ளக் குள்ளனே<br>குண்டு வயிறனே<br>வெள்ளைப் பிள்ளையாரே<br>விநாயக மூர்த்தியே! | Kullak Kullanae<br>Gundu Vayiranae<br>Vellaip Pillaiyaarae<br>Vinaayaga Moortthiyae! |

---

## YouTube Id: tHA9qaw8ZIQ Ainthu Karatthanai

***This salutation song is from Thiru Moolar's “Thiru Manthiram”, that is considered to be the 10th Thirumurai!*** *Adoration to the holy feet enshrined in my consciousness, The feet of his, whose arms are five, whose face has the elephant’s majesty, whose single tusk rivals crescent moon, who is the darling child of Nanthi, who’s wisdom is pure, and overflowing!*

| | |
|---|---|
| ஐந்து கரத்தனை யானை முகத்தனை<br>இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை<br>நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்<br>புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே! | Ainthu Karatthanai Yaanai Mugatthanai<br>Inthin Ilampirai Poalum Eyittranai<br>Nanthi Magandranai Gnaanak Kozhunthinai<br>Punthiyil Vaitthadi Poattrugindraenae! |

# Kadavul Vaazhtthu



## YouTube Id: JZGFOkiisSI Kaitthala Niraikani

***This song from Arunagirinaathar's "Thiruppugazh" worships the feet of the lord in various ways.*** *As "The One", who is the destroyer of evil, who has an elephant head, who relishes various fruits, and sweets like Moadhak, as an embodiment of knowledge, who is ready to expound his wisdom to the seekers, like a Karppaga Vrikshaa Tree, who is the son of Sivaa and Paarvathi, who is having a broad shoulder and pot-like belly, who is supposed to be the author of the three forms of Tamil (literature, music and drama) which he wrote at the top of Mount Meru, who is the foremost God to be worshiped, who also helped in getting his younger brother Murugan married to Valli.*

கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரி முகன்... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் என வினை... கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள் புய... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு... பணிவேனே!

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய... முதல்வோனே
முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம்
அச்சது பொடி செய்த... அதிதீரா
அத்துயர் அது கொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை... இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம் அருள்... பெருமாளே!

Kaitthala Niraikani Appamodaval Pori
Kappiya Kari Mugan... Adipaenik
Kattridum Adiyavar Buddhiyil Uraibava
Karppagam Ena Vinai... Kadithaegum
Matthamum Mathiyamum Vaitthidum Aranmagan
Marpporu Thiral Puya... Matha Yaanai
Matthala Vayiranai Utthami Puthalvanai
Mattavizh Malarkodu... Panivaenae!

Mutthamizh Adaivinai Murppadu Girithanil
Murppada Ezhuthiya... Muthalvoanae
Muppuram Eri Seitha Acchivan Urai Ratham
Acchathu Podi Seitha... Athi Theeraa
Atthuyar Athukodu Suppira Manipadum
Appunam Athanidai... Ibamaagi
Akkura Magaludan Acchiru Muruganai
Akkanam Manam Arul... Perumaalae!

---

## YouTube Id: qrfVzxV54io Vinaayaganae Vinai

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தனிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும்
மண்ணிற்கும் நாதனுமாய்
தன்மையினால் கண்ணில்
பணிவில் கனிந்து!

**விநாயகனே வினை தீர்ப்பவனே**
**வேழ முகத்தோனே ஞால முதல்வனே**
**விநாயகனே வினை தீர்ப்பவனே!**

குணாநிதியே குருவே சரணம்
குறைகள் களைய இதுவே தருணம்!
**(விநாயகனே வினை)**
உமாபதியே உலகம் என்றாய்
ஒரு சுற்றினிலே வலமும் வந்தாய்
கணநாதனே மாங்கனியை உண்டாய்
கதிர்வேலனின் கருத்தில் நின்றாய்!
**(விநாயகனே வினை)**

Vinaayaganae Vevvinaiyai
Vaerarukka Vallaan
Vinaayaganae Vaetkai Thanivippaan
Vinaayaganae Vinnirkkum
Mannirkkum Naathanumaai
Thanmaiyinaal Kannil
Panivil Kaninthu!

**Vinaayaganae Vinai Theerppavanae**
**Vaezha Mugatthoanae Gnaala Muthalvanae**
**Vinaayaganae Vinai Theerppavanae!**

Gunaanithiyae Guruvae Charanam
Kuraigal Kalaiya Ithuvae Tharunam!
**(Vinaayaganae Vinai)**
Umaapathiyae Ulagam Endraai
Oru Suttrinilae Valamum Vanthaai
Gananaathanae Maanganiyai Undaai
Kathirvaelavanin Karutthil Nindraai!
**(Vinaayaganae Vinai)**



[Kadavul Vaazhtthu]

# Pillaiyaar



[Murugan]

***Here are some holy celebrations of Lord Ganaesaa!***

***Vinaayaga Chathurtthi (Aug-Sep)*** *is a grand festival that is celebrated for the birth of Lord Ganaesaa. A life-like clay model of Lord Ganaesaa is made 2-3 months in advance. On the 11th day, the moorthis are taken through the streets in a procession accompanied by dancing, and singing, to be immersed in a river or the sea.*

***Pillaiyaar Noanbu (Dec-Jan)*** *is celebrated exclusively by Naattukkottai Nagaratthaars. The significance of this Noanbu is to pray to Lord Ganaesaa, requesting him to remove all the obstacles in our life. It is celebrated on the 21st day, from the Kaartthigai Dheepam. There are 3 versions of why the Naonbu is performed.*

***Hypothesis Story 1:*** *Ganaesaa killed the demon Gajamuga Asuran on the day of Sashti in Sathaiya star in the month of Maargazhi. Since Nagaratthaars worshipped him as Maragatha Vinaayagar in Kaavaeri Poompattinam, they celebrated this function with faith and fervor.*

***Hypothesis Story 2:*** *In Kaavaeri Poompattinam a Nagaratthaar family teenage girl was ill-treated by her step-mother and accused of stealing her diamond ring. The girl worshipped Lord Ganaesaa for 21 days from the month of Kaartthigai. She counted days by a thread from her saree. On the 21st day, she got an answer from the Lord and her innocence was revealed.*

***Hypothesis Story 3:*** *Nagaratthaars are well-known to travel abroad in ship to East Asian countries. During one such time, a group of Chettiaars were stranded in an island after a shipwreck. They counted the days till rescue by taking one thread from their dhoti each day, and were rescued on the 21st day.*

---

YouTube Id: FPfoBpMvAQA

## Pillaiyaar Pillaiyaar

**பிள்ளையார் பிள்ளையார்**
**பெருமைவாய்ந்த பிள்ளையார்!**
**(பிள்ளையார் பிள்ளையார்)**
ஆற்றங்கரை ஓரத்திலே
அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார்
வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
ஆறுமுக வேலவனின்
அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவுமே
நீக்கி வைக்கும் பிள்ளையார்!

மஞ்சளிலே செய்திடினும்
மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார்
அவல் பொரி கடலையும்
அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி உண்ணுவார்
கஷ்டங்களைப் போக்குவார்!

கலியுகத்தின் விந்தைகளைக்
காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே
இஷ்டம் போல சுற்றுவார்!
**(பிள்ளையார் பிள்ளையார்)**

**Pillaiyaar Pillaiyaar**
**Perumai Vaaintha Pillaiyaar!**
**(Pillaiyaar Pillaiyaar)**
Aattrangarai Oaratthilae
Arasa Maratthu Nizhalilae
Veettriukkum Pillaiyaar
Vinaigal Theerkkum Pillaiyaar
Aarumuga Vaelavanin
Annanaana Pillaiyaar
Naerum Thunbam Yaavumae
Neekki Vaikkum Pillaiyaar!

Manjalilae Seithidinum
Manninaalae Seithidinum
Ainthezhutthu Manthiratthai
Nenjil Aazhtthum Pillaiyaar
Aval Pori Kadalaiyum
Arisi Kozhukkattaiyum
Kavalaiyindri Unnuvaar
Kashtangalaip Poakkuvaar!

Kaliyugatthin Vinthaigalai
Kaanavaendi Anuthinam
Eliyin Meethu Aeriyae
Ishtam Poala Suttruvaar!
**(Pillaiyaar Pillaiyaar)**





# Pillaiyaar





YouTube Id: L9FekdPOs1M

## Ganaesa Pancha Rathnam

***This is composed by Sree Aathi Sankaraacharya.*** *It explains the qualities and nature of Ganaesaa along with the benefits of praying to him. "Pancha Rathnam" means "Five Jewels". The song praises the lord by presenting 5 stanzas as 5 jewels! In the 6th stanza, it is explained that whoever recites this will be bestowed with good health, wealth, and knowledge. Also, it helps one to overcome obstacles by the grace of Ganaesaa.*

*Ganaesaa is the God of wisdom. He is worshipped before the beginning of any endeavor. He gives the necessary skill (buddhi) to do the task and bestows success (siddhi) to the effort. Upon intent meditation, the form of Ganaesaa symbolically reveals many noble truths. The trunk of an elephant, which can carry heavy logs of wood as well as pick up a thin blade of grass, represents the subtle discrimination we need to distinguish between the real and the illusory. The little mouse he rides on represents our own ego, which should be a small but efficient vehicle to take us around in the world, but should be inconspicuous and subservient to wisdom. Ganaesaa's form is revered as the very personification of the symbol "Om" the representation of the universal spirit.*

**ஜெய கணேச ஜெய கணேச**
**ஜெய கணேச பாகிமாம்!**
**ஜெய கணேச ஜெய**
**கணேச ஜெய கணேச ரக்ஷமாம்!**
முதா கராத்த மோதகம்
சதா விமுக்தி சாதகம்
களா தராவ தம்சகம்
விலாசி லோக ரக்ஷகம்
அனாய கைக நாயகம்
வினாசி தேப தைத்யகம்
நடாசு பாசு நாசகம்
நமாமி தம் வினாயகம்! **(1)**
**(ஜெய கணேச)**
நதே தராதி பீகரம்
நவோதி தார்க பாஸ்வரம்
நமத் சுராரி நிர்ஜனம்
நதாதி காப துத்தரம்
சுரேஸ்வரம் நிதீஸ்வரம்
கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மகேஸ்வரம் சமாஸ்ரயே
பராத்பரம் நிரந்தரம்! **(2)**
**(ஜெய கணேச)**
சமஸ்த லோக சம்கரம்
நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
தரே தரோ தரம்வரம்
வரே பவக்த்ர மக்ஷரம்
க்ருபாகரம் க்ஷமாகரம்
முதாகரம் யசஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம்
நமஸ்கரோமி பாஸ்வரம்! **(3)**
**(ஜெய கணேச)**

**Jeya Ganaesa Jeya Ganaesa**
**Jeya Ganaesa Paahimaam!**
**Jeya Ganaesa Jeya Ganaesa**
**Jeya Ganaesa Rakshamaam!**
Muthaa Karaattha Moathakam
Sathaa Vimukthi Saathakam
Kalaa Tharaava Thamsakam
Vilaasi Loaka Rakshakam
Anaaya Kaika Naayakam
Vinaasi Thaebha Thaithyakam
Nataasu Bhaasu Naasakam
Namaami Tham Vinaayakam! **(1)**
**(Jeya Ganaesa)**
Nathae Tharaathi Bheekaram
Navoathi Thaarka Bhaasvaram
Namath Suraari Nirjanam
Nathaathi Kaaba Dhuddharam
Sureswaram Nitheeswaram
Gajeswaram Ganeswaram
Maheswaram Samaasrayae
Paraathparam Nirantharam! **(2)**
**(Jeya Ganaesa)**
Samastha Loaka Samkaram
Nirastha Thaithya Kunjaram
Tharae Tharoa Tharamvaram
Varae Bhavakthra Maksharam
Krupaakaram Kshamaakaram
Muthaakaram Yasaskaram
Manaskaram Namaskruthaam
Namaskaroami Bhaasvaram! **(3)**
**(Jeya Ganaesa)**



[Kadavul Vaazhtthu]

# Pillaiyaar



[Murugan]

அகிஞ் சனார்தி மார்ஜனம்
சிரன் தனோக்தி பாஜனம்
புராரி பூர்வ நந்தனம்
சுராரி கர்வ சர்வணம்
ப்ரபஞ்ச நாச பீஷணம்
தனஞ் ஜயாதி பூஷணம்
கபோல தான வாரணம்
பஜே புராண வாரணம்! **(4)**
**(ஜெய கணேச)**
நிதாந்தி காந்த தன்தகாந்தி
மந்த காந்த காத்மஜம்
அஜிந்த்ய ரூப மந்தஹீன
மந்த ராய க்ருந்தனம்
ஹ்ருதந்தரே நிரந்தரம்
வசந்தமேவ யோகினாம்
தமேக தந்த மேவதம்
விசிந்த யாமி சந்ததம்! **(5)**
**(ஜெய கணேச)**
**படிப்பதன் பயன்கள்**
மகாகணேச பஞ்சரத்ன
மாதரேண யோன்வகம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே
ஹ்ருதிஸ்மரன் கணேஸ்வரம்
அரோகதாம் அதோஷதாம்
சுசாஹிதீம் சுபுத்ரதாம்
சமாஹிதாயு ரஷ்டபூதி
மப்யுபைதி ஷோச்சிராத்!

Akim Chanaarthi Maarjanam
Chiran Thanoakthi Bhaajanam
Puraari Poorva Nanthanam
Suraari Garva Charvanam
Prapancha Naasa Bheeshanam
Thananjayaathi Bhooshanam
Kapoala Dhaana Vaaranam
Bhajae Puraana Vaaranam! **(4)**
**(Jeya Ganaesa)**
Nithaanthi Kaantha Dhanthakaanthi
Mantha Kaantha Kaathmajam
Achinthya Roopa Manthaheena
Mantha Raaya Krinthanam
Hrudantharae Nirantharam
Vasanthamaeva Yoaginaam
Thamaeka Dhantha Maevatham
Vichintha Yaami Santhatham! **(5)**
**(Jeya Ganaesa)**
**Benefits of Reading**
Mahaa Ganaesa Pancharathna
Maatharaena Yoanvaham
Prajalpathi Prabhaathakae
Hruthismaran Ganeswaram
Aroagathaam Athoashathaam
Susaahitheem Subuthrathaam
Samaahithaayu Rashtabhoothi
Mabhyupaithi Shoacchiraath!

---

## YouTube Id: Qa3SX4yIjao — Gowri Nanthana Gajaananaa

*Oh Lord Ganaesaa, Son of Mother Gowri, Son of Goddess Girijaa, You are pure! Son of Paarvathi, Your face is very pleasant! Oh Lord, protect us and keep us happy!*

கௌரி நந்தன கஜானனா
கிரிஜா நந்தன நிரஞ்ஜனா!
பார்வதி நந்தன சுபானனா
பாஹி ப்ரபோமாம் பாஹி பிரசன்னா!
**(கௌரி நந்தன)**

Gowri Nanthana Gajaananaa
Girijaa Nanthana Niranjanaa!
Paarvathi Nanthana Subhaananaa
Paahi Prabhoamaam Paahi Prasanna!
**(Gowri Nanthana)**

---

## YouTube Id: Bv6NTFrtKg8 — Ganaesa Charanam

***Ganaesaa*** *- in Sanskrit is Gana (a group) + Eesaa (ruler or chief). Ganaesaa means, the ruler of a group!* ***Vaageesaa*** *- Brahaspathi (Viyaazhan/Jupiter), the Guru of Devas and Brahma, the Creator, are the two Vaageesars!* ***Saareesaa*** *is the one who has both Saethana (one with the sense about their existence, such as humans) and Asaethana (one without that sense, such as rocks) qualities equally.*

கணேச சரணம் சரணம் கணேசா **(4 முறை)**
வாகீச சரணம் சரணம் வாகீசா **(4 முறை)**
சாரீச சரணம் சரணம் சாரீசா **(4 முறை)**
கணேச சரணம் சரணம் கணேசா **(3 முறை)**
சரணம் கணேசா! **(3 முறை)**

Ganaesa Charanam Charanam Ganaesaa **(4 Times)**
Vaageesa Charanam Charanam Vaageesaa **(4 Times)**
Saareesa Charanam Charanam Saareesaa **(4 Times)**
Ganaesa Charanam Charanam Ganaesaa **(3 Times)**
Charanam Ganaesaa! **(3 Times)**


Kadavul Vaazhtthu

# Pillaiyaar


Murugan

YouTube Id: eVGK2p66DyA

## Seethak Kalaba (Vinaayagar Agaval)

***Avvaiyaar, a great teacher of Yogic strategy, composed the "Vinaayagar Agaval", a short poem born out of intense prayer and meditation.***

*It opens with a description of Ganaesaa's appearance beginning with the contemplation of his bejeweled feet, thereby reflecting the belief that the presence of a deity in our world can be felt through his footprint. It mainly addresses Ganaesaa through his name Vinaayagar = Obstacles Remover. She then proceeds to the subject of Dharshan (the divine gaze that cleansed her of sins), and embarks on a personal metaphysical journey focusing on key aspects of yogic practices.*

*Avvaiyaar mentions "clarity of ever-fresh awareness" as the goal of meditation which she implements through rejection of the five senses and awakening of the six yogic centers associated with respective major chakraas to represent the higher states of consciousness. With a series of sophisticated metaphors, She explains her experience of the physical yoga tradition by describing the energy centers of the body and energy rivers. She talks about the awakening of Kundalini energy symbolized by a coiled snake at the base of the spine and mentions the "skill of raising by breath" referring to the art of Pranayama - the yoga discipline of breath control.*

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந் தழகெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழுதென்னை ஆட்கொள வேண்டி
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குரு வடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக்கருளி

Seethak Kalabach Chenthaamaraip Poom
Paathach Chilambu Pala Isai Paada
Ponnarai Gnaanum Poonthugil Aadaiyum
Vanna Marungil Valarnth Azhageripp a
Paezhai Vayirum Perumbaarak Koadum

Vaezha Mugamum Vilangu Sinthooramum
Anju Karamum Angusa Paasamum
Nenjirk Kudikonda Neela Maeniyum
Naandra Vaayum Naaliru Puyamum
Moondru Kannum Mummathach Chuvadum

Irandu Seviyum Ilangupon Mudiyum
Thiranda Muppurinool Thigazholi Maarbum
Sorppatham Kadantha Thuriya Mei Gnaana
Arpputham Nindra Karpagak Kalirae
Muppazham Nugarum Mooshiga Vaagana

Ippozhuthennai Aatkola Vaendi
Thaayaai Enakkuth Thaan Ezhuntharuli
Maayap Piravi Mayakkam Arutthu
Thirunthiya Muthal Ainthezhutthum Thelivaaip
Porunthavae Vanthen Ulanthanil Puguntu

Guru Vadivaagi Kuvalayam Thannil
Thiruvadi Vaitthuth Thiramithu Porulena
Vaadaa Vagaithaan Magizhnthenakkaruli

கோடாயுதத்தால் கொடு வினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை
அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தி

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலை
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல் சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும்
சதுர்முக சூட்சமும்
எண் முகமாக இனிதெனக்கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்தை
அழுத்தியென் செவியில்

Kodaayuthatthaal Kodu Vinai Kalainthae
Uvattaa Ubathaesam Pugattiyen Seviyil

Thevittaatha Gnaanath Theilvaiyum Kaatti
Aimpulan Thannai Adakkum Ubaayam
Inburu Karunaiyin Inithenakkaruli
Karuvigal Odungum Karutthinai Arivitthu
Iruvinai Thannai
Arutthirul Kadinthu

Thalamoru Naangum Thanthenakkaruli
Malamoru Moondrin Mayakkam Arutthae
Onbathu Vaayil Oru Manthiratthaal
Aimpulak Kathavai Adaippathum Kaatti
Aaraathaaratthu Angusa Nilaiyum

Peraa Nirutthi Paechurai Arutthae
Idai Pingalaiyin Ezhuttharivitthu
Kadayirch Chuzhumunaik Kabaalamum Kaatti
Moondru Mandalatthin Muttiya Thoonin
Naandrezhu Paambin Naavil Unartthi

Kundali Athanil Koodiya Asabai
Vindezhu Manthiram Velippada Uraitthu
Moolaa Thaaratthin Moondezhu Kanalai
Kaalaal Ezhuppum Karutharivitthae
Amutha Nilaiyum Aathitthan Iyakkamum

Kumutha Sagaayan Gunatthaiyum Koori
Idaich Chakkaratthin Eerettu Nilaiyum
Udal Chakkaratthin Uruppaiyum Kaatti
Shanmuga Thoolamum
Chathurmuka Sootchamum
En Mugamaaga Inithenakkarulip

Puriyatta Kaayam Pulappada Enakkuth
Theriyettu Nilaiyum Therisanap Padutthi
Karutthinil Kabaala Vaayil Kaatti
Irutthi Mutthi Inithenak Karuli
Ennai Arivitthu Enakkarul Seithu

Munnai Vinaiyin Muthalaik Kalainthu
Vaakkum Manamum Illaa Manoalayam
Thaekkiyae Endran Sinthai Thelivitthu
Irulveli Irandukku Ondridam Enna
Arultharum Aananthatthai
Azhutthiyen Seviyil

# Pillaiyaar



எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய்
அப்பாலுக்கப்பாலாய் **(65)**

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்து **(70)**

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே! **(72)**

Ellai Illaa Aanantham Alitthu
Allal Kalainthae Arulvazhi Kaatti
Satthatthin Ullae Sathaasivam Kaatti
Sitthatthin Ullae Sivalingam Kaatti
Anuvirkkanuvaai
Appaalukkappaalaai **(65)**

Kanumuttri Nindra Karumpullae Kaatti
Vaedamum Neerum Vilanga Nirutthi
Koodumeith Thondar Kuzhaatthudan Kootti
Anjak Karatthin Arumporul Thannai
Nenjak Karutthin Nilai Arivitthu **(70)**

Thatthuva Nilaiyaith Thanthenai Aanda
Vitthaga Vinaayaga Viraikazhal Charanae! **(72)**

---

YouTube Id: -z1f51-WccQ

## Prabhoa Ganapathae

**பிரபோ கணபதே**
**பரிபூரண வாழ்வருள்வாயே! (பிரபோ)**

சார்ந்து வணங்கி துதி பாடி ஆடி உந்தன்
சன்னதி சரணடைந்தோமே
சாந்த சித்த சௌபாக்கியம் யாவையும்
தந்தருள் சத்குரு நீயே! **(பிரபோ)**

ஆதிமூல கணநாத கஜானன
அற்புத தவள சொரூபா
தேவ தேவ ஜெய விஜய விநாயக
சின்மய பரசிவ தீபா! **(பிரபோ)**

தேடித் தேடி எங்கோ ஓடுகின்றார் உன்னை
உள்ளே தேடி கண்டு கொள்ளலாமே
கோடி கோடி மத யானைகள் பணிசெய்ய
குன்றென விளங்கும் பெம்மானே! **(பிரபோ)**

ஞான வைராக்ய விசார சார ஸ்வர
ராக லய நடன பாதா
நாம பஜன குண கீர்த்தன நவவித
நாயக ஜெய ஜெகன் நாதா! **(பிரபோ)**

பார்வதி பாலா அபார பராத்பர
பரம பாகவத பவ தரணா
பக்த ஜன சுமுக ப்ரவண விநாயக
பாவன பரிமள சரணா! **(பிரபோ)**

**Prabhoa Ganapathae**
**Paripoorana Vaazhvarulvaayae! (Prabhoa)**

Chaarnthu Vanangi Thuthi Paadi Aadi Unthan
Sannathi Charanadainthoamae
Saantha Siddha Sowbhaagyam Yaavaiyum
Thantharul Satthguru Neeyae! **(Prabhoa)**

Aathimoola Gananaatha Gajaanana
Arputha Dhavala Swaroopaa
Thaeva Thaeva Jeya Vijaya Vinaayaga
Chinmaya Parasiva Dheepaa! **(Prabhoa)**

Thaedith Thaedi Engoa Oadugindraar Unnai
Ullae Thaedi Kandu Kollalaamae
Koadi Koadi Matha Yaanaigal Paniseiya
Kundrena Vilangum Pemmaanae! **(Prabhoa)**

Gnaana Vairaakya Visaara Saara Swara
Raaga Laya Nadana Paathaa
Naama Bhajana Guna Keertthana Navavitha
Naayaga Jeya Jegan Naathaa! **(Prabhoa)**

Paarvathi Baalaa Apaara Paraathpara
Parama Baagavatha Bhava Tharanaa
Baktha Jana Sumuka Pranava Vinaayaga
Paavana Parimala Charanaa! **(Prabhoa)**

YouTube Id: twpyDcftQQE

## Aanai Mugatthaan

ஆனை முகத்தான் அரன்
ஐந்து முகத்தான் மகன்
ஆறு முகத்தானுடன் அவதரித்தான்!
ஞானமளிப்பான் என்றும் நலமளிப்பான்
தன்னை நம்பியவர்க்கெல்லாம்
கை கொடுப்பான்! **(ஆனை முகத்தான்)**

ஓம் எனும் பிரணவ நாதமே அவன் தொடக்கம்
உலகமெல்லாமவன் வயிற்றினிலே அடக்கம்
கானல்நீர் வாழ்க்கைக் கடலதனைக் கடக்கும்
தோணியாக வந்து துதிக்கையால்
அணைக்கும்! **(ஆனை முகத்தான்)**

வெள்ளையுள்ளம் எனும்
வீட்டினில் குடியிருப்பான்
வீதிதோறும் இன்றே வேண்டும் வரமளிப்பான்
அள்ளி எடுத்த பிடி
மண்ணிலும் அவனிருப்பான்
ஐங்கரத்தான் அவன்தான் அனைத்திற்கும்
முன்நிற்பான்! **(ஆனை முகத்தான்)**

Aanai Mugatthaan Aran
Ainthu Mugatthaan Magan
Aarumugatthaanudan Avatharitthaan!
Gnaanamalippaan Endrum Nalamalippaan
Thannai Nambiyavarkkellaam
Kai Koduppaan! **(Aanai Mugatthaan)**

Om Enum Pranava Naathamae Avan Thodakkam
Ulagamellaamavan Vayittrinilae Adakkam
Kaanalneer Vaazhkkaik Kadalathanaik Kadakkum
Thoaniyaaga Vanthu Thuthikkaiyaal
Anaikkum! **(Aanai Mugatthaan)**

Vellaiyullam Enum
Veettinil Kudiyiruppaan
Veethi Thoarum Indrae Vaendum Varamalippaan
Alli Eduttha Pidi
Mannilum Avaniruppaan
Aingaratthaan Avanthaan Anaitthirkkum
Munnirppaan! **(Aanai Mugatthaan)**

---

## அப்பனே அப்பனே

அப்பனே அப்பனே பிள்ளையாரப்பனே
சுப்பனின் அண்ணனே பிள்ளையாரப்பனே
அப்பமும் வெல்லமும் படைத்தோம் ஐயா
நீ இப்பவும் எப்பவும் காக்கணும் ஐயா!
**(அப்பனே அப்பனே)**

காக்கை நிறத்து யாக்கையினைக்
கொள்பவனோ நீ ஐயா
வாழ்க்கையின் கணக்கையெழுதி
நிற்பவனும் நீ ஐயா **(காக்கை நிறத்து)**
துதிக்கையிலே துதிக்கையாலே
துயர் நீக்க வருபவனே **(துதிக்கையிலே)**
தொழுகைக்கும் அழுகைக்கும்
அன்புக்கை தருபவனே! **(தொழுகைக்கும்)**
**(அப்பனே அப்பனே)**
வருகை தரும் இடரையெல்லாம்
தணிக்கை செய்பவனே
அருகை தோள் சூடி
அழகைப் பெய்பவனே **(வருகை தரும்)**
இரு கையும் குவிகையிலே
புன்னகை புரிபவனே **(இரு கையும்)**
ஒரு கை அறியாவண்ணம்
மறு கையால் அருள்பவனே! **(ஒரு கை)**
**(அப்பனே அப்பனே)**

## Appanae Appanae

Appanae Appanae Pillaiyaarappanae
Suppanin Annnae Pillaiyaarappanae
Appamum Vellamum Padaitthoam Aiyaa
Nee Ippavum Eppavum Kaakkanum Aiyaa!
**(Appanae Appanae)**

Kaakkai Niratthu Yaakkaiyinaik
Kolbavanoa Nee Aiyaa
Vaazhkkaiyin Kanakkaiyezhuthi
Nirppavanum Nee Aiyaa **(Kaakkai)**
Thuthikkaiyilae Thuthikkaiyaalae
Thuyar Neekka Varubavanae **(Thuthi..)**
Thozhugaikkum Azhugaikkum
Anbukkai Tharubavanae! **(Thozhugai..)**
**(Appanae Appanae)**
Varugai Tharum Idaraiyellaam
Thanikkai Seibavanae
Arugai Thoal Soodi
Azhagaip Peibavanae **(Varugai Tharum)**
Iru Kaiyum Kuvigaiyilae
Punnagai Puribavanae **(Iru Kaiyum)**
Oru Kai Ariyaavannam
Maru Kaiyaal Arulbavanae! **(Oru Kai)**
**(Appanae Appanae)**



Kadavul Vaazhtthu

# Pillaiyaar



Murugan

YouTube Id: Ph5BG22EMJA

## Thonthi Ganapathi

**தொந்தி கணபதி வா வா வா**
**வந்தே ஒரு வரம் தா தா தா!**
கந்தனின் அண்ணா வா வா வா
கனிவுடன் ஒரு வரம் தா தா தா
பானை வயிற்றுடன் வா வா வா
பணிந்தேன் ஒரு வரம் தா தா தா!
**(தொந்தி)**
எல்லாம் அறிந்த கணபதியே
எவ்வரம் கேட்பேன் தெரியாதா
நல்லவன் என்னும் ஒரு பெயரை
நான் பெற நீ வரம் தா தா தா!
**(தொந்தி)**

**Thonthi Ganapathi Vaa Vaa Vaa**
**Vanthae Oru Varam Thaa Thaa Thaa!**
Kanthanin Annaa Vaa Vaa Vaa
Kanivudan Oru Varam Thaa Thaa Thaa
Paanai Vayittrudan Vaa Vaa Vaa
Paninthaen Oru Varam Thaa Thaa Thaa!
**(Thonthi)**
Ellaam Arintha Ganapathiyae
Evvaram Kaetpaen Theriyaathaa
Nallavan Ennum Oru Peyarai
Naan Pera Nee Varam Thaa Thaa Thaa!
**(Thonthi)**

---

YouTube Id: DNQrwYYKIE4

## Mangalatthu Naayaganae

மங்களத்து நாயகனே
மண்ணாளும் முதலிறைவா!
பொங்குதன வயிற்றோனே
பொற்புடைய ரத்தினனே
சங்கரனார் தருமதலாய்
சங்கடத்தைச் சம்கரிக்கும்
எங்கள் குல விடிவிளக்கே
எழில் மணியே கணபதியே!

அப்பமுடன் பொரி கடலை
அவலுடனே அருங்கதலி
ஒப்பில்லா மோதகமும்
ஒரு மனதாய் ஒப்புவித்து
எப்பொழுதும் வணங்கிடவே
எமையாள வேண்டுமென
அப்பனவன் மடியமரும்
அருட்கனியே கணபதியே!

பிள்ளையாரின் குட்டுடனே
பிழை நீக்கும் உக்கியிட்டு
எள்ளளவும் சலியாத
எம்மனத்தை உமக்காக்கித்
தெள்ளியனாய்த் தெளிவதற்குத்
தேன் தமிழில் போற்றுகின்றோம்
உள்ளியதை உள்ளபடி
உகந்தளிப்பாய் கணபதியே!

இன்றெடுத்த இப்பணியும்
இனித்தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார்
தன்னுடனே நீ எழுந்து
என் பணியை உன் பணியாய்
எடுத்தாண்டு எமைக்காக்க
பொன் வயிற்றுக் கணபதியே
போற்றியெனப் போற்றுகின்றோம்!

Mangalatthu Naayaganae
Mannaalum Muthaliraivaa!
Ponguthana Vayittroanae
Porppudaiya Ratthinanae
Sankaranaar Tharumathalaai
Sangadatthaich Chamharikkum
Engal Kula Vidivilakkae
Ezhil Maniyae Ganapathiyae!

Appamudan Pori Kadalai
Avaludanae Arungathali
Opillaa Moathagamum
Oru Manathaai Oppuvitthu
Eppozhuthum Vanangidavae
Emaiyaala Vaendumena
Appanavan Madiyamarum
Arutkaniyae Ganapathiyae!

Pillaiyaarin Kuttudanae
Pizhai Neekkum Ukkiyittu
Ellalavum Saliyaatha
Emmanatthai Umakkaakkith
Thelliyanaaith Thelivatharkkuth
Thaen Thamizhil Poattrugindroan
Ulliyathai Ullapadi
Uganthalippaai Ganapathiyae!

Indreduttha Ippaniyum
Initthodarum Eppaniyum
Nanmaniyae Shanmuganaar
Thannudanae Nee Ezhunthu
En Paniyai Un Paniyaai
Edutthaandu Emaikkaakka
Pon Vayittraik Kanapathiyae
Poattriyenap Poattrugindroam!


[Pillaiyaar](#)


[Sivan](#)

# Murugan

***Here are some holy celebrations of Lord Murugaa!***

***Thai Poosam (Jan-Feb)*** *is celebrated on the 1st full moon day of Thai month, that coincides with the Poosam star. The festival is celebrated to commemorate the victory of Lord Murugan over the demon Soorapathmaa using a Vael, a divine spear granted by Paarvathi.*

***Panguni Utthiram (Mar-Apr)*** *signifies the commemoration of the weddings of Sivan-Paarvathi, Raaman-Seethai, Vishnu-Aandaal, and Murugan-Devasenaa. It marks the beginning of your married life or the karma of your family responsibilities. It is celebrated on the Poornima (full moon) of the month of Panguni.*

***Vaikaasi Visaakam (May-Jun)*** *is celebrated to commemorate Murugan's birth anniversary, during Visaaka Nakshatthiram in the month of Vaikaasi.*

***Kantha Sashti Soora Samhaaram (Oct-Nov)*** *is the day that Lord Murugan defeated the demon Soorapathman. When the Devas could not tolerate his evil doings, they approached Murugan for his assistance. Murugaa fought Soorapathman for 6 days, at the end of which he vanquished the Asuraa. He threw his weapon at Soorapathman and split him into two halves. One half became a peacock, which he took as his vaahanaa. The other became a rooster, which became his banner.*

***Periya Kaartthigai (Nov-Dec)*** *is a festival of lights, celebrated to ward off evil spirits and signifies the triumph of light over darkness. Brahma and Vishnu once quarreled with each other over their supremacy. Distressed by their arguments, Sivaa emerged in front of them as a flame of fire. Brahma and Vishnu compete with each other to find the start and end of this flame. When none of them won, Sivaa emphasized the infiniteness and ultimate existence of God that is beyond all measurements. Murugan took the form of 6 flames that emerged from the eyes of Sivaa, that took the form of 6 babies and accumulated in a lake known as 'Saravana Poigai'. On this day, these nymphs were accumulated by Paarvathi and thereafter this day is also the day when Murugan is worshipped.*

---

## அன்பருக்கு அன்பனே

அன்பருக்கு அன்பனே நீ வாவா சண்முகா!
ஆறுபடை வீடுடையாய் வாவா சண்முகா!
இன்பமய ஜோதியே நீ வாவா சண்முகா!
ஈசனுமை பாலகனே வாவா சண்முகா!

உரகசயனன் மருகோனே வாவா சண்முகா!
ஊமைக் குபதேசித்தவா வாவா சண்முகா!
எட்டுக்குடி வேலவா நீ வாவா சண்முகா!
ஏறுமயில் வாகனனே வாவா சண்முகா!

ஐங்கரனுக் கிளையவனே வாவா சண்முகா!
ஆறுமுக வேலவனே வாவா சண்முகா!
ஒய்யாரி வள்ளிலோலா வாவா சண்முகா!
ஓம்காரத் தத்துவமே வாவா சண்முகா!

ஔவைக் குபதேசித்தவா வாவா சண்முகா!
அகிலலோக நாயகனே வாவா சண்முகா!
ஆடிவாநீ ஓடிவாநீ வாவா சண்முகா!
ஓடிவாநீ ஆடிவாநீ வாவா சண்முகா!
**வெற்றிவேல் முருகனுக்கு... அரோகரா!**

## Anbarukku Anbanae

Anbarukku Anbanae Nee Vaavaa Shanmugaa!
Aarupadai Veedudaiyaai Vaavaa Shanmugaa!
Inbamaya Jothiyae Nee Vaavaa Shanmugaa!
Eesanumai Baalaganae Vaavaa Shanmugaa!

Uragasayanan Marugoanae Vaavaa Shanmugaa!
Oomaik Kubathaesitthavaa Vaavaa Shanmugaa!
Ettukkudi Vaelavaa Nee Vaavaa Shanmugaa!
Aerumayil Vaagananae Vaavaa Shanmugaa!

Aingaranuk Kilaiyavanae Vaavaa Shanmugaa!
Aarumuga Vaelavanae Vaavaa Shanmugaa!
Oyyaari Valli Loalaa Vaavaa Shanmugaa!
Oamkaarath Thathuvamae Vaavaa Shanmugaa!

Avvaik Kubathaesitthavaa Vaavaa Shanmugaa!
Akilaloaga Naayaganae Vaavaa Shanmugaa!
Aadi Vaa Nee Oadi Vaa Nee Vaavaa Shanmugaa!
Oadi Vaa Nee Aadi Vaa Nee Vaavaa Shanmugaa!
**Vettrivael Muruganukku... Aroagaraa!**

# Murugan

YouTube Id: u05H1j4C3No

## Santhamigu Chenthamizhil

**முருகா முருகா வேல் முருகா (2 முறை)**

சந்தமிகு செந்தமிழில் மாலை தொடுத்தேன்
செந்தில் வளர் கந்தனிடம் தூதுவிடுத்தேன்
அந்தமிகு குகன் நெஞ்சில் இடம் பிடித்தேன்
ஆறுமுகம் பேரழகைப் படம் பிடித்தேன்!
**(முருகா)**
வண்ணமயில் வாகனத்தில் வேல் முருகன்
வள்ளி தெய்வ யானையுடன் மால் மருகன்
தென்னகத்தில் வாழுகின்ற சிலை அழகன்
என்னகத்தில் காட்சி தந்தான் கலை அழகன்!
**(முருகா)**
வெண்ணீறு நெற்றியிலே பளபளக்க
வெண்ணிலவு கண்களிலே சிலுசிலுக்க
பன்னீரும் மார்பினிலே கமகமக்க
பார்வதியின் பாலன் வந்தான் மனம் களிக்க!
**(முருகா)**
ஓராறு முகம் கண்டேன் உள மகிழ்ந்தேன்
ஈராறு விழி கண்டேன் எனை மறந்தேன்
சீராளன் உருக் கண்டேன் செயலிழந்தேன்
செந்தாமரைப் பதத்தில்
நான் சரணடைந்தேன்!
**(முருகா)**
முருகா என அழைத்தேன் முறுவல் கண்டேன்
குமரா என அழைத்தேன்
குளுமை கொண்டான்
கந்தா என அழைத்தேன் கனிந்து நின்றான்
கடம்பா என அழைத்தேன்
கருணை கொண்டான்!
**(முருகா)**
பழநி பரங்குன்றம் திருச்செந்தூர்
பழமுதிர் சோலையுடன் சுவாமிமலை
அழகிய திருத்தணிகை மருதமலை
ஆலயங்கள் யாவையும் காட்டுவித்தான்!
**(முருகா)**

**Murugaa Murugaa Vael Murugaa! (2 Times)**

Santhamigu Chenthamizhil Maalai Thodutthaen
Senthil Valar Kanthanidam Thoothu Vidutthaen
Anthamigu Guhan Nenjil Idam Piditthaen
Aarumugam Perazhagaip Padam Piditthaen!
**(Murugaa)**
Vannamayil Vaaganatthil Vael Murugan
Valli Theiva Yaanaiyudan Maal Marugan
Thennagatthil Vaazhugindra Silai Azhagan
Ennagatthil Kaatchi Thanthaan Kalai Azhagan!
**(Murugaa)**
Venneeru Nettriyilae Palapalakka
Vennilavu Kangalilae Silusilukka
Panneerum Maarbinilae Gamagamakka
Paarvathiyin Baalan Vanthaan Manam Kalikka!
**(Murugaa)**
Oaraaru Mugam Kandaen Ula Magizhnthaen
Eeraaru Vizhi Kandaen Enai Maranthaen
Seeraalan Uruk Kandaen Seyal Izhanthaen
Chenthaamaraip Pathatthil
Naan Charanadainthaen!
**(Murugaa)**
Murugaa Ena Azhaitthaen Muruval Kandaen
Kumaraa Ena Azhaitthaen
Kulumai Kondaan
Kanthaa Ena Azhaitthaen Kaninthu Nindraan
Kadambaa Ena Azhaitthaen
Karunai Kondaan!
**(Murugaa)**
Pazhani Parangundram Thirucchenthoor
Pazhamuthir Cholaiyudan Swaamimalai
Azhagiya Thirutthanigai Maruthamalai
Aalaiyangal Yaavaiyum Kaattuvitthaan!
**(Murugaa)**

---

YouTube Id: VvANvTYCFs4

## Subramanyam Subramanyam

**சுப்ரமணியம் சுப்ரமணியம்**
**சண்முகநாதா சுப்ரமணியம்!**

சிவசிவ சிவசிவ சுப்ரமணியம்
ஹரஹர ஹரஹர சுப்ரமணியம்
சிவசிவ ஹரஹர சுப்ரமணியம்
ஹரஹர சிவசிவ சுப்ரமணியம்!

சிவ சரவணபவ சுப்ரமணியம்
குரு சரவணபவ சுப்ரமணியம்
சிவசிவ ஹரஹர சுப்ரமணியம்
ஹரஹர சிவசிவ சுப்ரமணியம்!

**Subramanyam Subramanyam**
**Shanmuganaathaa Subramanyam!**

Sivasiva Sivasiva Subramanyam
Harahara Harahara Subramanyam
Sivasiva Harahara Subramanyam
Harahara Sivasiva Subramanyam!

Siva Saravanabhava Subramanyam
Guru Saravanabhava Subramanyam
Sivasiva Harahara Subramanyam
Harahara Sivasiva Subramanyam!

# Murugan

YouTube Id: kEvuWvXcu0s

## Aaduga Oonjal Aadugavae

**ஆடுக ஊஞ்சல் ஆடுகவே**
**அய்யா முருகா ஆடுகவே!**
**(ஆடுக ஊஞ்சல்)**
ஆழிப் படுக்கை கொண்டோனின்
அருமை மருகா ஆடுகவே
ஊழி தாண்டி நிற்பானின்
உத்தமச் செல்வா ஆடுகவே
வாழும் மனிதர் யாவருக்கும்
வழிக்குத் துணையாம் வேலவனே
ஆளும் கவலை ஓடிடவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

ஆடகப் பொன்னால் ஊஞ்சலிட்டு
அதற்கு வயிரக் கயிறுமிட்டு
கூடிடும் அடியார் ஆட்டிடவே
குமரா ஊஞ்சல் ஆடுகவே
பாடுகள் குறைந்தே மாந்தரெல்லாம்
பண்பால் உயர்ந்தே வாழ்ந்திடவே
வாடிடும் பயிர்கள் வளம்பெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

முன்னே பின்னே சென்றாலும்
முளையில் ஒன்றி நின்றிடுமே
என்னே வாழ்க்கை என்றாலும்
எல்லாம் உன்னைச் சுற்றியதே
குன்றாக் குடியாய் எமைக் காக்கும்
குன்றக் குடியின் வடிவேலா
கண்ணே மணியே கதிர்வேலா
கவினார் ஊஞ்சல் ஆடுகவே!

விண்ணவர் செல்வி தெய்வானை
வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி
மகிமைச் சேவற் கொடியாட
கொண்டிடும் காதல் உணர்வோடு
கூடிய நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

மண்ணைப் பிளந்து பெரும்பேட்டில்
மாபெரும் அருளுடை வடிவுடனே
பெண்ணின் நல்லார் இருவருடன்
பெரு மயில் ஏறி வந்தவனே
கண்ணே தெரியாக் காட்டிடையே
கலங்கித் தவிக்கும் எங்களுக்கே
உன்னால் வழியும் தெரிந்துயர
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

ஆறடி நெடிதாம் உருவுடனே
அடியார் பக்தி உறுவேற
பேரருள் கொண்டாய் பெரும்பேடா
பிள்ளைகள் நலிவினைப் போக்கிடவே
சீரடி வணங்கிட வந்துள்ளோம்
செல்வா அருளைத் தந்திடுவாய்
ஆரிருள் விலகி ஒளிபெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

**Aaduga Oonjal Aadugavae**
**Ayya Murugaa Aadugavae!**
**(Aaduga Oonjal)**
Aazhip Padukkai Kondoanin
Arumai Marugaa Aadugavae
Oozhi Thaandi Nirppaanin
Utthamach Chelvaa Aadugavae
Vaazhum Manithar Yaavarukkum
Vazhikkuth Thunaiyaam Vaelavanae
Aalum Kavalai Oadidavae
Aaduga Oonjal Aadugavae!

Aadagap Ponnaal Oonjalittu
Atharkku Vayirak Kayirumittu
Koodidum Adiyaar Aattidavae
Kumaraa Oonjal Aadugavae
Paadugal Kurainthae Maantharellaam
Panbaal Uyarnthae Vaazhnthidavae
Vaadidum Payirgal Valamperavae
Aaduga Oonjal Aadugavae!

Munnae Pinnae Sendraalum
Mulaiyil Ondri Nindridumae
Ennae Vaazhkkai Endraalum
Ellaam Unnai Chuttriyathae
Kundraak Kudiyaai Emaik Kaakkum
Kundrak Kudiyin Vadivaelaa
Kannae Maniyae Kathirvaelaa
Kavinaar Oonjal Aadugavae!

Vinnavar Selvi Theivaanai
Vaedavar Magalaam Valliyudan
Mannagam Suttrum Mayilaeri
Maethagu Saevark Kodiyaada
Kondidum Kaathal Unarvoadu
Koodiya Nenjath Thoonjalilae
Anbudan Aeri Inithamarnthae
Aaduga Oonjal Aadugavae!

Mannaip Pizhanthu Perumbaettil
Maaberum Aruludai Vadivudanae
Pennin Nallaar Iruvarudan
Peru Mayil Aeri Vanthavanae
Kannae Theriyaak Kaattidaiyae
Kalangith Thavikkum Engalukkae
Unnaal Vazhiyum Therinthuyara
Aaduga Oonjal Aadugavae!

Aaradi Nedithaam Uruvudanae
Adiyaar Bakthi Uruvaera
Paerarul Kondaai Perumpaedaa
Pillaigal Nalivinaip Poakkidavae
Seeradi Vanangida Vanthulloam
Selvaa Arulaith Thanthiduvaai
Aarirul Vilagi Oliperavae
Aaduga Oonjal Aadugavae!

## YouTube Id: oGguiaxpiQ8 Mutthaith Tharu Patthi

***"Mutthaith Tharu" is an iconic song from "Thiruppugazh" composed by Arunagirinaathar who lived during the 15th century in Thiruvannaamalai.*** *Thiruppugazh is a significant work of medieval Tamil literature. It is celebrated for the perfect amalgamation of literature and devotion. Arunagirinaathar excelled in composing complex lyrics coupled with intricate rhythmic patterns.*

*Little is known about Arunagirinaathar's personal life, and what is known is mostly traditional and conflicting. One tradition says that he had an infamous birth and in his youth days, led a riotous life of bodily pleasures. Due to a simple penetrating remark of his sister, one day, Arunagiri realized his shameful life and forthwith ascended the high tower of Thiruvannaamalai temple, and threw himself down to kill himself. Miraculously, Lord Murugaa saved him and showed him the divine path.*

*You Lord of Devasenai, her beautiful smile and teeth looking like pearls. You are Saravanaa holding the Sakthivel! You are the seed to Moksha, Oh Guru. Three-eyed Lord Shiva, to whom you preached the pranava manthiram "Om". Vishnu and Bramha, along with multitudes of gods, watched obediently. One who killed ten-headed Raavanaa, helped churn the ocean and made the day into the night using his chakra, one who drove chariot for Arjunaa, that green/blueish colored Vishnu holds your highest regard. Bless and save me. The anklets in Bhairavi's (Kali) feet jingled as she danced fiercely; covering the eight directions; while the vultures and devils danced along the gods (bhairavars) that protect these directions (corners); danced along while the parai (drum) sound and other sounds from the battlefield add to this fury; the hostile asuras killed with vengeance; lead by you, Oh Perumaale! (The poet equates Murugaa to Perumaal - signifying they are all the same).*

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர... என ஒதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்து முவர்க்கத் தமரரும்... அடி பேணப்

பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத் திகிரியில்... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும்... ஒரு நாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு... கழுதாடத்

திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப் பவுரிக்குத் த்ரிகடக... என ஒதக்

Mutthaith Tharu Patthith Thirunagai
Atthikkirai Satthich Charavana
Mutthikkoru Vitthuk Kurupara... Ena Oathum

Mukkatpara Markkuch Churuthiyin
Murppattathu Karppith Thiruvarum
Muppatthu Muvarkkath Thamararum... Adi Paenap

Patthuth Thalai Thatthak Kanaithodu
Ottraik Kiri Matthaip Poruthoru
Pattap Pagal Vattath Thigiriyil... Iravaagap

Pattharkkira Thatthaik Kadaviya
Pacchaip Puyal Mecchath Thagu Porul
Patchatthodu Rakshith Tharulvathum... Oru Naalae

Thitthitheya Otthap Paripura
Nirtthap Patham Vaitthup Payiravi
Thikkotka Nadikkak Kazhugodu... Kazhuthaadath

Thikkup Pari Attap Payiravar
Thokkutthogu Thokkutthogu Thogu
Chithrap Pavurikkuth Thrigadaga... Ena Oathak

கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென... முதுகூகை

Kotthup Parai Kottak Kalamisai
Kukkukkugu Kukkuk Kugukugu
Kutthipputhai Pukkup Pidiyena... Muthukoogai

கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப் பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல... பெருமாளே!

Kotputtrezha Natpattravunarai
Vettip Paliyittuk Kulagiri
Kutthuppada Otthup Poravala... Perumaalae!

---

YouTube Id: 3IiwK_6jvVA

## Charana Kamalaalayam (Swaamimalai)

***This is a song from Arunagirinaathar's Thiruppugazh, sung on Swaamimalai Murugan.*** *At the temple of your lotus feet, at least for the duration of half a minute, incapable of proper concentration and penance, rotten rogue and a complete fool called me, having been born as if birth alone is my profession, the lonely myself, should I feel dazed due to poverty, lack of spirituality? What is the reason for Your lack of compassion? Kindly tell me right at this moment, You, the son of Sivaa, the Lord of Mount Kailaash! On your valorous shoulders, you wear chains made of gems, gold, Vetchi flowers. and fragrant garlands of Katampa flowers. This is the opportune time, Oh Lord, for you, to grant me long lasting health, happiness, abundant wealth, long life filled with fortunes, respect, knowledge of Sivaa and heavenly bliss - these are a few of my requests to you. Oh, bright and sharp speared one! In order that I praise your reddish lotus feet everyday, You gave me the rare knowledge of Tamil, Oh Peacock-Warrior! You rise over the wonderful mount of Pazhani, Oh handsome one, Murugaa of Thiruvaeragam (Swaamimalai)!*

சரண கமலாலயத்தை
அரை நிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க... அறியாத
சடக சட மூட மட்டி
பவ வினையிலே சனித்த
தமியன் மிடியால் மயக்க... முறுவேனோ!

Charana Kamalaalayatthai
Arai Nimida Naeramattil
Thavamurai Thiyaanam Vaikka... Ariyaatha
Sadaka Sada Mooda Matti
Bhava Vinaiyilae Sanittha
Thamiyan Midiyaal Mayakka... Muruvaenoa!

கருணை புரியாதிருப்பதென
குறையிவேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற... குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணி
பொன்மாலை செச்சை
கமழுமண மார் கடப்ப... மணிவோனே!

Karunai Puriyaathiruppathena
Kuraiyivaelai Seppu
Kayilaimalai Naathar Pettra... Kumaroanae
Kadagabuya Meethi Rathna Maniyani
Ponmaalai Secchai
Kamazhumana Maar Kadappa... Manivoanae!

தருணமிதை யாமிகுத்த
கனமதுறு நீள் சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க... பெரு வாழ்வு
தகைமை சிவ ஞான முத்தி
பரகதியும் நீ கொடுத்து
உதவிபுரிய வேணும் நெய்த்த... வடிவேலா!

Tharunamithai Yaamiguttha
Kanamathura Neel Savukkya
Sagala Selva Yoagamikka... Peru Vaazhvu
Thagaimai Siva Gnaana Mutthi
Paragathiyum Nee Kodutthu
Uthavipuriya Vaenum Neittha... Vadivaelaa!

அருணதள பாத பத்ம
மது நிதமும் ஏது திக்க
அரிய தமிழ் தானளித்த... மயில் வீரா
அதிசயம் அநேகமுற்ற
பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின்... முருகோனே!

Arunathala Paatha Pathma
Mathu Nithamum Aethu Thikka
Ariya Thamizh Thaanalittha... Mayil Veeraa
Athisayam Anaegamuttra
Pazhanimalai Meethuthittha
Azhagathiru Vaeragatthin... Murugoanae!

## YouTube Id: Tx1voukrxUc Viralmaaran (Thiruchenthoor)

***This song from Arunagirinaathar's "Thiruppugazh" is based on the "Agapporul" (love) theme.*** *According to Vaariyaar, if you sing this song 6 times daily, any obstacles in getting married will go away! This poem uses the hero-heroine theme to describe the pain of longing that the heroine experiences when separated from her hero.*

*Arunagirinaathar describes a beautiful evening in Thiruchenthoor, and pleads with Lord Murugaa, "Please gift me your Kadamba flower to mollify me and accept my purest form of love towards you. Similar to that of Valli who stays in Kurinji hills, will you not help me come out of all my problems? Lord Sivaa was elated by your teachings. Krouncha mountain and Soorapathman were destroyed by your spear (Vael). Oh Lord, who mounts the beautiful Peacock and resides in Thiruchenthoor, for all your devotees who sincerely want to know you by holding your lotus feet, please accept their love and remove all their obstacles".*

விறல்மாரன் ஐந்து மலர்வாளி சிந்த
மிக வானில் இந்து - வெயில் காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தம்தம் - வசை கூற!

குறவாணர் குன்றில் உறை பேதை
கொண்ட கொடிதான துன்பம் - அயல்தீர
குளிர் மாலையின் கண் அணிமாலை தந்து
குறைதீர வந்து - குறுகாயோ!

மறி மானுகந்த இறையோன்
மகிழ்ந்து வழிபாடு தந்த - மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை அஞ்ச
வடிவேல் எறிந்த - அதி தீரா!

அறிவால் அறிந்து உன்னிரு தாள் இறைஞ்சும்
அடியார் இடைஞ்சல் - களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல் அமர்ந்து
அலைவாய் உகந்த - பெருமாளே!

Viralmaaran Ainthu Malarvaali Sintha
Miga Vaanil Inthu - Veyil Kaaya
Mithavaadai Vanthu Thazhalpoala Vondra
Vinaimaathar Thamtham - Vasai Koora!

Kuravaanar Kundril Urai Paethai
Konda Kodithaana Thunbam - Ayaltheera
Kulir Maalaiyin Kan Animaalai Thanthu
Kuraitheera Vanthu - Kurugaayoa!

Mari Maanugantha Iraiyoan
Magizhnthu Vazhipaadu Thantha - Mathiyaalaa
Malaimaavu Sintha Alaivaelai Anja
Vadivael Erintha - Athi Theeraa!

Arivaal Arintha Unniru Thaal Irainjum
Adiyaar Idainjal - Kalaivoanae
Azhagaana Sempon Mayilmael Amarnthu
Alaivaai Ugantha - Perumaalae!

---

## YouTube Id: zB6nuYIeJH0 Aaloalam Paadugira

***This is a song from Kaviyarasar Kannathaasan!***

ஆலோலம் பாடுகிற வள்ளியம்மை கழுத்தில்
அணியாரம் இட்ட பெருமான்... **அரோகரா!**
ஆகாயம் பூமியிடை நீராவிபோல் வடிவில்
ஆதாரமான பெருமான்... **அரோகரா!**

மேலாளர் கீழாளர் பேதங்கள் இல்லாது
மெய்யாள வந்த பெருமான்... **அரோகரா!**
மின்னாகி இடியாகி மழையாகிக் காற்றாகி
விளைவாகி நின்ற பெருமான்... **அரோகரா!**

கோலாலம்பூரில் வளர்
கோதண்டபாணி இவன்
கோவில் கொண்டாடு மனமே... **அரோகரா!**

Aaloalam Paadugira Valliammai Kazhutthil
Aniyaaram Itta Perumaan... **Aroagaraa!**
Aagaayam Bhoomiyidai Neeraavipoal Vadivil
Aathaaramaana Perumaan... **Aroagaraa!**

Maelaalar Keezhaalar Paethangal Illaathu
Meiyaala Vantha Perumaan... **Aroagaraa!**
Minnaagi Idiyaagi Mazhaiyaagik Kaattraagi
Vilaivaagi Nindra Perumaan... **Aroagaraa!**

Koalaalampooril Valar
Koathandapaani Ivan
Kovil Kondaadu Manamae... **Aroagaraa!**

கூற்றேதும் வாராது கொடுநோயும் சேராது
குறையாத வாழ்வு மிகுமே... **அரோகரா!**

Koottraethum Vaaraathu Kodunoayum Saeraathu
Kuraiyaatha Vaazhvu Migumae... **Aroagaraa!**

'ஓம்' என்ற சிறுமுட்டை உள் வீடு அவன் வீடு
உன் வீடும் அந்த இடமே... **அரோகரா!**
ஓசைக்கு மணியுண்டு பூசைக்கு மணமுண்டு
உன் வாழ்வு கந்தன் வசமே... **அரோகரா!**

'Om' Endra Sirumuttai Ul Veedu Avan Veedu
Un Veedum Antha Idamae... Aroagaraa!
Oasaikku Maniyundu Poosaikku Manamundu
Un Vaazhvu Kanthan Vasamae... **Aroagaraa!**

நாமென்ற அகங்காரம் நமதென்ற எக்காளம்
நடவாது வேலனிடமே... **அரோகரா!**
நடக்கட்டும் பார்ப்போம்
என்றிருக்கட்டும் உன்னுள்ளம்
நலம் யாவும் வீடு வருமே... **அரோகரா!**

Naamendra Agangaaram Namathendra Ekkaalam
Nadavaathu Vaelanidamae... **Aroagaraa!**
Nadakkattum Paarppoam
Endrirukkattum Unnullam
Nalam Yaavum Veedu Varumae... **Aroagaraa!**

கோமன்னன் வாழ்கின்ற
கோலாலம்பூர் செந்தூர்
கொடிகட்டி ஆள விடுமே... **அரோகரா!**
கொண்டாடு கொண்டாடு
தண்டாயுதத் தானைக்
குறையாத செல்வ மிகுமே... **அரோகரா!**

Koamannan Vaazhgindra
Koalaalampoor Chenthoor
Kodikatti Aala Vidumae... **Aroagaraa!**
Kondaadu Kondaadu
Thandaayuthath Thaanaik
Kuraiyaatha Selva Migumae... **Aroagaraa!**

---

## YouTube Id: MPnt1pOKK28 Neerundu Pozhigindra

***This is a song from Vallalaar's Thiruvarutpaa "Theiva Manimaalai".*** *Vallalaar says everything will be there and available if you praise and pray to lord Murugaa of Kantha Koattam. This is a song of optimism, where you pray Murugan and say you have everything, and Murugan will take care of giving you that everything.*

நீருண்டு பொழிகின்ற காருண்டு
விளைகின்ற நிலனுண்டு பலனுமுண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு
கதிகொண்ட நெறியுண்டு நிலையுமுண்டு

Neerundu Pozhigindra Kaarundu
Vilaigindra Nilanundu Palanumundu
Nithiyundu Thuthiyundu Mathiyundu
Kathikonda Neriyundu Nilaiyumundu

ஊருண்டு பேருண்டு மணியுண்டு
பணியுண்டு உடையுண்டு கொடையுமுண்டு
உண்டு உண்டு மகிழவே உணவு உண்டு
சாந்தமுறும் உளமுண்டு வளமுமுண்டு!

Oorundu Paerundu Maniyundu
Paniyundu Udaiyundu Kodaiyumundu
Undu Undu Magizhavae Unavu Undu
Saanthamurum Ulamundu Valamumundu!

தேருண்டு கரியுண்டு பரியுண்டு
மற்றுள்ள செல்வங்கள் யாவுமுண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியும்
நின்பதத் தியானம் உண்டாயின் அரசே

Thaerundu Kariyundu Pariyundu
Mattrulla Selvangal Yaavumunudu
Thaenundu Vanduru Kadampaniyum
Ninpathath Thiyaanam Undaayin Arasae

தாருண்ட சென்னையிற் கந்த
கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே
தண்முகத்து உய்யமணி உண்முகச்
சைவமணி சண்முகத் தெய்வ மணியே!

Thaarunda Chennaiyirk Kantha
Koattatthul Valar Thalamoangu Kanthavaelae
Thanmugatthu Uiyyamani Unmugach
Chaivamani Shanmugath Theiva Maniyae!

Pillaiyaar

# Murugan

Sivan

## Chinnach Chinna Baalan

YouTube Id: 7G36pxcYnvA

**சின்னச் சின்ன பாலன் சிவ பாலன்**
**வண்ண மயில் ஏறும் வடிவேலன்! (சின்ன)**

குன்றம் எங்கிலும் குடியிருப்பான்
குறவர் குழுவினில் குடியிருப்பான்
குன்றக்குடி வேலனே குறத்தி மணாளனே
என் குறைகளைத் தீர்க்க
வந்தருள்வாய்! **(சின்ன)**

தன்னந் தனிமையில் நின்று விட்டாய்
தந்தை தாயையும் மறந்து விட்டாய்
சங்கத்தமிழ் வேலனே
தாமரைப் பொற்பாதனே
ஏறு மயில் ஏறி நீ வந்திடுவாய்! **(சின்ன)**

ஒளவைப் பாட்டி உன்னை அழைக்கையிலே
சென்று நின்றனை மரத்தினிலே
சுட்டபழம் வேண்டுமா
சுடாப்பழம் வேண்டுமா
என்று நீ ஒளவைக்கு அருள் செய்தாய்! **(சின்ன)**

எங்கள் உள்ளத்தில் உறைந்திருந்தாய்
எங்கள் வாழ்வினில் ஒளி தருவாய்
எந்தையும் நீயே என் தாயும் நீயே
ஏறு மயில் ஏறி நீ வந்திடுவாய்! **(சின்ன)**

**Chinnach Chinna Baalan Siva Baalan**
**Vanna Mayil Aerum Vadivaelan! (Chinna)**

Kundram Engilum Kudiyiruppaan
Kuravar Kuzhuvinil Kudiyiruppaan
Kundrakkudi Vaelanae Kuratthi Manaalanae
En Kuraigalaith Theerkka
Vantharulvaai! **(Chinna)**

Thannan Thanimaiyil Nindru Vittaai
Thanthai Thaayaiyum Maranthu Vittaai
Sangatthamizh Vaelanae
Thaamaraip Porppaathanae
Aeru Mayil Aeri Nee Vanthiduvaai! **(Chinna)**

Avvaip Paatti Unnai Azhaikkaiyilae
Sendru Nindranai Maratthinilae
Suttapazham Vaendumaa
Sudaappazham Vaendumaa
Endru Nee Avvaikku Arul Seithaai! **(Chinna)**

Engal Ullatthil Urainthirunthaai
Engal Vaazhvinil Oli Tharuvaai
Enthaiyum Neeyae En Thaayum Neeyae
Aeru Mayil Aeri Nee Vanthiduvaai! **(Chinna)**

---

## Mayil Vanthu Aaduthu

YouTube Id: y-PgaqGgQEM

**வேல் வேல் வேல் வெற்றி வேல் வேல் வேல்**
**ஆகா... (வேல் வேல் வேல்)!**

மயில் வந்து ஆடுது மலைமேலே
குயில் வந்து பாடுது சிலைபோலே
வேல் வந்து மின்னுது கண்ணெதிரே - என்
வேலனைக் காணேனோ என்னெதிரே? **(வேல்)**

திருப்புகழ் பாடியே கை தொழுதேன்
கருப்புகள் நீக்கிட மெய் தொழுதேன்
விருப்புடன் வேண்டியே பாடுகிறேன்
விராலிமலை நோக்கி ஓடுகிறேன்! **(வேல்)**

சோலையில் வந்தால் குறைதீரும் - அந்த
சுந்தரப் புன்னகை நிறைவாகும்
மாலையில் மயங்கியே வாடுகிறேன்
மையலில் உன்னையே தேடுகிறேன்! **(வேல்)**

வள்ளிக்கு வாய்த்த வடிவழகா
அள்ளிட ஆவி துடிக்குதப்பா
சொல்லிச் சொல்லி என்ன பயன்
நில்லு நில்லு என் கண்ணெதிரே! **(வேல்)**

**Vael Vael Vael Vettri Vael Vael Vael**
**Aahaa... (Vael Vael Vael)**

Mayil Vanthu Aaduthu Malaimaelae
Kuyil Vanthu Paaduthu Silaipoalae
Vael Vanthu Minnuthu Kannethirae - En
Vaelanaik Kaanaenoa Ennethirae? **(Vael)**

Thiruppugazh Paadiyae Kai Thozhuthaen
Karuppugal Neekkida Mei Thozhuthaen
Viruppudan Vaendiyae Paadugiraen
Viraalimalai Noakki Oadugiraen! **(Vael)**

Soalaiyil Vanthaal Kuraitheerum - Antha
Sundharap Punnagai Niraivaagum
Maalaiyil Mayangiyae Vaadugiraen
Maiyalil Unnaiyae Thaedugiraen! **(Vael)**

Vallikku Vaaittha Vadivazhagaa
Allida Aavi Thudikkuthappaa
Chollich Cholli Enna Payan
Nillu Nillu En Kannethirae! **(Vael)**

# Murugan

YouTube Id: q7J80eC6YcI

## Kaavadiyaam Kaavadi

*“**Kaavadi Aattam” (burden dance) is a ceremonial sacrifice and offering practiced by devotees during the worship of Murugan.** It is a central part of the festival of Thai Poosam and emphasizes debt bondage. The Kaavadi itself is a physical burden, the bearing of which is used by the devotees to implore Murugan for assistance, usually on behalf of a loved one who is in need of healing, or as a means of balancing a spiritual debt. Devotees process and dance along a pilgrimage route while bearing these burdens.*

காவடியாம் காவடி
**கந்த வேலன் காவடி!**
கண்கொள்ளாக் காட்சிதரும்
**கடம்பனுக்குக் காவடி!**
வேல்முருகன் நாமத்திலே
**வித விதமாய்க் காவடி!**
வெற்றிவேலன் காவடி
**வீர வேலன் காவடி!**

சிங்கார வேலனுக்கு
**சின்னச் சின்னக் காவடி!**
வண்ணமயில் தோகையோடு
**ஆடி வரும் காவடி!**
பழநிமலை பாலனுக்கு
**பால் குடத்தால் காவடி!**
தென்பழநி வேலனுக்கு
**தேன் குடத்தால் காவடி!**

சுவாமிநாத வேலனுக்கு
**சந்தனத்தால் காவடி!**
பாலசுப்பிர மணியனுக்கு
**பஞ்சாமிர்தக் காவடி!**
ஆறுமுக வேவனுக்கு
**அழகு மயில் காவடி!**
வண்ண வண்ணக் காவடி
**வெற்றி வேலன் காவடி!**

மயூர நாதனுக்கு
**மச்சத்தால் காவடி!**
குன்றக்குடி குமரனுக்கு
**குறைவில்லாத காவடி!**
பக்தரெல்லாம் கொண்டாடும்
**காவடியாம் காவடி!**
பாமாலை பாடி ஆடி
**நாடி வரும் காவடி!**
கண்கொள்ளாக் காட்சிதரும்
**கந்த வேலன் காவடி!**
காவடியாம் காவடி
**காண வேண்டும் கண் கோடி!**

Kaavadiyaam Kaavadi
**Kantha Vaelan Kaavadi!**
Kankollaak Kaatchitharum
**Kadambanukkuk Kaavadi!**
Vaelmurugan Naamatthilae
**Vitha Vithamaaik Kaavadi!**
Vettrivaelan Kaavadi
**Veera Vaelan Kaavadi!**

Singaara Vaelanukku
**Chinnach Chinnak Kaavadi!**
Vannamayil Thoagaiyoadu
**Aadi Varum Kaavadi!**
Pazhanimalai Baalanukku
**Paal Kudatthaal Kaavadi!**
Thenpazhani Vaelanukku
**Thaen Kudatthaal Kaavadi!**

Swaaminaatha Vaelanukku
**Chanthanatthaal Kaavadi!**
Baalasubra Maniyanukku
**Panjaamirthak Kaavadi!**
Aarumuga Vaelanukku
**Azhagu Mayil Kaavadi!**
Vanna Vannak Kaavadi
**Vettri Vaelan Kaavadi!**

Mayoora Naathanukku
**Macchatthaal Kaavadi!**
Kundrakkudi Kumaranukku
**Kuraivillaatha Kaavadi!**
Baktharellaam Kondaadum
**Kaavadiyaam Kaavadi!**
Paamaalai Paadi Aadi
**Naadi Varum Kaavadi!**
Kankollaak Kaatchitharum
**Kantha Vaelan Kaavadi!**
Kaavadiyaam Kaavadi
**Kaana Vaendum Kan Koadi!**

# Murugan



YouTube Id: EGC9ZZIF90g **Vattraatha Poigai Valanaadu**

***This is a song named "Avinaasip Patthu", from an unknown author.*** *According to the author, Lord Murugan is a Thamizhan, the god for Thamizh folks. He is handsome, friendly; will come running to help those who calls for him;*

வற்றாத பொய்கை வளநாடு கண்டு
மலை மேலிருந்த குமரா... **அரோகரா!**
உற்றார் எனக்கு ஒரு பேருமில்லை
உமையாள் தனக்கு மகனே... **அரோகரா!**
முத்தாடை தந்து அடியேனை ஆளும்
முருகேசன் என்றனரசே... **அரோகரா!**
வித்தாரமாக மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (01)**

ஆலாலம் உண்டோன் மகனாகி வந்து
அடியார் தமக்கும் உதவி... **அரோகரா!**
பாலூரல் உண்டு கனிவாய் திறந்து
பயன் அஞ்செழுத்தை மறவேன்... **அரோகரா!**
மாலான வள்ளி தனைநாடி வந்து
வடிவாகி நின்ற குமரா... **அரோகரா!**
மேலான வெற்றி மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (02)**

திருவாசல் தோறும் அருள் வேதம் ஒத
சிவன் அஞ்செழுத்தை மறவேன்... **அரோகரா!**
முருகேசரென்று அறியார் தமக்கு
முதலாகி நின்ற குமரா... **அரோகரா!**
குருநாத சுவாமி குறமாது நாதர்
குமரேசர் என்ற பொருளே... **அரோகரா!**
மறவாமல் வெற்றி மயில் மீதிலேறி
வரமேணும் என்றனருகே... **அரோகரா! (03)**

உதிரம் திரண்டு பனியீரலுண்டு
உருவாசல் தேடி வருமுன்... **அரோகரா!**
ததி போலெழுந்த திருமேனி நாதர்
கடைவீடு தந்தும் அருள்வாய்... **அரோகரா!**
முதிரஞ் சிறந்த வயல்வீறு செங்கை
வடிவேல் எடுத்த குமரா... **அரோகரா!**
யதிராய் நடந்து மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (04)**

மண்ணாடும் ஈசன் மகனாரை உந்தன்
மலைவீடு தந்தும் அருள்வாய்... **அரோகரா!**
வண்டூரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவேல் எடுத்த குமரா... **அரோகரா!**
நன்றாக வந்து அடியேனை ஆண்டு
நல்வீடு தந்த குகனே... **அரோகரா!**
கொண்டாடி வெற்றி மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (05)**

Vattraatha Poigai Valanaadu Kandu
Malai Maeliruntha Kumaraa... **Aroagaraa!**
Uttraar Enakku Oru Paerumillai
Umaiyaal Thanakku Maganae... **Aroagaraa!**
Mutthaadai Thanthu Adiyaenai Aalum
Murugaesan Endranarasae... **Aroagaraa!**
Vitthaaramaaga Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (01)**

Aalaalam Undoan Maganaagi Vanthu
Adiyaar Thamakkum Uthavi... **Aroagaraa!**
Paalooral Undu Kanivaai Thiranthu
Payan Anjezhutthai Maravaen... **Aroagaraa!**
Maalaana Valli Thanainaadi Vanthu
Vadivaagi Nindra Kumaraa... **Aroagaraa!**
Maelaana Vettri Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (02)**

Thiruvaasal Thoarum Arul Vaetham Oatha
Sivan Anjezhutthai Maravaen... **Aroagaraa!**
Murugaesarendru Ariyaar Thamakku
Muthalaagi Nindra Kumaraa... **Aroagaraa!**
Gurunaatha Swaami Kuramaathu Naathar
Kumaraesar Endra Porulae... **Aroagaraa!**
Maravaamal Vettri Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (03)**

Uthiram Thirandu Paniyeeralundu
Uruvaasal Thaedi Varumun... **Aroagaraa!**
Thathi Poalezhuntha Thirumaeni Naathar
Kadaiveedu Thanthum Arulvaai... **Aroagaraa!**
Muthiran Jirantha Vayalveeru Sengai
Vadivael Eduttha Kumaraa... **Aroagaraa!**
Yathiraai Nadanthu Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (04)**

Mannaadum Eesan Maganaarai Unthan
Malaiveedu Thanthum Arulvaai... **Aroagaraa!**
Vandooral Paayum Vayalooril Sengai
Vadivael Eduttha Kumaraa... **Aroagaraa!**
Nandraaga Vanthu Adiyaenai Aandu
Nalveedu Thantha Guhanae... **Aroagaraa!**
Kondaadi Vettri Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (05)**

நீலஞ் சிறந்த குறமாது வள்ளி
நின் பாகம் வைத்த குமரா... **அரோகரா!**
காலன் எழுந்து வெகு பூசை செய்து
கயிறும் எடுத்து வருமுன்... **அரோகரா!**
வேலும் பிடித்து அடியார் தமக்கு
வீராதி வீரருடனே... **அரோகரா!**
சாலப் பரிந்து மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (06)**

தலைகட்ட நூலின் நிழல்போல நின்று
தடுமாறி நொந்து அடியேன்... **அரோகரா!**
நிலைகெட்டு யானும் புவிமீதில் நின்று
நெடுமூச் செறிய விதியோ... **அரோகரா!**
அலைதொட்ட செங்கை வடிவேற் கடம்பா
அடியேனை ஆளு முருகா... **அரோகரா!**
மலையேறி மேவு மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (07)**

வண்டுண்டு பூவில் மதுவூரில் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்... **அரோகரா!**
கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல்
கடனென்று கேட்க விதியோ?... **அரோகரா!**
வண்டூறு பூவில் இதழ் மேவும் வள்ளி
தெய்வானைக்குகந்த வேலா... **அரோகரா!**
நன்றென்று சொல்லி மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (08)**

விட தூதரோடி வரும்போது உம்மை
வெகுவாக நம்பினேனே... **அரோகரா!**
குறமாது வள்ளி இடமாக வைத்து
மயிலேறி வந்த குமரா... **அரோகரா!**
திடமாகச் சோலை மலைமீதில் வாழும்
திருமால் தமக்கு மருகா... **அரோகரா!**
வடமான பழநி வடிவேல் நாதா
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (09)**

ஓங்கார சக்தி உமைபால் குடித்து
உபதேசம் உரைத்த பரனே... **அரோகரா!**
பூங்கா வனத்தில் இதழ்மேவும் வள்ளி
புஜமீது இருந்த குகனே... **அரோகரா!**
ஆங்கார சூரர் படைவீடு சோர
வடிவேல் விடுத்த பூபா... **அரோகரா!**
பாங்கான வெற்றி மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (10)**

ஆறாறு மாறு வயதான போது
அடியேன் நினைத்த படியால்... **அரோகரா!**
வேறேது சிந்தை நினையாமல் உந்தன்
ஆசார சங்கம் அருள்வாய்... **அரோகரா!**

Neelan Jirantha Kuramaathu Valli
Nin Paagam Vaittha Kumaraa... **Aroagaraa!**
Kaalan Ezhunthu Vegu Poosai Seithu
Kayirum Edutthu Varumun... **Aroagaraa!**
Vaelum Piditthu Adiyaar Thamakku
Veeraathi Veerarudanae... **Aroagaraa!**
Saalap Parinthu Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (06)**

Thalaikatta Noolin Nizhalpoala Nindru
Thadumaari Nonthu Adiyaen... **Aroagaraa!**
Nilaikettu Yaanum Puvimeethil Nindru
Nedumooch Cheriya Vithiyoa... **Aroagaraa!**
Alaithotta Sengai Vadivaerk Kadambaa
Adiyaenai Aalu Murugaa... **Aroagaraa!**
Malaiyaeri Maevu Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (07)**

Vandundu Poovil Mathuvooril Paayum
Vayalooril Sengai Vadivael... **Aroagaraa!**
Kandondru Sollith Thirivaargal Vaasal
Kadanendru Kaetka Vithiyoa?... **Aroagaraa!**
Vandooru Poovil Ithazh Maevum Valli
Theivaanaikkugantha Vaelaa... **Aroagaraa!**
Nandrendru Solli Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (08)**

Vida Thootharoadi Varumpoathu Ummai
Veguvaaga Nambinaenae... **Aroagaraa!**
Kuramaathu Valli Idamaaga Vaitthu
Mayilaeri Vantha Kumaraa... **Aroagaraa!**
Thidamaagach Choalai Malaimeethil Vaazhum
Thirumaal Thamakku Marugaa... **Aroagaraa!**
Vadamaana Pazhani Vadivael Naathaa
Varavaenum Endranarugae... **Aroagaraa! (09)**

Oangaara Sakthi Umaipaal Kuditthu
Ubathaesam Uraittha Paranae... **Aroagaraa!**
Poongaa Vanatthil Ithazhmaevum Valli
Pujameethu Iruntha Guhanae... **Aroagaraa!**
Aangaara Soorar Padaiveedu Soara
Vadivael Viduttha Poobhaa... **Aroagaraa!**
Paangaana Vettri Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (10)**

Aaraaru Maaru Vayathaana Poathu
Adiyaen Ninaittha Padiyaal... **Aroagaraa!**
Vaeraethu Sinthai Ninaiyaamal Unthan
Aasaara Sangam Arulvaai... **Aroagaraa!**

அசுரேசர் போல யமதூதர் என்னைத்
தொட்டோட கட்ட வருமுன்... **அரோகரா!**
மாறாது தோகை மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (11)**

கையார உன்னைத் தொழுதேத்த மனது
கபடேது சற்றுமறியேன்... **அரோகரா!**
அய்யா உனக்கு ஆளாகும் போது
அடியார் தமக்கும் எளியேன்... **அரோகரா!**
பொய்யான காயம் அறவே ஒடுங்க
உயிர்கொண்டு போக வருமுன்... **அரோகரா!**
வையாளியாக மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (12)**

ஏதேது ஜென்மம் எடுத்தேனோ முந்தி
இந்தப் பிறப்பில் அறியேன்... **அரோகரா!**
மாதா பிதா நீ மாயன் தனக்கு
மருகா குறத்தி கணவா... **அரோகரா!**
காதோடு கண்ணை இருளாக மூடி
உயிர்கொண்டு போக வருமுன்... **அரோகரா!**
வாதாடி நின்று மயில் மீதிலேறி
வரவேணும் என்றனருகே... **அரோகரா! (13)**

Asuraesar Poala Yamathoothar Ennaith
Thottoada Katta Varumun... **Aroagaraa!**
Maaraathu Thoagai Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (11)**

Kaiyaara Unnaith Thozhuthaettha Manathu
Kabadaethu Sattrumariyen... **Aroagaraa!**
Aiyaa Unakku Aalaagum Poathu
Adiyaar Thamakkum Eliyaen... **Aroagaraa!**
Poiyaana Kaayam Aravae Odunga
Uyirkondu Poaga Varumun... **Aroagaraa!**
Vaiyaaliyaaga Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (12)**

Aethaethu Jenmam Edutthaenoa Munthi
Inthap Pirappil Ariyaen... **Aroagaraa!**
Maathaa Pithaa Nee Maayan Thanakku
Marugaa Kuratthi Kanavaa... **Aroagaraa!**
Kaathoadu Kannai Irulaaga Moodi
Uyirkondu Poaga Varumun... **Aroagaraa!**
Vaathaadi Nindru Mayil Meethilaeri
Varavaenum Endranarugae... **Aroagaraa! (13)**

---

YouTube Id: RwFEFq3jazs

## Oyilaattam Mayilaattam

**கந்தனுக்கும் வேல் வேல்**
**முருகனுக்கும் வேல் வேல்!**
**(கந்தனுக்கும்)**
பச்சைமயில் வாகனம்
பச்சைவள்ளி மோகனம்
கச்சை கட்டி ஆடுங்கடி ஒயிலாட்டம்
கால்மாறி ஆடுங்கடி மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
தேவயானை கண்ணரசி
தேவேந்திரன் பெண்ணரசி
பூ மகளின் மருமகளே ஒயிலாட்டம்
புண்ணியத் தவசீலன் மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
பச்சமலை பவளமலை
இச்சைமலை பழநிமலை
இன்பமலை எமது நிலை ஒயிலாட்டம்
ஏகபோக தரிசனமாம் மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
தங்கப்புள்ளி அங்கமது
தாவித்தாவி ஆடுமது
எங்களது முருகனுக்கு ஒயிலாட்டம்
எல்லையற்ற பேரழகே மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**

**Kanthanukkum Vael Vael**
**Muruganukkum Vael Vael!**
**(Kanthanukkum)**
Pacchaimayil Vaaganam
Pacchaivalli Moaganam
Kacchai Katti Aadungadi Oyilaattam
Kaalmaari Aadungadi Mayilaattam!
**(Kanthanukkum)**
Thaevayaanai Kannarasi
Thaevaenthiran Pennarasi
Poo Magalin Marumagalae Oyilaattam
Punniyath Thavaseelan Mayilaattam!
**(Kanthanukkum)**
Pacchaimalai Pavalamalai
Icchaimalai Pazhanimalai
Inbamalai Emathu Nilai Oyilaattam
Aegaboaga Tharisanamaam Mayilaattam!
**(Kanthanukkum)**
Thangappulli Angamathu
Thaavitthaavi Aadumathu
Engalathu Muruganukku Oyilaattam
Ellaiyattra Paerazhagae Mayilaattam!
**(Kanthanukkum)**

கொண்டை குலுங்குதடி
கூவியே ஆடுதடி
மண்டலமே மயங்குதடி ஒயிலாட்டம்
மாலவனும் மயங்குகிற மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
முத்துநகை மோகநகை
பித்துநகை பெரியநகை
சித்துகளாம் செந்திலவன் ஒயிலாட்டம்
சிங்கார வேலனுக்கு மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
குலுங்கிச் சிரிக்குமிந்தக்
குழந்தை ஏறி நின்று
அலுங்காமல் ஆடுதய்யா ஒயிலாட்டம்
ஆனந்தக் காட்சியம்மா மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
சலங்கை குலுங்குதம்மா
சங்கீதம் பாடுதம்மா
நலுங்காய் ஒலிக்குதம்மா ஒயிலாட்டம்
நாயகனின் பேரருளே மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
உடம்புக்கள் ஆடுவதும்
உயிராகக் கூடுவதும்
கடம்பனின் பேரருளே ஒயிலாட்டம்
கந்தனின் பேரழகே மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
விராலிமலை பழநிமலை
விரும்புகின்ற ஆறுபடை
வெற்றியுடன் ஆடுகின்ற ஒயிலாட்டம்
வேண்டும்வரம் தந்திடுமே மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
பன்னீர் மணக்குதய்யா
கண்ணீர் பெருகுதய்யா
எந்நேரம் நீவருவாய் ஒயிலாட்டம்
எல்லையிலாப் பேரழகே மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
சிந்துகளோ செந்தூரோ
முந்துங்களே பக்தர்களே
வந்துவந்து ஆடுகின்றான் ஒயிலாட்டம்
வரம்தரவே கூடுகின்றான் மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**
தந்தனத்தான் பாடுகின்றான்
தாளமிட்டுக் கூடுகிறான்
கந்தனவன் ஆடுகின்றான் ஒயிலாட்டம்
கற்பனையைப் பாடுங்களே மயிலாட்டம்!
**(கந்தனுக்கும்)**

Kondai Kulunguthadi
Kooviyae Aaduthadi
Mandalamae Mayanguthadi Oyilaattam
Maalavanum Mayangukira Mayilaattam!
**(Kanthanukkum)**
Mutthunagai Moaganagai
Pitthunagai Periyanagai
Sitthugalaam Senthilavan Oyilaattam
Singaara Vaelanukku Mayilaattam!
**(Kanthanukkum)**
Kulungi Chirikkuminthak
Kuzhanthai Aeri Nindru
Alungaamal Aaduthaiyaa Oyilaattam
Aananthak Kaatchiyammaa Mayilaattam!
**(Kanthanukkum)**
Salangai Kulunguthammaa
Sangeetham Paaduthammaa
Nalungaai Olikkuthammaa Oyilaattam
Naayaganin Paerarulae Mayilaattam!
**(Kanthanukkum)**
Udambukkal Aaduvathum
Uyiraagak Kooduvathum
Kadambanin Paerarulae Oyilaattam
Kanthanin Paerazhagae Mayilaattam!
**(Kanthanukkum)**
Viraalimalai Pazhanimalai
Virumbugindra Aarupadai
Vettriyudan Aadugindra Oyilaattam
Vaendumvaram Thanthidumae Mayilaattam!
**(Kanthanukkum)**
Panneer Manakkuthaiyaa
Kanneer Peruguthaiyaa
Ennaeram Nee Varuvaai Oyilaattam
Ellaiyilaap Paerazhagae Mayilaattam!
**(Kanthanukkum)**
Sinthugaloa Senthooroa
Munthungalae Bakthargalae
Vanthuvanthu Aadugindraan Oyilaattam
Varamtharavae Koodugindraan Mayilaattam!
**(Kanthanukkum)**
Thanthanatthaan Paadugindraan
Thaalamittuk Koodugiraan
Kanthanavan Aadugindraan Oyilaattam
Karpanaiyaip Paadungalae Mayilaattam!
**(Kanthanukkum)**

# Murugan



## பச்சை மயில் சீனி வைத்து

பச்சை மயில் சீனி வைத்து
பாலர் இங்கே வாராரிப்போ
வெள்ளி மயில் சீனி வைத்து
வேலர் இங்கே வாராரிப்போ
தங்க மயில் சீனி வைத்து
சுவாமி இங்கே வாராரிப்போ
முத்து மயில் சீனி வைத்து
முருகர் இங்கே வாராரிப்போ
கல்லும் கரடும் கடம்பன் காவல்
முள்ளும் முரடும் முருகன் காவல்
காவடிக்குள்ளே கலந்து வாரார்
பன்னாங்குக்குள்ளே பதுங்கி வாரார்
மயிலுக்குள்ளே மறைந்து வாரார்
குஞ்சத்துக்குள்ளே குலுங்கி வாரார்
செம்புக்குள்ளே சிரித்து வாரார்
அதோ வாரார் இதோ வாரார்
அங்கே வாரார் இங்கே வாரார்
அந்தா வாரார் இந்தா வாரார்
அந்தாத் தெரியுது இந்தாத் தெரியுது
அங்கே தெரியுது இங்கே தெரியுது
அப்போ வந்திட்டார் இப்போ வந்திட்டார்
அந்தா வந்திட்டார் இந்தா வந்திட்டார்
வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
கந்தனுண்டு கவலையில்லை
வள்ளியுண்டு மயக்கமில்லை
ஆண்டியுண்டு அச்சமில்லை!

## Pacchai Mayil Cheeni Vaitthu

Pacchai Mayil **Cheeni Vaitthu**
Baalar Ingae **Vaaraarippoa**
Velli Mayil **Cheeni Vaitthu**
Vaelar Ingae **Vaaraarippoa**
Thanga Mayil **Cheeni Vaitthu**
Swaami Ingae **Vaaraarippoa**
Mutthu Mayil **Cheeni Vaitthu**
Murugar Ingae **Vaaraarippoa**
Kallum Karadum **Kadamban Kaaval**
Mullum Muradum **Murugan Kaaval**
Kaavadikkullae **Kalanthu Vaaraar**
Pannaangukkullae **Pathungi Vaaraar**
Mayilukkullae **Marainthu Vaaraar**
Kunjatthukkullae **Kulungi Vaaraar**
Sembukkullae **Siritthu Vaaraar**
Athoa Vaaraar **Ithoa Vaaraar**
Angae Vaaraar **Ingae Vaaraar**
Anthaa Vaaraar **Inthaa Vaaraar**
Anthaath Theriyuthu **Inthaath Theriyuthu**
Angae Theriyuthu **Ingae Theriyuthu**
Appoa Vanthittaar **Ippoa Vanthittaar**
Anthaa Vanthittaar **Inthaa Vanthittaar**
Vaelundu **Vinaiyillai**
Mayilundu **Bayamillai**
Kanthanundu **Kavalaiyillai**
Valliyundu **Mayakkamillai**
Aandiyundu **Acchamillai!**

---

## வேலாட மயிலாட

வேலாட மயிலாட வேலாட மயிலாட
வினை போக்கி எமையாள வருக - முருகா
விதி மாற்றி புது வாழ்வு தருக!

சிறியேனும் உன் பிள்ளை
உன் வீட்டின் கொடிமுல்லை
அடியேனுக்கருள் காட்சி தருக - முருகா
அயில் வேலும் மயிலோடு வருக!

விடி காலை ஜெப வேளை
வடிவேலைத் தொழும் வேளை
மடிநீக்கி மனதாள வருக - முருகா
அயில் வேலும் மயிலோடு வருக!

உலகாளும் தலைவா நீ
உனதாட்சி தனிமாட்சி
தேவானை குறமாதும் கூட - முருகா
திருக்காட்சி தரவேணும் பாட!

## Vaelaada Mayilaada

Vaelaada Mayilaada Vaelaada Mayilaada
Vinai Poakki Emaiyaala Varuga - Murugaa
Vithi Maattri Puthu Vaazhvu Tharuga!

Siriyaenum Un Pillai
Un Veettin Kodimullai
Adiyaenukkarul Kaatchi Tharuga - Murugaa
Ayil Vaelum Mayiloadu Varuga!

Vidi Kaalai Jeba Vaelai
Vadivaelaith Thozhum Vaelai
Madineekki Manathaala Varuga - Murugaa
Ayil Vaelum Mayiloadu Varuga!

Ulagaalum Thalaivaa Nee
Unathaatchi Thanimaatchi
Thaevaanai Kuramaathum Kooda - Murugaa
Thirukkaatchi Tharavaenum Paada!

திருச்செந்தூர் பரங்குன்றம்
தென்பழனி சோலைமலை
திருத்தணிகை சுவாமிமலை குருவே - முருகா
செவ்வேளே சிங்கார உருவே!

மங்காத ஒளிவீசும்
மதிபோலும் முகமானாய்
எங்கேனும் நின்போன்ற காட்சி - முருகா
இனிமேலும் அமையாதே மாட்சி!

இடரேதும் வாராது என நீயும் கூறாது
இனிமேலும் விடமாட்டேன் உனையே - முருகா
இனிநானும் போவதெங்கே தனியே! **(வேலாட)**

Thiruchchenthoor Parangundram
Then Pazhani Soalaimalai
Thirutthanigai Swaamimalai Guruvae - Murugaa
Sevvaelae Singaara Uruvae!

Mangaatha Oliveesum
Mathipoalum Mugamaanaai
Engaenum Ninpoandra Kaatchi - Murugaa
Inimaelum Amaiyaathae Maatchi!

Idaraethum Vaaraathu Ena Neeyum Kooraathu
Inimaelum Vidamaattaen Unaiyae - Murugaa
Ini Naanum Poavathengae Thaniyae! **(Vaelaada)**

---

YouTube Id: oW77VdFMWuE

## Sutta Thiru Neereduthu

சுட்ட திரு நீறெடுத்துத்
தொட்ட கையில் வேலெடுத்துத்
தோகை மயில் மீதமர்ந்த சுந்தரம்...
அந்தக் கட்டழகு கொண்டதொரு
கந்தவடி வேலவனை
சாற்றுவது ஆறெழுத்து மந்திரம்!

ஆறெழுத்து மந்திரத்தைத்
தந்ததொரு சுந்தரத்தை
அந்திப்பகல் சிந்தனைசெய் நெஞ்சமே...
அந்த ஆறெழுத்து மந்திரத்தை
யாரெடுத்து ஓதினாலும்
ஆறுமுகம் வந்து நிற்கும் முன்னமே!

கந்தனது வேலெடுத்துக்
காவடிகள் தோளெடுத்துக்
கால் நடையாய் வந்து சேரும் கூட்டமே...
அந்தத் தோளெடுத்துக் காவடிகள்
தோகைமயில் வாகனனைச்
சேவடிகள் தேடிவரும் நாட்டமே!

பக்கமிரு மாதிருக்கச்
சொக்கத்தங்க வேலெடுத்துப்
பச்சைமயில் உச்சிவரும் வேலனே...
உந்தன் பஞ்சடியை நெஞ்சிருத்திப்
பால்குடத்தைத் தோளெடுத்தால்
அஞ்சி மிகக் கெஞ்சிடுவான் காலனே!

மாது குறவள்ளியுடன்
வண்ணமயில் ஏறிவரும்
நீதிபதி ஆனவனே சண்முகம்...
அந்த நீதியிலே நானும் ஒரு
பாதி எனச் சேர்ந்திருக்கும்
சேதி சொல்ல வேணுமய்யா சண்முகம்!
**(சேதி சொல்ல 2 முறை)**

Sutta Thiru Neereduthuth
Thotta Kaiyil Vaeleduthuth
Thoagai Mayil Meethamarntha Suntharam...
Andhak Kattazhagu Kondathoru
Kanthavadi Vaelavanai
Saattruvathu Aarezhutthu Manthiram!

Aarezhutthu Manthiratthaith
Thanthathoru Suntharatthai
Anthippagal Sindhanai Sei Nenjamae...
Antha Aarezhutthu Manthiratthai
Yaaredutthu Oathinaalum
Aarumugam Vanthu Nirkkum Munnamae!

Kanthanathu Vaeledutthuk
Kaavadigal Thoaledutthuk
Kaal Nadaiyaai Vanthu Saerum Koottamae...
Anthath Thoaleduthuk Kaavadigal
Thoagaimayil Vaagananaich
Chaevadigal Thaedivarum Naattamae!

Pakkamiru Maathirukkach
Chokkatthanga Vaeledutthup
Pacchaimayil Ucchivarum Vaelanae...
Unthan Panjadiyai Nenjirutthi
Paalkudatthai Thoaledutthaal
Anji Migak Kenjiduvaan Kaalanae!

Maathu Kura Valliyudan
Vannamayil Aerivarum
Neethipathi Aanavanae Shanmugam...
Antha Neethiyilae Naanum Oru
Paathi Enach Chaernthirukkum
Saethi Solla Vaenumaiyaa Shanmugam!
**(Saethi Solla 2 Times)**

# Murugan



YouTube Id: 362rrM1svpA

## Pacchai Mayil Vaagananae

**பச்சை மயில் வாகனனே - சிவ**
**பாலசுப்ர மணியனே வா! (பச்சை மயில்)**
**என் இச்சையெல்லாம்**
**உன் மேலே வைத்தேன்**
**இனி எள்ளளவும் பயமில்லையே!**
**(என் இச்சையெல்லாம்)**

கொச்சை மொழியானாலும் - உன்னைக்
கொஞ்சிக் கொஞ்சிப் பாடிடுவேன் - என்
சர்ச்சை எல்லாம் அழிந்ததப்பா - எங்கும்
சாந்தம் நிறைந்ததப்பா!

தங்கத் தேரில் நீ வந்தால் - உன்
பக்கத்திலே நான் வருவேன் - கொஞ்சம்
பஞ்சாமிருதம் உனக்குத் தந்தால்
திருவாய் திறக்கணுமே!

வெள்ளம் அது பள்ளந்தனிலே - பாயும்
தண்ணி போல் உள்ளந்தனிலே - நீ
மெல்ல மெல்லப் புகுந்து விட்டாய் - எந்தன்
கள்ளமெல்லாம் கரைந்ததப்பா!

ஆறு படை வீடுடையவா - எனக்கு
ஆறுதலைத் தரும் தேவா - நீ
ஏறு மயில் ஏறி வருவாய் - அப்பா
எங்கும் நிறைந்தவனே!

அலை கடல் ஓரத்திலே - எங்கள்
அன்பான சண்முகனே - நீ
அலையலையாய் மனம் காப்பாய் - உனக்கு
அனந்த கோடி நமஸ்காரம்!

பழனிமலைத் தேவனே வா - எங்கள்
தண்டாயுத பாணியே வா!
அழகான உன்னைப் பார்த்தால்
நல்லதெல்லாம் தொடருத்தப்பா!
**(பச்சை மயில்)**

**Pacchai Mayil Vaaganane – Siva**
**Baalasubra Maniyanae Vaa (Pacchai Mayil)**
**En Icchaiyellaam**
**Un Maele Vaitthaen**
**Ini Ellalavum Bayamillaiyae!**
**(En Icchaiyellaam)**

Kocchai Mozhi Aanaalum – Unnaik
Konjik Konjip Paadiduvaen – En
Sarchai Ellaam Azhinthathappaa – Engum
Saantham Nirainthathappaa!

Thangath Thaeril Nee Vanthaal – Un
Pakkatthilae Naan Varuvaen – Konjam
Panjaamirutham Unakkuth Thanthaal
Thiruvaai Thirakkanumae!

Vellam Athu Pallanthanilae – Paayum
Thanni Poal Ullanthanilae – Nee
Mella Mellap Puguntha Vittaai – Enthan
Kallamellaam Karainthathappaa!

Aaru Padai Veedudaiyavaa – Enakku
Aaruthalaith Tharum Thaeva – Nee
Aeru Mayil Aeri Varuvaai – Appaa
Engum Nirainthavanae!

Alai Kadal Oaratthilae – Engal
Anbaana Shanmuganae – Nee
Alaiyalaiyaai Manam Kaappaai – Unakku
Anantha Koadi Namaskaaram!

Pazhanimalai Thevanae Vaa – Engal
Thandaayutha Paaniyae Vaa!
Azhagaana Unnaip Paartthaal
Nallathellaam Thodaruthappaa!
**(Pacchai Mayil)**

YouTube Id: KvuyqDSlzSM

## Mutthaana Muthukkumaraa

முத்தான முத்துக்குமரா
முருகையா வா வா
சித்தாடும் செல்வக்குமரா
சிந்தை மகிழ வா வா
வள்ளி மணாளா வடிவேல் அழகா
வேலைய்யா வா வா
கந்தா கடம்பா கதிர் வடிவேலா
கந்தையா வா வா!

Mutthaana Muthukkumaraa
Murugaiyaa Vaa Vaa
Sitthaadum Selvakkumaraa
Sinthai Magizha Vaa Vaa
Valli Manaalaa Vadivael Azhagaa
Vaelaiyaa Vaa Vaa
Kanthaa Kadambaa Kathir Vadivaelaa
Kanthaiyaa Vaa Vaa!

# Murugan



நீ ஆடும் அழகைக் கண்டு
வேலாடி வருகுதைய்யா
வேலாடும் அழகைக் கண்டு
மயிலாடி வருகுதய்யா
மயிலாடும் அழகைக் கண்டு
மனமாடி வருகுதையா
மனமாடும் அழகைக் கண்டு
மக்கள் கூட்டம் பெருகுதையா!

Nee Aadum Azhagaik Kandu
Vaelaadi Varuguthaiyaa
Vaelaadum Azhagaik Kandu
Mayilaadi Varuguthaiyaa
Mayilaadum Azhagaik Kandu
Manamaadi Varuguthaiyaa
Manamaadum Azhagaik Kandu
Makkal Koottam Peruguthaiya!

பன்னீரால் குளிக்க வைத்து
பட்டாடை உடுக்க வைத்து
சந்தனத்தால் சாந்தெடுத்து
அங்கமெல்லாம் பூசி வைத்து
நீற்பூசி திலகம் வைத்து
நெஞ்சத்தில் உன்னை வைத்து
அன்று பூத்த மலரால் உன்னை
அர்ச்சிப்பேன் வருவாயப்பா!

Panneeraal Kulikka Vaitthu
Pattaadai Udukka Vaitthu
Santhanatthaal Chaanthedutthu
Angamellaam Poosi Vaitthu
Neerppoosi Thilagam Vaitthu
Nenjatthil Unnai Vaitthu
Andru Poottha Malaraal Unnai
Arcchippaen Varuvaayappaa!

---

**YouTube Id: SX0phg9bua8** **Kanthar Sashti Kavasam**

***"Kanthar Sashti Kavasam" is a Tamil devotional song, sung in praise of Lord Murugaa, also known as Kanthaa, describing his glory and asking for his blessings.*** *The song was composed by Devaraya Swamigal in the 19th century. The song consists of a total of 244 lines, including four introductory lines known as the "Kaappu", followed by a couple of meditational lines called "Kural Venbaa", and the main song portion consisting of 238 lines known as the "Kavasam". The songs sung with the words "Kaakka" are called "Kavasam". These songs request the god to protect those who sings.*

*The song is typically recited during Kanthar Sashti, a six-day festival celebrated in Oct-Nov. Sashti is the day that Murugan defeated the asura Soorapathman. When the devas could not tolerate the evil doings of this asura, they approached the younger son of Shiva and Paarvathi for his assistance. Murugan fought Soorapathman for six days, at the end of which the deity vanquished the asura. He threw his weapon at him and split Soorapathman into two halves. One half became a peacock, which he took as his vaahana (vehicle). The other became a rooster, which was transformed into his flag banner. The devas rejoiced - they praised the deity and prayed to him for six days. Devotees usually narrate the Kantha Sashti Kavasam during this period. The Kavasam is equivalent to Lord Murugan's Vael, if recited and used as a path, it will confer great spiritual blessings on the aspirant.*

**காப்பு**
துதிப்போர்க்கு
வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும்
நிமலரருள் கந்தர் சஷ்டி கவசம்தனை!

**Kaappu**
Thuthippoarkku
Valvinaipoam Thunbampoam
Nenjil Pathippoarkkuch Chelvam Palitthuk
Kathitthoangum Nishtaiyum Kaikoodum
Nimalararul Kanthar Sashti Kavasamthanai!

**குறள் வெண்பா**
அமரர் இடர் தீர சமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி!

**Kural Venbaa**
Amarar Idar Theera Samaram Purintha
Kumaranadi Nenjae Kuri!

# Murugan



**கவசம்**
சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட **(004)**

மையல் நடனஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக **(008)**

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக **(012)**

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக **(016)**

ரஹண பவச ரர ரர ரரர
ரிஹண பவச ரிரி ரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென **(020)**

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும் **(024)**

பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும் **(028)**

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலை பெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன் தினம் வருக **(032)**

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும் **(036)**

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும் **(040)**

**Kavasam**
Sashtiyai Noakkach Charavana Bhavanaar
Sishtaruk Kuthavum Sengathir Vaeloan
Paatham Irandil Panmanich Chathangai
Geetham Paadak Kinkiniyaada **(004)**

Maiyal Nadanjeiyum Mayil Vaagananaar
Kaiyil Vaelaal Enaik Kaakkavendru Vanthu
Varavara Vaelaayuthanaar Varuga
Varuga Varuga Mayiloan Varuga **(008)**

Inthiran Muthalaa Endisai Poattra
Manthira Vadivael Varuga Varuga
Vaasavan Marugaa Varuga Varuga
Naesak Kuramagal Ninaivoan Varuga **(012)**

Aarumugam Padaittha Aiyaa Varuga
Neeridum Vaelavan Nittham Varuga
Siragiri Vaelavan Seekkiram Varuga
Saravana Bhavanaar Saduthiyil Varuga **(016)**

Rahana Bhavasa Rara Rara Rarara
Rihana Bhavasa Riri Riri Ririri
Vinabhava Sarahana Veeraa Namoanama
Nibhava Sarahana Nira Nira Nirena **(020)**

Vasara Hanabha Varuga Varuga
Asurar Kudikeduttha Aiyaa Varuga
Ennai Aalum Ilaiyoan Kaiyil
Pannirandaayutham Paasaangusamum **(024)**

Parantha Vizhigal Pannirandilanga
Virainthenaik Kaakka Vaeloan Varuga
Aiyum Kiliyum Adaivudan Sowvum
Uyyoli Sowvum Uyiraiyum Kiliyum **(028)**

Kiliyun Jowvum Kilaroli Yaiyum
Nilai Pettrenmun Nitthamum Olirum
Shanmugan Neeyum Thaniyoli Yovvum
Kundaliyaam Siva Guhan Thinam Varuga **(032)**

Aaru Mugamum Animudi Aarum
Neeridu Nettriyil Neenda Puruvamum
Panniru Kannum Pavalach Chevvaayum
Nanneri Nettriyil Navamanich Chuttiyum **(036)**

Eeraaru Seviyil Ilagu Kundalamum
Aariru Thinpuyath Thazhagiya Maarbil
Pal Bhooshanamum Pathakkamum Tharitthu
Nanmani Poonda Navarathna Maalaiyum **(040)**

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திரு வயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும் **(044)**

இரு தொடையழகும் இணை முழந்தாளும்
திரு வடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக
மொகமொக மொகன **(048)**

நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி **(052)**

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து **(056)**

என்றனை யாளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று **(060)**

உன் திருவடியை உறுதி என்றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க **(064)**

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழி செவி இரண்டும் வேலவர் காக்க **(068)**

நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திரு பல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க **(072)**

கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க **(076)**

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க **(080)**

Muppuri Noolum Mutthani Maarbum
Seppazhagudaiya Thiru Vayirunthiyum
Thuvanda Marungil Sudaroli Pattum
Navaratthinam Pathittha Narcheeraavum **(044)**

Iru Thodaiyazhagum Inai Muzhanthaalum
Thiru Vadiyathanil Silamboli Muzhanga
Sehagana Sehagana Sehagana Segana
Mogamoga Mogamoga
Mogamoga Mogana **(048)**

Nahanaha Nahanaha Nahanaha Nahana
Digukuna Digudigu Digukuna Diguna
Rararara Rararara Rararara Rarara
Riririri Riririri Riririri Ririri **(052)**

Dudududu Dudududu Dudududu, Dududu
Dagudagu Digudigu Dangu Dingugu
Vinthu Vinthu Mayiloan Vinthu
Munthu Munthu Murugavael Munthu **(056)**

Yendranai Yaalum Aeragach Chelvaa
Mainthan Vaendum Vara Magizhnthuthavum
Laalaa Laalaa Laalaa Vaesamum
Leelaa Leelaa Leelaa Vinoathanendru **(060)**

Un Thiruvadiyai Uruthi Endrennum
Enthalai Vaitthun Inaiyadi Kaakka
Ennuyirk Kuyiraam Iraivan Kaakka
Panniru Vizhiyaal Baalanaik Kaakka **(064)**

Adiyaen Vathanam Azhaguvael Kaakka
Podipunai Nettriyaip Punithavael Kaakka
Kathirvael Irandum Kanninaik Kaakka
Vizhi Sevi Irandum Vaelavar Kaakka **(068)**

Naasigal Irandum Nalvael Kaakka
Paesiya Vaaithanai Peruvael Kaakka
Muppatthiru Pal Munaivael Kaakka
Seppiya Naavaich Chevvael Kaakka **(072)**

Kannam Irandum Kathirvael Kaakka
Ennilam Kazhutthai Iniyavael Kaakka
Maarbai Rathna Vadivael Kaakka
Chaerila Mulaimaar Thiruvael Kaakka **(076)**

Vadivael Iruthoal Valamberak Kaakka
Pidarigal Irandum Peruvael Kaakka
Azhagudan Muthugai Arulvael Kaakka
Pazhu Pathinaarum Paruvael Kaakka **(080)**

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க **(084)**

பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க **(088)**

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க **(092)**

நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க **(096)**

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில்
அனையவேல் காக்க **(100)**

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க **(104)**

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள் **(108)**

அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும்
குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும் **(112)**

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும்
எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும்
காளியோடனைவரும் **(116)**

விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும் **(120)**

Vettrivael Vayittrai Vilangavae Kaakka
Sittridai Azhagurach Chevvael Kaakka
Naanaan Kayittrai Nalvael Kaakka
Aanpen Kurigalai Ayilvael Kaakka **(084)**

Pittamirandum Peruvael Kaakka
Vattak Kuthatthai Vadivael Kaakka
Panaitthodai Irandum Paruvael Kaakka
Kanaikkaal Muzhanthaal Kathirvael Kaakka **(088)**

Aiviral Adiyinai Arulvael Kaakka
Kaigal Irandum Karunaivael Kaakka
Munkai Irandum Muranvael Kaakka
Pinkai Irandum Pinnaval Irukka **(092)**

Naavil Saraswathi Nattrunaiyaaga
Naabik Kamalam Nalvael Kakka
Muppaal Naadiyai Munaivael Kaakka
Eppozhuthum Enai Ethirvael Kaakka **(096)**

Adiyaen Vasanam Asaivula Naeram
Kadugavae Vanthu Kanagavael Kaakka
Varumpagal Thannil Vacchiravael Kaakka
Araiyirul Thannil
Anaiyavael Kaakka **(100)**

Aematthil Saamatthil Ethirvael Kaakka
Thaamatham Neekkich Chathurvael Kaakka
Kaakka Kaakka Kanagavael Kaakka
Noakka Noakka Nodiyinil Noakka **(104)**

Thaakka Thaakka Thadaiyarath Thaakka
Paarkka Paarkka Paavam Podipada
Pilli Sooniyam Perumpagai Agala
Valla Bhootham Valaattigap Paeigal **(108)**

Allal Padutthum Adangaa Muniyum
Pillaigal Thinnum Puzhakkadai Muniyum
Kollivaaip Paeigalum
Kuralaip Paeigalum
Pengalaith Thodarum Brama Raatchatharum **(112)**

Adiyanaik Kandaal Alarik Kalangida
Irisi Kaattaeri Itthunba Senaiyum
Ellilum Iruttilum
Ethirppadum Annarum
Kanapoosai Kollum
Kaaliyoadanaivarum **(116)**

Vittaangaararum Migu Pala Paeigalum
Thandiyak Kaararum Sandaalargalum
En Peyar Sollavum Idi Vizhunthoadida
Aanai Adiyinil Arum Paavaigalum **(120)**

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும் **(124)**

ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால்
அலைந்து குலைந்திட **(128)**

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதி கெட்டோட **(132)**

படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு **(136)**

முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால் **(140)**

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெகுண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும் **(144)**

எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க **(148)**

ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயங்குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி **(152)**

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால் **(156)**

நில்லாதோட நீ எனக்கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும் **(160)**

Poonai Mayirum Pillaigal Enbum
Nagamum Mayirum Neelmudi Mandaiyum
Paavaigaludanae Pala Kalasatthudan
Manaiyir Puthaittha Vanjanai Thanaiyum **(124)**

Ottiya Serukkum Ottiya Paavaiyum
Kaasum Panamum Kaavudan Soarum
Oathu Manjanamum Oruvazhip Poakkum
Adiyanaik Kandaal
Alainthu Kulainthida **(128)**

Maattraar Vanjagar Vanthu Vanangida
Kaalathoothaal Enaik Kandaal Kalangida
Anji Nadungida Arandu Purandida
Vaai Vittalari Mathi Kettoada **(132)**

Padiyinil Mutta Paasak Kayittraal
Kattudan Angam Katharidak Kattu
Katti Uruttu Kaikaal Muriya
Kattu Kattu Katharidak Kattu **(136)**

Muttu Muttu Muzhigal Pithungida
Chekku Chekku Chethil Chethilaaga
Chokku Chokku Soorppagaich Chokku
Kutthu Kutthu Koorvadi Vaelaal **(140)**

Pattru Pattru Pagalavan Thanaleri
Thanaleri Thanaleri Thanalathuvaaga
Viduvidu Vaelai Vegundathu Oada
Puliyum Nariyum Punnari Naayum **(144)**

Eliyum Karadiyum Inith Thodarnthoada
Thaelum Paambum Seyyaan Pooraan
Kadivida Vishangal Kaditthuyarangam
Aeriya Vishangal Elithudan Iranga **(148)**

Olippum Chulukkum Oruthalai Noayum
Vaatham Sayitthiyam Valippup Pittham
Choolai Sayangunmam Chokkuch Chirangu
Kudaicchal Chilanthi Kudalvip Pirithi **(152)**

Pakkap Pilavai Padarthodai Vaazhai
Kaduvan Paduvan Kaitthaal Silanthi
Parkuth Tharanai Paru Araiyaappum
Ellaap Piniyum Endranaik Kandaal **(156)**

Nillaathoada Nee Enakkarulvaai
Eeraezhu Ulagamum Enakkuravaaga
Aanum Pennum Anaivarum Enakkaa
Mannaal Arasarum Magizhnthura Vaagavum **(160)**

# Murugan



உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே **(164)**

அரிதிரு மருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடும் சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை **(168)**

இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப்பதி வாழ் பால குமாரா **(172)**

ஆவினன்குடி வாழ் அழகிய வேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வராயா
சமராபுரி வாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய் **(176)**

என் நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும்
 எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன்
 ஆவினன் பூதியை **(180)**

நேசமுடன் யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி
 அன்னமும் சொன்னமும் **(184)**

மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க **(188)**

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க **(192)**

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே **(196)**

பிள்ளை என்றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மன மகிழ்ந்தருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய **(200)**

Unnaith Thuthikka Un Thirunaamam
Saravana Bhavanae Sailoli Bhavanae
Thiripura Bhavanae Thigazholi Bhavanae
Paripura Bhavanae Pavamoli Bhavanae **(164)**

Arithiru Marugaa Amaraapathiyaik
Kaathuth Thaevarkal Kadum Sirai Vidutthaai
Kanthaa Guganae Kathir Vaelavanae
Kaartthigai Mainthaa Kadambaa Kadambanai **(168)**

Idumbanai Azhittha Iniyavael Murugaa
Thanigaa Chalanae Sankaran Puthalvaa
Kathir Kaamatthurai Kathirvael Murugaa
Pazhanippathi Vaazh Baala Kumaaraa **(172)**

Aavinankudi Vaazh Azhagiya Vaela
Senthilmaa Malaiyurum Sengalvaraayaa
Samaraapuri Vaazh Shanmugattharasae
Kaaraar Kuzhalaal Kalaimagal Nandraai **(176)**

En Naa Irukka Yaanunaip Paada
Enaith Thodarnthirukkum
 Enthai Muruganaip
Paadinaen Aadinaen Paravasamaaga
Aadinaen Naadinaen
 Aavinan Poothiyai **(180)**

Naesamudan Yaan Nettriyil Aniya
Paasa Vinaigal Pattrathu Neengi
Un Patham Peravae Unnarulaaga
Anbudan Ratcchi
 Annamum Sonnamum **(184)**

Mettha Metthaaga Vaelaayuthanaar
Siddhi Pettradiyaen Sirappudan Vaazhga
Vaazhga Vaazhga Mayiloan Vaazhga
Vaazhga Vaazhga Vadivael Vaazhga **(188)**

Vaazhga Vaazhga Malaikkuru Vaazhga
Vaazhga Vaazhga Malaikkura Magaludan
Vaazhga Vaazhga Vaaranatthuvasam
Vaazhga Vaazhga En Varumaigal Neenga **(192)**

Etthanai Kuraigal Etthanai Pizhaigal
Etthanai Adiyaen Etthanai Seiyinum
Pettravan Nee Guru Poruppathu Un Kadan
Pettraval Kuramagal Pettravalaamae **(196)**

Pillai Endranbaaip Piriyam Alitthu
Mainthan Enmeethun Mana Magizhntharulith
Thanjam Endradiyaar Thazhaitthida Arul Sei
Kanthar Sashtik Kavasam Virumbiya **(200)**

# Murugan



பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக் **(204)**

கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஒதியே ஜெபித்து உகந்து நீறணிய **(208)**

அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்னரெண்மர் செயலாது அருளுவர்
மாற்றவரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து
நன்மை அளித்திடும் **(212)**

நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும் **(216)**

விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி **(220)**

அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துணவாகச்
சூர பத்மாவைத் துணித்தகை அதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்தமு தளித்த **(224)**

குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாட்கொள என்றெனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி! **(228)**

தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பாயுதனே இடும்பா போற்றி! **(232)**

கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்! **(236)**

சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்! **(238)**

Baalan Thaeva Raayan Pagarnthathaik
Kaalaiyil Maalaiyil Karutthudan Naalum
Aachaaratthudan Angam Thulakki
Naesamudan Oru Ninaivathu Vaagik **(204)**

Kanthar Sashtik Kavasam Ithanaich
Chinthai Kalangaathu Thiyaanip Pavargal
Oru Naal Muppathaaruruk Kondu
Oathiyae Jebitthu Uganthu Neeraniya **(208)**

Ashta Thikkulloar Adangalum Vasamaaith
Thisai Mannarennmar Seyalaathu Arulvar
Maattravar Ellaam Vanthu Vananguvar
Navakoal Magizhnthu
Nanmai Alitthidum **(212)**

Navamathan Enavum Nallezhil Peruvar
Entha Naalum Eerettaai Vaazhvaar
Kantharkai Vaelaam Kavasath Thadiyai
Vazhiyaaik Kaana Meiyaai Vilangum **(216)**

Vizhiyaal Kaana Verundidum Paeigal
Pollaathavaraip Podip Podiyaakkum
Nalloar Ninaivil Nadanam Puriyum
Sarva Satthuru Sankaaratthadi **(220)**

Arinthena Thullam Ashta Lakshmigalil
Veera Lakshmikku Virunthunavaagach
Choora Bathmaavaith Thunitthagai Athanaal
Irubatthaezhvarkku Uvanthamu Thalittha **(224)**

Gurubaran Pazhanik Kundrinil Irukkum
Chinnak Kuzhanthai Saevadi Poattri!
Enaith Thadutthaatkola Endrenathullam
Maeviya Vadivurum Vaelava Poattri! **(228)**

Thaevargal Saenaa Pathiyae Poattri!
Kuramagal Manamagizh Koavae Poattri!
Thiramigu Thivviya Thaegaa Poattri!
Idumbaayuthanae Idumbaa Poattri! **(232)**

Kadambaa Poattri Kanthaa Poattri!
Vetchi Punaiyum Vaelae Poattri!
Uyargiri Kanaga Sabaikkoar Arasae!
Mayil Nadamiduvoai Malaradi Charanam! **(236)**

Charanam Charanam Saravanabhava Oam
Charanam Charanam Shanmugaa Charanam! **(238)**

# Murugan



YouTube Id: izGUz2g21II

## Padiyaerappaa Padiyaeru

**படியேறப்பா படியேறு**
**பழனி மலையதன் படியேறு**
**படிப்படியாக நீயேறு**
**பல படியாக முன்னேறு!**

ஒரு படியேறிட முருகனவன்
உயர்படியில் நமை ஏற்றிடுவான்
மறுபடி மறுபடி மலையேற
மலைக்கும் படி நமை மாற்றிடுவான்!

நித்தமுமே திருப் புகழைப்படி
நிலைத்த உறுதியைக் கொண்டபடி
உன்னத அடியார் சென்றபடி
உள்ளத்தில் முருகனை நினைத்தபடி!

அகத்தைக் கெடுக்கும் ஆசைப்படி
அதனை முதலில் வாழ்வில்படி
புகழைக் கொடுத்தே காக்கும்படி
புண்ணிய பழனியின் திருப்படி!

சர்க்கரைக் காவடி எடுத்தபடி
சண்முகன் திருவருள் தொழுதபடி
சந்ததி மறுபடி தழைக்கும்படி
சரவணன் பாடல்கள் தினமும்படி!

வேலனை நினைப்போர் எண்ணப்படி
வேண்டுவதெல்லாம் நல்லபடி
வாழ்வில் வசந்தம் வந்தபடி
பணிவும் பதவியும் வந்தபடி!

செய்யும் தொழில்கள் சிறக்கும்படி
சிந்தையில் முருகன் இருந்தபடி
தருவான் அருளை நல்லபடி
பெற்றே வாழ்வோம் சொல்லின்படி!

வள்ளியின் கணவன் அருளின்படி
வாடாமலர் பயிர் தழைக்கும்படி
அள்ளித் தந்திடும் வள்ளல்படி
அகிலமெலாம் அருள் பழனிப்படி!
**(படியேறப்பா)**

**Padiyaerappa Padiyaeru**
**Pazhani Malaiyathan Padiyaeru**
**Padippadiyaaga Neeyaeru**
**Pala Padiyaaga Munnaeru!**

Oru Padiyaerida Muruganavan
Uyarpadiyil Namai Aettriduvaan
Marubadi Marubadi Malaiyaera
Malaikkum Padi Namai Maattriduvaan!

Nitthamumae Thirup Pugazhaippadi
Nilaittha Urudhiyaik Kondapadi
Unnatha Adiyaar Sendrapadi
Ullatthil Muruganai Ninaitthapadi!

Agatthaik Kedukkum Aasaippadi
Athanai Muthalil Vaazhvilpadi
Pugazhaik Kodutthae Kaakkumpadi
Punniya Pazhaniyin Thiruppadi!

Sarkkaraik Kaavadi Edutthapadi
Shanmugan Thiruvarul Thozhuthapadi
Santhathi Marupadi Thazhaikkumpadi
Saravanan Paadalgal Thinamumpadi!

Vaelanai Ninaippoar Ennappadi
Vaenduvathellaam Nallapadi
Vaazhvil Vasantham Vanthapadi
Panivum Pathaviyum Vanthapadi!

Seiyum Thozhilgal Sirakkumpadi
Sinthaiyil Murugan Irunthapadi
Tharuvaan Arulai Nallapadi
Pettrae Vaazhvoam Sollinpadi!

Valliyin Kanavan Arulinpadi
Vaadaamalar Payir Thazhaikkumpadi
Allith Thanthidum Vallalpadi
Agilamelaam Arul Pazhanippadi!
**(Padiyaerappaa)**


Murugan

# Sivan


Sakthi

***Here are some holy celebrations of Lord Sivaa!***

***Mahaa Sivaraathri (Feb-Mar)*** *is celebrated in honor of lord Sivaa. The festival commemorates the wedding of Sivaa and Paarvathi, and the occasion that Sivaa performs his divine dance, called the Thaandavaa. It is observed by chanting prayers, fasting, and meditating on ethics and virtues such as honesty, non-injury to others, charity, forgiveness, and the discovery of Sivaa. Ardent devotees stay awake throughout this night.*

***Agni Nakshatthiram (May-Jun)*** *is observed for a period of 14 days starting from the 4th to the 29th of May. During this time, devotees perform the Girivalam of the holy hill Thiruvannaamalai. It is believed that the aroma of the medicinal herbs growing on the hill offers good health and peace of mind.*

---

## YouTube Id: bqKcRq5JqAY Kallaarkkum Kattravarkkum

***This is a song from Vallalaar Raamalinga Adigalaar's Thiru Arutpaa.*** *The composer presumes that lord Sivaa will confer his grace on all folks irrespective of the level or education they have or the lack of it thereby making everybody happy. He does not discriminate between people who have physical vision or the lack of it. He ensures both kinds of people get the wisdom they need. God serves as an equalizer between the groups. There are devotees who worship the lord and there are atheists who deny him. But god does not punish the atheists. The good and the bad get the same treatment in the eyes of the lord. He dances in his abode for the welfare of all.*

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும்
கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
மதி கொடுக்கும் மதியே!

நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நடுவில் நின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும்
நலம் கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில்
நடம் இடுகின்ற சிவமே!
என்னரசே! யான்புகலும்
இசையும் அணிந்து அருளே!

Kallaarkkum Kattravarkkum
Kalipparulum Kanippae!
Kaanaarkkum Kandavarkkum
Kannalikkum Kannae!
Vallaarkkum Maattaarkkum
Varamalikkum Varamae!
Mathiyaarkkum Mathippavarkkum
Mathi Kodukkum Mathiyae!

Nallaarkkum Pollaarkkum
Naduvil Nindra Naduvae!
Narargalukkum Surargalukkum
Nalam Kodukkum Nalame!
Ellaarkkum Pothuvil
Nadam Idugindra Sivamae!
Ennarasae! Yaan Pugalum
Isaiyum Aninthu Arulae!

---

## YouTube Id: 3G3e1UCK-5w Lingaashtakam

***"Linga Ashtakam" is a rhyme rich Sanskrit Sthothram, believed to be composed by Aathi Sankaraachaaryar.*** *It moves anyone with its rhythm and the appealing raagam in which it is set. One who chants this in the presence of a Sivalingam would reach the world of Sivaa when he breathes his final last. It bestows peace of mind, wards off negative energy, and keeps negative thoughts at bay. It will bless the devotee with good health, wisdom, and prosperity. It elevates your confidence levels, brings on a positive mindset, and enhances your willpower, and removes obstacles.*

# Sivan



ப்ரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(1)**

தேவ முராரி ப்ரவார்ச்சித லிங்கம்
காம தகன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(2)**

சர்வ சுகந்த சுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
சித்த சுராசுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(3)**

கனக மகாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ சுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(4)**

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார சுஷோபித லிங்கம்
சஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(5)**

தேவ கணார்ச்சித சேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(6)**

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
சர்வ சமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(7)**

சுரகுரு சுரவர பூஜித லிங்கம்
சுரவன புஷ்ப சதார்ச்சித லிங்கம்
பராத் பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்! **(8)**

**படிப்பதன் பயன்கள்**
லிங்காஷ்டக மிதம் புண்யம்
யஹ் படேத் சிவ சந்நிதௌ
சிவலோக மவாப்நோதி
சிவேந சஹ மோததே!

Bramma Muraari Suraarcchitha Lingam
Nirmala Bhaashitha Soabhitha Lingam
Janmaja Dhukka Vinaasaga Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(1)**

Thaeva Muraari Pravaarcchitha Lingam
Kaama Thagana Karunaakara Lingam
Raavana Tharppa Vinaasaga Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(2)**

Sarva Sugantha Sulaepitha Lingam
Buddhi Vivarthana Kaarana Lingam
Siddha Suraasura Vandhitha Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(3)**

Kanaga Mahaamani Bhooshitha Lingam
Panipathi Vaeshtitha Soabhitha Lingam
Dhaksha Suyagna Vinaasana Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(4)**

Kunguma Chanthana Laepitha Lingam
Pankaja Haara Sushoabitha Lingam
Sanchitha Paapa Vinaasana Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(5)**

Thaeva Ganaarcchita Saevitha Lingam
Bhaavaiyar Bakthi Praevasa Lingam
Thinakara Koadi Prabhaakara Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(6)**

Ashta Thaloapari Vaeshtitha Lingam
Sarva Samuthbhava Kaarana Lingam
Ashta Dharithra Vinaasana Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(7)**

Suraguru Suravara Poojitha Lingam
Suravana Pushpa Sathaarcchitha Lingam
Paraath Param Paramaathmaka Lingam
Thath Pranamaami Sathaasiva Lingam! **(8)**

**Benefits of Reading**
Lingaashtaka Mitham Punyam
Yah Pataeth Siva Sannithow
Sivaloaka Mavaapnoathi
Sivaena Saha Moathathae!


Murugan


Sakthi

# Sivan

## YouTube Id: GrhhJFOfaas Manthiramaavathu Neeru

***This song is from Gnaana Sambanthar's "Thaevaaram" called "Thiruneettrup Pathigam".*** *Pathigam means 10 stanzas + 1 stanza in the end that talks about the benefits of the song. Madurai was ruled by a king called Koon (Hunchback) Paandiyan, who was stricken by an illness that no medicine could cure. Sambanthar cured him of it, and his hunchback, by the use of sacred ash, whilst singing this song.*

**திருச்சிற்றம்பலம்!**
மந்திரமாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு
சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திரு ஆலவாயான் திருநீறே! **(01)**

வேதத்திலுள்ளது நீறு
வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு
புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு
உண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த
திரு ஆலவாயான் திருநீறே! **(02)**

முத்தி தருவது நீறு
முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு
தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு
பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு
திரு ஆலவாயான் திருநீறே! **(03)**

காண இனியது நீறு
கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கெல்லாம்
பெருமை கொடுப்பது நீறு
மாணந்தகைவது நீறு
மதியைத் தருவது நீறு
சேணந்தருவது நீறு
திரு ஆலவாயான் திருநீறே! **(04)**

பூச இனியது நீறு
புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு
பெரும் தவத்தோர்க்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு

**Thirucchittrambalam!**
Manthiramaavathu Neeru
Vaanavar Maelathu Neeru
Suntharamaavathu Neeru
Thuthikkap Paduvathu Neeru
Thanthiramaavathu Neeru
Samayatthilullathu Neeru
Senthuvar Vaayumai Pangan
Thiru Aalavaayan Thiruneerae! **(01)**

Vaethatthil Ullathu Neeru
Venthuyar Theerppathu Neeru
Poathantharuvathu Neeru
Punmai Thavirppathu Neeru
Oathath Thaguvathu Neeru
Unmayilullathu Neeru
Seethappunal Vayal Choozhntha
Thiru Aalavaayan Thiruneerae! **(02)**

Mutthi Tharuvathu Neeru
Munivaranivathu Neeru
Sathiyamaavathu Neeru
Thakkoar Pugazhvathu Neeru
Patthi Tharuvathu Neeru
Parava Iniyathu Neeru
Siddhi Tharuvathu Neeru
Thiru Aalavaayan Thiruneerae! **(03)**

Kaana Iniyathu Neeru
Kavinaith Tharuvathu Neeru
Paeni Anibavarkkellaam
Perumai Koduppathu Neeru
Maananthagaivathu Neeru
Mathiyaith Tharuvathu Neeru
Saenantharuvathu Neeru
Thiru Aalavaayan Thiruneerae! **(04)**

Poosa Iniyathu Neeru
Punniyamaavathu Neeru
Paesa Iniyathu Neeru
Perum Thavatthoarkkellaam
Aasai Keduppathu Neeru

அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு
திரு ஆலவாயான் திருநீறே! **(05)**

அருத்தமது ஆவது நீறு
அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு
வானம் அளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு
புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த
திரு ஆலவாயான் திருநீறே! **(06)**

எயிலது அட்டது நீறு
இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு
பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு
சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து
ஆலவாயான் திருநீறே! **(07)**

இராவணன் மேலது நீறு
எண்ணத் தகுவது நீறு
பராவணமாவது நீறு
பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு
தத்துவமாவது நீறு
அரா வணங்கும் திருமேனி
ஆலவாயான் திருநீறே! **(08)**

மாலொடு அயனறியாத
வண்ணமுமுள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள்
மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும்
இன்பந்தருவது நீறு
ஆலமது உண்டமிடற்றெம்
ஆலவாயான் திருநீறே! **(09)**

குண்டிகைக் கையர்களோடு
சாக்கியர் கூட்டமுங்கூட
கண்டி கைப்பிப்பது நீறு
கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார்
ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும்
ஆலவாயான் திருநீறே! **(10)**

Anthamathaavathu Neeru
Thaesam Pugazhvathu Neeru
Thiru Aalavaayaan Thiruneerae! **(05)**

Arutthamathu Aavathu Neeru
Avalam Aruppathu Neeru
Varuttham Thanippathu Neeru
Vaanam Alippathu Neeru
Porutthamathaavathu Neeru
Punniyar Poosum Venneeru
Thirutthagu Maaligai Choozhntha
Thiru Aalavaayaan Thiruneerae! **(06)**

Eyilathu Attathu Neeru
Irumaikkum Ullathu Neeru
Payilappaduvathu Neeru
Baakkiyamaavathu Neeru
Thuyilaith Thaduppathu Neeru
Sutthamathaavathu Neeru
Ayilaip Politharu Soolatthu
Aalavaayaan Thiruneerae! **(07)**

Raavanan Maelathu Neeru
Ennath Thaguvathu Neeru
Paraavanamaavathu Neeru
Paavam Aruppathu Neeru
Tharaavanamaavathu Neeru
Thatthuvamaavathu Neeru
Araa Vanangum Thirumaeni
Aalavaayaan Thiruneerae! **(08)**

Maalodu Ayanariyaatha
Vannamumullathu Neeru
Maelurai Thaevargal Thangal
Meiyathu Venpodi Neeru
Aela Udambidar Theerkkum
Inbantharuvathu Neeru
Aalamathu Undamidattrem
Aalavaayaan Thiruneerae! **(09)**

Kundigaik Kaiyargaloadu
Saakkiyar Koottamungooda
Kandi Kaippippathu Neeru
Karutha Iniyathu Neeru
Endisaip Patta Porulaar
Aetthum Thagaiyathu Neeru
Andatthavar Paninthaetthum
Aalavaayaan Thiruneerae! **(10)**

ஆற்றல் அடல் விடையேறும்
ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும்
பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற
தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவர் தாமே! **(11)**
**திருச்சிற்றம்பலம்!**

Aattral Adal Vidaiyaerum
Aalavaayaan Thiruneettraip
Poattrip Pugali Nilaavum
Poosuran Gnaana Sambanthan
Thaettrith Thennan Udaluttra
Theeppiniyaayina Theerach
Chaattriya Paadalgal Patthum
Vallavar Nallavar Thaamae! **(11)**
**Thirucchittrambalam!**

---

## YouTube Id: l_dvTBXIZeM Vaeyuru Thoali (Koalaru Pathigam)

***Here is another gem from Gnaana Sambanthar.*** *When the Paandiyaa kingdom was under the influence of Jains, the queen requested Sambanthar and Maanicka Vaasagar to visit their kingdom and bring Saivism back. Both saints were in Thirumaraikkaadu at that time. Maanicka Vaasagar was worried due to the alignments of the planets. Sambanthar sang this prayer, that essentially says the planets cannot cause harm to the devotees of Lord Sivaa.*

**திருச்சிற்றம்பலம்!**
வேயுறு தோளி பங்கன் விடமுண்ட
கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(01)**

என்பொடு கொம்பொடு ஆமை இவை
மார்பிலங்க எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல் சூடி
வந்தென் உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு
ஆறும் உடனாய நாள்களவை தாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(02)**

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது
பூமி திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(03)**

மதிநுதல் மங்கையோடு வடவாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல்

**Thirucchittrambalam!**
Vaeyuru Thoali Pangan Vidamunda
Kandan Miganalla Veenai Thadavi
Maasaru Thingal Gangai Mudimael
Aninthen Ulamae Puguntha Athanaal
Gnaayiru Thingal Chevvaai Puthan Viyaazhan
Velli Sani Paambirandum Udanae
Aasaru Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(01)**

Enbodu Kombodu Aamai Ivai
Maarbilanga Eruthaeri Aezhaiyudanae
Ponpothi Matthamaalai Punal Soodi
Vanthen Ulamae Puguntha Athanaal
Onbathodu Ondrodu Aezhu Pathinettodu
Aarum Udanaaya Naalgalavai Thaam
Anbodu Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(02)**

Uruvalar Pavalamaeni Oli Neeraninthu
Umaiyoadum Vellai Vidaimael
Murugalar Kondrai Thingal Mudimael
Aninthen Ulamae Puguntha Athanaal
Thirumagal Kalaiyathoorthi Seyamaathu
Bhoomi Thisai Theivamaana Palavum
Arunethi Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(03)**

Mathinuthal Mangaiyodu Vadavaalirunthu
Maraiyoathum Engal Paraman
Nathiyodu Kondrai Maalai Mudimael

அணிந்தென் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(04)**

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்
தனோடும் விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும்
மின்னும் மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(05)**

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதி சூடி
வந்தென் உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலை யானை
கேழல் கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(06)**

செப்பிளமுலை நன்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான
பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(07)**

வேள்பட விழி செய்தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி
வந்தென் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(08)**

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சல மகளோடு எருக்கு முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனும் மாலும் மறையோடு
தேவர் வரு காலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(09)**

Aninthen Ulamae Puguntha Athanaal
Kothiyuru Kaalanangi Namanoadu Thoothar
Kodu Noaigalaana Palavum
Athigunam Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(04)**

Nanjani Kandan Enthai Madavaal
Thanoadum Vidaiyaeru Nangal Paraman
Thunjirul Vanni Kondrai Mudimael
Aninthen Ulamae Puguntha Athanaal
Venjina Avunaroadum Urumidiyum
Minnum Migaiyaana Pootham Avaiyum
Anjidum Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(05)**

Vaalvari Athalathaadai Varikoavanatthar
Madavaal Thanoadum Udanaai
Naanmalar Vanni Kondrai Nathi Soodi
Vanthen Ulamae Puguntha Athanaal
Koalari Uzhuvaiyoadu Kolai Yaanai
Kaezhal Kodu Naagamoadu Karadi
Aalari Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(06)**

Cheppizhamulai Nanmangai Oru Paagamaaga
Vidaiyaeru Selvanadaivaar
Oppila Mathiyum Appum Mudimael
Aninthen Ulamae Puguntha Athanaal
Veppodu Kulirum Vaatham Migaiyaana
Pitthum Vinaiyaana Vanthu Naliyaa
Appadi Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(07)**

Vaelpada Vizhi Seithandru Vidaimaelirunthu
Madavaal Thanoadum Udanaai
Vaanmathi Vanni Kondrai Malar Soodi
Vanthen Ulamae Puguntha Athanaal
Aezhkadal Choozh Ilangai Araiyandranoadum
Idaraana Vanthu Naliyaa
Aazhkadal Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(08)**

Palapala Vaedamaagum Paranaari Paagan
Pasuvaerum Engal Paraman
Sala Magaloadu Erukku Mudimael
Aninthen Ulamae Puguntha Athanaal
Malar Misaiyoanum Maalum Maraiyoadu
Thaevar Varu Kaalamaana Palavum
Alaikadal Maeru Nalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(09)**

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியும் நாகம் முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
புத்தரோடமணை வாதில் அழிவிக்கும்
அண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே! **(10)**

Kotthalar Kuzhaliyoadu Visayarkku Nalgu
Gunamaaya Vaeda Vigirthan
Matthamu Mathiyum Naagam Mudimael
Aninthen Ulamae Puguntha Athanaal
Puttharoadamanai Vaathil Azhivikkum
Annal Thiruneeru Semmai Thidamae
Atthagu Nallanalla Avai Nallanalla
Adiyaar Avarkku Migavae! **(10)**

தேனமர் பொழில்
கொளாலை விளை செந்நெல்
துன்னி வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள்
வானில் அரசாள்வர் ஆணை நமதே! **(11)**
**திருச்சிற்றம்பலம்!**

Thaenamar Pozhil
Kolaalai Vilai Sennel
Thunni Valar Sempon Engum Nigazha
Naanmugan Aathiyaaya Bramaa Puratthu
Marai Gnaana Gnaana Munivan
Thaanuru Koalum Naalum Adiyaarai Vanthu
Naliyaatha Vannam Urai Sei
Aanasol Maalaiyoathum Adiyaargal
Vaanil Arasaalvar Aanai Namathae! **(11)**
**Thirucchittrambalam!**

---

## YouTube Id: 7QvstTW_F2I Boaloa Naathaa

**போலோ நாதா உமாபதே**
**சம்போ சங்கர பசுபதே! (ஜெய் போலோ)**

**Boaloa Naathaa Umaa Pathae**
**Samboa Sankara Pasupathae! (Jai Boaloa)**

நந்தி வாஹனா நாக பூஷணா
சந்திர சேகரா ஜடாதரா
சூலாதாரா ஜ்யோதி பிரகாசா
விபூதி சங்கர பரமேசா! **(ஜெய் போலோ)**

Nanthi Vaaganaa Naaga Booshanaa
Chandra Saekaraa Jadaatharaa
Soolaathaaraa Jyoathi Prakaasaa
Vibhoothi Sankara Paramaesaa! **(Jai Boaloa)**

கைலாச வாசா கனகசபேசா
கௌரி மனோகர விஸ்வேசா
ஸ்பசாணவாசா சிதம்பரேசா
நீலகண்ட மகாதேவா! **(ஜெய் போலோ)**

Kailaasa Vaasaa Kanagasabaesaa
Gowri Manoahara Viswaesaa
Spasaana Vaasaa Chithambaraesaa
Neelakanta Mahaathaevaa! **(Jai Boaloa)**

---

## YouTube Id: _TTnVxIGInc Ulagelaam Unarnthu

***This is a song from Chekkizhaar's "Periya Puraanam", considered to be the 12th Thirumurai, that captures the stories of the 63 Saiva Naayanmaars.*** *In "Thirutthondar Puraanam", Chekkizhaar worships Chithambara Nataraajar, who gave him the first words "Ulagelaam Unarnthu" of this great epic. He who should be realized and worshiped by this world; having Moon and Ganges on his head; performing cosmic dance in this universe; We shall pray his lotus feet adoring anklets.*

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்!
நிலவுலாவிய நீர்மலி வேணியன்!
அலகில் சோதியன்! அம்பலத்து ஆடுவான்!
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்!

Ulagelaam Unarnthu Oatharkkariyavan!
Nilavulaaviya Neermali Vaeniyan!
Alagil Soathiyan! Ambalatthu Aaduvaan!
Malar Silambadi Vaazhtthi Vananguvoam!


Murugan

# Sivan


Sakthi

## YouTube Id: 0mbgTrbClvE Siva Puraanam

***This is the very first song in "Thiru Vaasagam" sung by Maanicka Vaasagar that worships Lord Sivaa.*** *It is a great masterpiece of Hindu literature that dwells on many topics including philosophy, science, and humanity. Each and every phrase in Thiru Vaasagam deals with matters beneficial to mankind. It is the "Story" or "Puraanam" about Sivaa and hence the title "Siva Puraanam". Sivaa is the supreme God of Hindus. The song focuses on the God in the temple at Thiru Perunthurai (Avudaiyar Kovil) and towards the end shifts to Nataraajaa, the cosmic dancer, in Chidambaram.*

**திருச்சிற்றம்பலம்!**
நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமமாகி நின்று
அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன்
பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன்
பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும்
கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும்
சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்
தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்
சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும்
மோய உரைப்பன் யான்

கண் நுதலான் தன் கருணைக்
கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா
எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும்
மிக்காய் விளங்கொளியாய்

**Tirucchittrambalam!**
Namacchivaaya Vaazhga Naathan Thaal Vaazhga
Imaippozhuthum En Nenjil
Neengaathaan Thaal Vaazhga
Koakazhi Aanda Kurumanithan Thaal Vaazhga
Aagamamaagi Nindru
Annippaan Thaal Vaazhga
Aegan Anaegan Iraivadi Vaazhga

Vaegam Kedutthaanda Vaenthan Adi Velga
Pirapparukkum Pingyaganthan
Peigazhalgal Velga
Puranthaarkkuch Chaeyoan Than
Poongazhalgal Velga
Karanguvivaar Ulmagizhum
Koan Kazhalgal Velga
Siramkuvivaar Oanguvikkum
Seeroan Kazhal Velga

Eesan Adipoattri Enthai Adi Poattri
Thaesan Adipoattri Sivan Saevadi Poattri
Naeyatthae Nindra Nimalan Adi Poattri
Maayap Pirapparukkum Mannan Adi Poattri
Seeraar Perunthurai Nam
Thaevan Adi Poattri

Aaraatha Inbam Arulum Malai Poattri
Sivan Avan En
Sinthaiyul Nindra Athanaal
Avan Arulaalae Avanthaal Vanangich
Chinthai Magizhach Chivapuraanam Thannai
Munthai Vinai Muzhuthum
Moaya Uraippan Yaan

Kan Nuthalaan Than Karunaik
Kan Kaatta Vantheithi
Ennutharkku Ettaa
Ezhizhaar Kazhal Irainji
Vin Nirainthum Man Nirainthum
Mikkaai Vilangoliyaai

# Sivan



எண்ணிறந்து எல்லை
இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன்
புகழுமாறு ஒன்றறியேன் **(25)**

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள் **(30)**

எல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
அய்யா எனவோங்கி ஆழ்ந்து
அகன்ற நுண்ணியனே **(35)**

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம்
போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன்
இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை
அகல்விக்கும் நல்லறிவே **(40)**

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய்
அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்
நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய
நின்ற மறையோனே **(45)**

கறந்தபால் கன்னலொடு
நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய்
விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்
வல்வினையேன் தன்னை **(50)**

Enniranthu Ellai
Ilaathaanae Nin Perumseer
Pollaa Vinaiyaen
Pugazhumaaru Ondrariyaen **(25)**

Pullaagip Poodaaip Puzhuvaai Maramaagip
Pal Virugamaagip Paravaiyaaip Paambaagik
Kallaai Manitharaaip
Paeyaaik Kanangalaai
Val Asurar Aagi Munivaraaith Thaevaraaich
Chellaa-ah Nindra Itthaavara Sangamatthul **(30)**

Ellaap Pirappum
Piranthilaitthaen Emperumaan
Meiyae Un Ponnadigal
Kandindru Veeduttraen
Uyya En Ullatthul Oangaaramaai Nindra
Meiyaa Vimalaa Vidaippaagaa Vaethangal
Aiyaa Enavoangi Aazhnthu
Agandra Nunniyanae **(35)**

Veiyaai Thaniyaai Iyamaananaam Vimalaa
Poi Aayina Ellaam
Poai Agala Vantharuli
Mei Gnaanam Aagi Milirgindra Meicchudarae
Engnaanam Illaathaen
Inbap Perumaanae
Angnaanam Thannai
Agalvikkum Nallarivae **(40)**

Aakkam Alaviruthi Illaai Anaitthulagum
Aakkuvaai Kaappaai
Azhippaai Arul Tharuvaai
Poakkuvaai Ennaip Puguvippaai
Nin Thozhumbin
Naattratthin Naeriyaai Saeyaai Naniyaanae
Maattram Manam Kazhiya
Nindra Maraiyoanae **(45)**

Karanthapaal Kannalodu
Neikalanthaarp Poalach
Chiranthadiyaar Sinthanaiyul Thaenoori Nindru
Pirantha Pirapparukkum Engal Perumaan
Nirangal Oar Ainthudaiyaai
Vinnoargal Aettha
Marainthirunthaai Emperumaan
Valvinaiyaen Thannai **(50)**

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து
    எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும்
    வஞ்சனையைச் செய்ய **(55)**

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி
    நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் **(60)**

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து
    நெஞ்சில் வஞ்சம் கெடப் **(65)**

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும்
    இல்லானே உள்ளானே **(70)**

அன்பருக்கு அன்பனே
    யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே
    தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட
    எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால்
    கொண்டுணர்வார் தம் கருத்தின் **(75)**

நோக்கரிய நோக்கே
    நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்
    இலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே
    காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச்
    சொல்லாத நுண்ணுணர்வாய் **(80)**

Marainthida Moodiya Maaya Irulai
Aram Paavam Ennum Arum Kayittraal Katti
Puram Thoal Poartthu
    Engum Puzhu Azhukku Moodi
Malam Soarum Onbathu Vaayirkkudilai
Malangap Pulanainthum
    Vanjanaiyaich Cheiya **(55)**

Vilangu Manatthaal Vimalaa Unakkuk
Kalantha Anbaagik Kasinthu Ul Urugum
Nalam Thaan Ilaatha Siriyaerkku Nalgi
Nilam Thanmael Vantharuli
    Neelkazhalgal Kaatti
Naayirk Kadaiyaaik Kidantha Adiyaerkkuth **(60)**

Thaayirch Chirantha Thayaavaana Thatthuvanae
Maasattra Soathi Malarntha Malarcchudarae
Thaesanae Thaenaar Amuthae Sivapuraanae
Paasamaam Pattrarutthup Paarikkum Aariyanae
Naesa Arul Purinthu
    Nenjil Vanjam Kedap **(65)**

Paeraathu Nindra Perunganaip Paeraarae
Aaraa Amuthae Alavilaap Pemmaanae
Oaraathaar Ullatthu Olikkum Oliyaanae
Neeraai Urukki En Aaruyiraai Nindraanae
Inbamum Thunbamum
    Illaanae Ullaanae **(70)**

Anbarukku Anbanae
    Yaavaiyumaai Allaiyumaai
Soathiyanae Thunnirulae
    Thoandraap Perumaiyanae
Aathiyanae Antham Naduvaagi Allaanae
Eertthu Ennai Aatkonda
    Enthai Perumaanae
Koorttha Mei Gnaanatthaal
    Kondunarvaar Tham Karutthin **(75)**

Noakkariya Noakkae
    Nunukkariya Nunnunarvae
Poakkum Varavum Punarvum
    Ilaap Punniyanae
Kaakkumen Kaavalanae
    Kaanbariya Paeroliyae
Aattrinba Vellamae Atthaa Mikkaai Nindra
Thoattrach Chudaroliyaaich
    Chollaatha Nunnunarvaai **(80)**

மாற்றமாம் வையகத்தின்
வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே
என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனே ஒ என்றென்று **(85)**

போற்றிப் புகழ்ந்திருந்து
பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே
தென் பாண்டி நாட்டானே **(90)**

அல்லல் பிறவி அறுப்பானே ஒ என்று
சொல்லற்கு அரியானைச்
சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின்
பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்
சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து! **(95)**

**திருச்சிற்றம்பலம்!**
**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி!**

Maattramaam Vaiyagatthin
Vevvaerae Vantharivaam
Thaettranae Thaettrath Thelivae
En Sinthaiyul
Oottraana Unnaar Amauthae Udaiyaanae
Vaettru Vigaara Vidakkudambin Ulkidappa
Aattraenem Aiyaa Aranae Oh Endrendru **(85)**

Poattrip Pugazhnthirunthu
Poikettu Mei Aanaar
Meettu Ingu Vanthu Vinaippiravi Saaraamae
Kallap Pulakkurambaik Kattazhikka Vallaanae
Nal Irulil Nattam Payindru Aadum Naathanae
Thillai Ul Kootthanae
Then Paandi Naattanae **(90)**

Allal Piravi Aruppaanae Oh Endru
Sollarkku Ariyaanaich
Chollith Thiruvadikkeezh
Solliya Paattin
Porul Unarnthu Solluvaar
Selvar Sivapuratthin Ullaar
Sivan Adikkeezhp
Palloarum Aetthap Paninthu! **(95)**

**Thirucchittrambalam!**
**Thennaadudaiya Sivanae Poattri!**
**Ennaattavarkkum Iraivaa Poattri Poattri!**

---

**YouTube Id: QsqTADnHNzE**

## Ganga Jadaathara

*Glory to Lord Sankaraa, who bears the Holy Ganges in his hair; his consort is Goddess Girijaa, born of the mountains; the Lord of Lords; conquered death and whose feet confer auspiciousness; rides the bull, Nanthi; has a cobra around his neck; the embodiment of unparalleled virtues. Hail the enchanting dancer, the blue-throated Sivaa and whose eyes are like the petals of the lotus.*

**கங்க ஜடாதர கௌரிசங்கர**
**கிரிஜா மனரமணா**
**ம்ருத்யுஞ்ஜய மகாதேவ மகேஸ்வர**
**மங்கள சுப சரணா!**
நந்தி வாகனா நாகபூஷணா...
நந்தி வாகனா நாகபூஷணா...
நிருபம குணசதனா!
நடன மனோகர நீலகண்ட சுவாமி...
நடன மனோகர நீலகண்ட சுவாமி...
நீரஜ தளநயனா!
சுவாமி நீரஜ தளநயனா!
**(கங்க ஜடாதர)**

**Ganga Jadaathara Gowrisankara**
**Girijaa Manaramanaa**
**Mruthyunjaya Mahaathaeva Mahaeswara**
**Mangala Subha Charanaa!**
Nanthi Vaaganaa Naagabhooshanaa...
Nanthi Vaaganaa Naagabhooshanaa...
Nirupama Gunasathanaa!
Nadana Manoahara Neelakanta Swaami...
Nadana Manoahara Neelakanta Swaami...
Neeraja Thalanayanaa!
Swaami Neeraja Thalanayanaa!
**(Ganga Jadaathara)**



Murugan



Sakthi

# Sivan

## YouTube Id: DIT5PUVa9jw Samboa Mahaathaeva

**ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா**
**ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!**

சம்போ மகாதேவா சதாசிவா
அம்புஜ நயனா நாராயணா! **(ஹர ஓம்)**
பானக பூஷண சதாசிவா
பன்னக சயனா நாராயணா! **(ஹர ஓம்)**
கைலாச வாசா சதாசிவா
வைகுண்ட வாசா நாராயணா! **(ஹர ஓம்)**
கௌரி சமேத சதாசிவா
லக்ஷ்மி சமேத நாராயணா! **(ஹர ஓம்)**

பார்வதி ரமணா சதாசிவா
பாப விமோசன நாராயணா! **(ஹர ஓம்)**
பாஸ்ம விபூசக சதாசிவா
ஶ்ரீகண்ட லேபித நாராயணா! **(ஹர ஓம்)**
அனாத ரக்ஷக சதாசிவா
ஆபத் பாந்தவா நாராயணா! **(ஹர ஓம்)**
சின்மய நந்தா சதாசிவா
சின்மய ரூபா நாராயணா! **(ஹர ஓம்)**

சம்போ மகாதேவா சதாசிவா
அம்புஜ நயனா நாராயணா!
**(ஹர ஓம் 3 முறை)**

**Hara Om Hara Om Sathaasivaa**
**Hari Om Hari Om Naaraayanaa!**

Samboa Mahaathaeva Sathaasivaa
Ambuja Nayanaa Naaraayanaa! **(Hara Om)**
Paanaga Bhooshana Sathaasivaa
Pannaga Sayanaa Naaraayanaa! **(Hara Om)**
Kailaasa Vaasaa Sathaasivaa
Vaikunta Vaasaa Naaraayanaa! **(Hara Om)**
Gowri Samaetha Sathaasivaa
Lakshmi Samaetha Naaraayanaa! **(Hara Om)**

Paarvathi Ramanaa Sathaasivaa
Paapa Vimochana Naaraayanaa! **(Hara Om)**
Baasma Viboochaga Sathaasivaa
Sreekanta Laepitha Naaraayanaa! **(Hara Om)**
Anaatha Rakshaka Sathaasivaa
Aabath Paanthavaa Naaraayanaa! **(Hara Om)**
Chinmaya Nanthaa Sathaasivaa
Chinmaya Roopaa Naaraayanaa! **(Hara Om)**

Samboa Mahaathaevaa Sathaasivaa
Ambuja Nayanaa Naaraayanaa!
**(Hara Om 3 Times)**

# Sakthi, Lakshmi, Saraswathi

***Here are some holy celebrations of Goddesses Lakshmi, Sakthi!***

***Varalakshmi Viratham (Jul-Aug)*** *is performed by married women, for their well-being, and to ask Lakshmi to bless their husbands with health and longevity. Worshipping Varalakshmi on this day is equivalent to worshipping Ashtalakshmi – the 8 aspects of Lakshmi, all of whom represent different forms of wealth.*

***Navaraathri (Sep-Oct)*** *is observed in honor of the goddess Durgaa, an aspect of Aathi Paraasakthi, the supreme goddess. It spans over 9 nights, first in the month of Chitthirai (Mar-Apr), and again in the month of Ashwini (Sep-Oct).*

***Vijayathasami (Sep-Oct)*** *marks the victory of goddess Durgaa against the buffalo demon Mahishaa to restore and protect Dharmaa, and is observed after Durgaa Poojaa & Navaraathri.*

## YouTube Id: 7_ZCLban32Q Saraswathi Namasthubyam

***This Sthothram is sung in praise of Saraswathi, the Goddess of Knowledge and Wisdom.*** *Salutations to Devi Saraswathi, Who is the giver of boons and fulfiller of wishes, Oh Devi, when I begin my studies, please bestow on me the capacity of right understanding,*

சரஸ்வதி நமஸ்துப்யம்
வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி
சித்திர்பவது மேசதா!

Saraswathi Namasthubyam
Varathae Kaamaroopini
Vidhyaarambam Karishyaami
Siddhirbavathu Maesathaa!


[Sivan](#)

# Sakthi, Lakshmi, Saraswathi


[Vishnu](#)

## YouTube Id: jZQYHoRwrWc Aaya Kalaigal Arubatthu

***This is a song from "Saraswathi Anthaathi" by Kavich Chakkravartthi Kambar.*** *Once Kambar faced a major issue at Chola King's courtroom. Kambar composed and sang the Anthaathi for Saraswathi, who then blessed him and helped resolve the situation.*
*Arts can be classified into 64 different types. Goddess Saraswathi helps us, like a mother, to gain mastery in all these arts. Due to our devotion towards her, if she takes a permanent seat and reside in our heart, then we would never face any problems in life.*

ஆய கலைகள்
அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை
தூய உருப்பளிங்கு
போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்!

Aaya Kalaigal
Arubatthu Naanginaiyum
Aeya Unarvikkum Ennammai
Thooya Uruppalingu
Poalvaalen Ullatthinullae
Iruppalingu Vaaraathidar!

---

## YouTube Id: iJt8g4WDYoM Kaadu Vettippoattu

***This song by Paaduvaar Muthappar, requests Goddess Lakshmi to remain forever in our homes and bless us.*** *He is a poet of the first order from the Nagarathar Community. The Chettiars of those days had only a formal education – the rudiments of Tamil and simple arithmetic calculations. These were considered enough for them to look after their business. But Muthappar mastered Nalavenba, Sathakam etc. He could compose instantaneously. The title "Paaduvaar" indicates his proficiency in learning and verification.*

காடு வெட்டிப் போட்டுக்
கடிய நிலம் திருத்தி
வீடு கட்டிக் கொண்டிருக்கும்
வேள் வணிகர் வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள்
அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு!

Kaadu Vettip Poattuk
Kadiya Nilam Thirutthi
Veedu Kattik Kondirukkum
Vael Vanigar Veedugatku
Andraikku Vantha Engal
Ammaa Ilakkumiyae
Endraikkum Neengaa Thiru!

---

## YouTube Id: yvGPUDrUGwg Gaayathri Manthiram

***The Gaayathri Manthiram is considered to be the essence of Vedas.*** *It is addressed to the immanent and transcendent divine which has been given the name 'Savithaa' meaning 'that from which all this is born'. The Manthiram has 3 parts: Adoration, Meditation, and Prayer. 1st, the divine is praised, then it is meditated upon in reverence and finally, an appeal is made to the divine to awaken and strengthen the intellect, the discriminating faculty of man.*

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்!

Om Bhoor Bhuva Swaha
Tath Savithur Varaenyam
Bhargoa Thaevasya Dheemahi
Dhiyoa Yoanaḥ Pracchoathayaath!


Sivan

# Kaamaakshi


Vishnu

## YouTube Id: BKy9MYDhbeY Dhukka Nivaarana Ashtakam

***This musical Octet written in Tamil is addressed to Goddess Kaamaakshi of Maangaadu temple.*** *It is good to recite this daily at home to get the blessings of Goddess Kaamaakshi, and thereby attain a happy life. "Dhukka Nivaaranam" means "remove all types of worries and give a peace of mind".*

**ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி**
**துக்க நிவாரணி காமாக்ஷி!**

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே! **(1) (ஜெய ஜெய)**

கானுறு மலரெனக் கதிர் ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியால் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்! **(2) (ஜெய ஜெய)**

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எம்குலம் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்த நல் துர்க்கையளே! **(3) (ஜெய)**

தணதண தந்தண தவிலொளி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர் ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்! **(4) (ஜெய ஜெய)**

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக்
குணமிகு வேலனைக்
கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநல்
சக்தி எனும் மாயே! **(5) (ஜெய ஜெய)**

எண்ணிய படிநீ அருளிட வருவாய்
எம்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்

**Jeya Jeya Sankari Gowri Krupaakari**
**Dhukka Nivaarani Kaamaakshi!**

Mangala Roopini Mathiyani Soolini
Manmatha Paaniyalae
Sangadam Neekkidach Chaduthiyil Vanthidum
Sankari Sownthariyae
Kangana Paaniyan Kanimugam Kandanal
Karpagak Kaaminiyae! **(1) (Jeya Jeya)**

Kaanuru Malarenak Kathir Oli Kaattik
Kaatthida Vanthiduvaal
Thaanuru Thava Oli Thaaroli Mathiyoli
Thaangiyae Veesiduvaal
Maanuru Vizhiyaal Maathavar Mozhiyaal
Maalaigal Soodiduvaal! **(2) (Jeya Jeya)**

Sankari Sownthari Chathurmugan Pottridach
Chabaiyinil Vanthavalae
Pongari Maavinil Ponnadi Vaitthup
Porunthida Vanthavalae
Em Kulam Thazhaitthida Ezhil Vadivudanae
Ezhuntha Nal Thurkkaiyalae! **(3) (Jeya Jeya)**

Thanathana Thanthana Thaviloli Muzhangidath
Thanmani Nee Varuvaai
Kanagana Kangana Kathir Oli Veesidak
Kanmani Nee Varuvaai
Panapana Pambana Paraiyoli Koovidap
Panmani Nee Varuvaai! **(4) (Jeya Jeya)**

Panchami Bhairavi Parvatha Putthiri
Panjanal Paaniyalae
Konjidum Kumaranaik
Kunamigu Vaelanaik
Kodutthanal Kumariyalae
Sangadam Theertthida Chamarathu Seithanal
Sakthi Enum Maayae! **(5) (Jeya Jeya)**

Enniya Padinee Arulida Varuvaai
Emkula Thaeviyalae
Panniya Seyalin Palanathu Nalamaaip
Palgida Aruliduvaai

கண்ணொளி அதனால்
கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே! **(6) (ஜெய ஜெய)**

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்! **(7) (ஜெயஜெய)**

ஜெய ஜெய பாலா சாமுண்டீஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீதேவி! **(8) (ஜெய ஜெய)**

Kannoli Athanaal
Karunaiyae Kaattik
Kavalaigal Theerppavalae! **(6) (Jeya Jeya)**

Idartharu Thollai Inimael Illai
Endru Nee Solliduvaai
Sudartharu Amuthae Suruthigal Koorich
Chugamathu Thanthiduvaai
Padartharu Irulil Parithiyaai Vanthu
Pazhavinai Oattiduvaai! **(7) (Jeya Jeya)**

Jeya Jeya Baalaa Chaamundeeswari
Jeya Jeya Sreethaevi
Jeya Jeya Thurkkaa Sree Paramaeswari
Jeya Jeya Sreethaevi
Jeya Jeya Jeyanthi Mangala Kaali
Jeya Jeya Sreethaevi! **(8) (Jeya Jeya)**

---

YouTube Id: FjQiVDXJ1T4

## Om Sakthi Om

**ஓம் சக்தி ஓம்! ஓம் சக்தி ஓம்!**
**ஓம் சக்தி ஓம்! ஓம் சக்தி ஓம்!**

சுந்தர வதனி சுகுண மனோகரி
மந்தகாச முக மதி வதனி
சந்தன குங்கும அலங்காரம் உடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே!
**(ஓம் சக்தி)**

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனை அனுடன்
வகையாய் உன் புகழ் பாடிடவே!
**(ஓம் சக்தி)**

தங்கச் சிலம்பு சல சலவென்றிட
தாண்டவம் ஆடி தனையன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன்
புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்!
**(ஓம் சக்தி)**

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தம் ஆன ஜோதி சுவரூபிணி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்!
**(ஓம் சக்தி)**

**Om Sakthi Om! Om Sakthi Om!**
**Om Sakthi Om! Om Sakthi Om!**

Sunthara Vathani Suguna Manoahari
Manthahaasa Muga Mathi Vathani
Chanthana Kunguma Alankaaram Udanae
Thanthiduvaai Unthan Tharisanamae!
**(Om Sakthi)**

Nanthi Thaevarudan Munivarum Paniya
Aananthamudanae Vanthiduvaai
Vanthanai Seithu Maayanai Anudan
Vagaiyaai Un Pugazh Paadidavae!
**(Om Sakthi)**

Thangach Chilambu Sala Salavendrida
Thaandavam Aadi Thanaiyan Magizhnthida
Pongum Aananthamudan
Puvimael Vilangum
Mangala Naayagi Magizhvaai Varuvaai!
**(Om Sakthi)**

Vaethangal Unnai Vaendip Paadida
Virumbi Saraswathi Veenai Vaasitthida
Sathaanantham Aana Joathi Swaroopini
Raaja Raajaeswari Charanam Charanam!
**(Om Sakthi)**


Sivan

# Amman


Vishnu

## YouTube Id: MjllK2PTzXY Karppoora Naayagiyae

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன்
இங்கு தாயே
சுடராக வாழ வைப்பாய் என்னை நீயே! **(1)**

புவன முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநயமாய் வடிவாகும் நாகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீ ஆதரி! **(2)**

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன்
தாயே - எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல்
முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவளின் குரல் கேட்டு
உன்முகம் திருப்பு
சிரித்தபடி என்னை தினம் வழியனுப்பு! **(3)**

கண்ணிரண்டும் உன்னுருவே
காண வேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாட வேண்டும்
பண்ணமைக்கும் நா உனையே
பாட வேண்டும்
பக்தியொடு கையுனையே கூட வேண்டும்
எண்ணமெலாம் உன் நினைவே
ஆக வேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது
ஆக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகளுடைய குறைகளையும் தீருமம்மா! **(4)**

நெற்றியில் உன் குங்குமமே
நிறைய வேண்டும்
நெஞ்சில் உன் திருநாமம் வழிய வேண்டும்

Karppoora Naayagiyae Kanagavalli
Kaali Magamaayi Karumaari Ammaa
Porkkoavil Konda Sivakaami Ammaa
Poovirunthavalli Theivayaanai Ammaa
Virkkoala Vaethavalli Visaalaakshi
Vizhikkoala Maamathurai Meenaakshi
Sorkkoavil Naan Amaitthaen
Ingu Thaayae
Sudaraaga Vaazha Vaippaai Ennai Neeyae! **(1)**

Bhuvana Muzhuthum Aazhugindra Bhuvanaeswari
Purameritthoan Puramirukkum Paramaeswari
Navanavamaai Vadivaagum Naagaeswari
Nambinavar Kaivilakkae Sarvaeswari
Kavalaigalaith Theertthuvidum Kaaleeswari
Kaarirulin Theecchudarae Joatheeswari
Uvamaanap Paramporulae Jagatheeswari
Unnadimaich Chiriyaenai Nee Aathari! **(2)**

Unnidatthil Sollaamal Vaeru Entha
Uravidatthil Muraiyiduvaen
Thaayae - Enthan
Annaiyaval Neeyirukka Ulagil Mattra
Anniyaraik Kenjiduthal
Muraiyoa Ammaa
Kanneeraith Thudaitthuvida Oadi Vaammaa
Kaatthirukka Vaitthiduthal Sariyoa Ammaa
Chinnavalin Kural Kaettu
Unmugam Thiruppu
Siritthapadi Ennai Thinam Vazhiyanuppu! **(3)**

Kannirandum Unnuruvae
Kaana Vaendum
Kaalirandum Unnadiyae Naada Vaendum
Pannamaikkum Naa Unaiyae
Paada Vaendum
Bakthiyodu Kaiyunaiyae Kooda Vaendum
Ennamelaam Un Ninaivae
Aaga Vaendum
Iruppathellam Unnudaiyathu
Aaga Vaendum
Mannalakkum Samayapura Maariyammaa
Magaludaiya Kuraigalaiyum Theerumammaa! **(4)**

Nettriyil Un Kungumamae
Niraiya Vaendum
Nenjil Un Thirunaamam Vazhiya Vaendum

கற்றதெல்லாம் மென்மேலும்
பெருக வேண்டும்
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்
சுற்றமெல்லாம் நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீ இருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா? **(5)**

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ
கன்றுக்குப் பசுவின்றி சொந்தமுண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும்
பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ
எண்ணைக்கும் விளக்குக்கும்
பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன்
பிள்ளையன்றோ? **(6)**

அன்புக்கே நானடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என் காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவை எல்லாம்
இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்! **(7)**

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தி இல்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவழ வாயழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாலே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர்
அளவும் இல்லை! **(8)**

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு
வைப்பாய் என்னை! **(9) (கற்பூர)**

Kattrathellaam Menmaelum
Peruga Vaendum
Kavithaiyilae Un Naamam Vaazha Vaendum
Suttramellaam Needoozhi Vaazha Vaendum
Joathiyilae Nee Irunthu Aala Vaendum
Mattrathellaam Naan Unakku Sollalaamaa
Madimeethu Pillai Ennaith Thallalaamaa? **(5)**

Annaikku Ubachaaram Seivathundoa
Arul Seiya Innaeram Aavathundoa
Kannukku Imaiyindrik Kaavalundoa
Kandrukkup Pasuvindri Sonthamundoa
Munnaikkum Pinnaikkum
Paarppathundoa
Muzhumaikkum Nee Enthan Annaiyandroa
Ennaikkum Vilakkukkum
Baethamundoa
Endraikkum Naanunthan
Pillaiyandroa? **(6)**

Anbukkae Naanadimai Aaga Vaendum
Arivukkae En Kaathu Kaetka Vaendum
Vambukkae Poagaamal Irukka Vaendum
Vanjatthai En Nenjam Arukka Vaendum
Panbukkae Uyir Vaazha Aasai Vaendum
Parivukkae Naan Endrum Paniya Vaendum
Enpakkam Ivai Ellaam
Irukka Vaendum
Ennoadu Nee Endrum Vaazha Vaendum! **(7)**

Kumbidavoa Kai Irandum Poathavillai
Kooppidavoa Naa Ondraal Mudiyavillai
Nambidavoa Meiyathanil Sakthi Illai
Nadanthidavoa Kaal Irandaal Aagavillai
Chempavazha Vaaiyazhagi Un Ezhiloa
Chinna Iru Kangalukkul Adangavillai
Ambalavu Vizhiyaale Unnai Endrum
Adipaniyum Aasaikkoar
Alavum Illai! **(8)**

Kaattraagik Kanalaagik Kadalaaginaai
Karuvaagi Uyiraagi Udalaaginaai
Naettraagi Indraagi Naalaaginaai
Nilamaagi Payiraagi Unavaaginaai
Thoattraalum Jeyitthaalum Vaazhvaaginaai
Thozhuthaalum Azhuthaalum Vadivaaginaai
Poattraatha Naalillai Thaayae Unnai
Poruloadu Pugazhoadu
Vaippaai Ennai! **(9) (Karppoora)**


Sivan

# Lakshmi


Vishnu

## YouTube Id: lCIHz9Nf68Y Mahaalakshmi Ashtakam

***Mahalakshmi Ashtakam is found in the Padma Puraanaa, which was chanted by Lord Indraa in praise of Goddess Mahalakshmi.*** *Ashtakam (Octet) is a form of poetry written in 8 stanzas. I offer my worship to Mahalakshmi, who symbolizes the great illusion and is worshipped by all Devas; who resides in Sree Peetam and carries Conch, Chakram, and Gadhaa in her hand; the one who has Garudaa bird as her vehicle, feared by even the demon "Koalaa", and destroys all sins; the all-knowing one, giver of all boons, and remover of all dangerous enemies; the remover of all afflictions; who confers great powers, desires, good intellect, enjoyment, and liberation; the personification of all manthraas, ever shining and radiant; who is without a beginning or end; the primordial energy and Mahaeswari; personification of yoga and sustains yoga Sakthi. Mahalakshmi represents both the gross and the subtle manifestations of life. She is very scary to the bad; great energy; destroys the greatest sins; has a lotus as her seat symbolizing the ultimate reality. I worship Mahalakshmi who is Paramaeswari and the mother of the universe; wearing white clothes, adorned completely with jewels; she is the omnipresent Divine Mother.*

நமஸ்தேஸ்து மகாமாயே
ஸ்ரீபீடே சுரபூஜிதே
சங்க சக்ர கதா ஹஸ்தே
மகாலக்ஷ்மி நமோஸ்துதே! **(1)**

நமஸ்தே கருடாரூடே கோலாசூர பயங்கரி
சர்வபாப ஹரே தேவி
மகாலக்ஷ்மி நமோஸ்துதே! **(2)**

சர்வக்ஞே சர்வ வரதே சர்வ துஷ்ட பயங்கரி
சர்வ துக்க ஹரே தேவி
மகாலக்ஷ்மி நமோஸ்துதே! **(3)**

சித்தி புத்தி ப்ரதே தேவி
புக்தி முக்தி ப்ரதாயினி
மந்த்ர மூர்த்தே சதா தேவி
மகாலக்ஷ்மி நமோஸ்துதே! **(4)**

ஆத்யந்த ரஹிதே தேவி
ஆதி சக்தி மகேஸ்வரி
யோகக்ஞே யோகசம்பூ தேவி
மஹாலக்ஷ்மி நமோஸ்துதே! **(5)**

ஸ்தூல சூக்ஷ்ம மகா ரௌத்ரே
மகா சக்தி மகோதரே
மகா பாப ஹரே தேவி
மகாலக்ஷ்மி நமோஸ்துதே! **(6)**

பத்மாசன ஸ்திதே தேவி
பரப்பிரஹ்ம ஸ்வரூபினி
பரமேசி ஜகன்மாதா
மகாலக்ஷ்மி நமோஸ்துதே! **(7)**

ஸ்வேதாம்பர தரே தேவி
நானாலங்கார பூஷிதே
ஜகத் ஸ்திதே ஜகன்மாதா
மகாலக்ஷ்மி நமோஸ்துதே! **(8)**

Namasthaesthu Maahaamaayae
Sreepeedae Surapoojithae
Sanka Chakra Gathaa Hasthae
Mahaalakshmi Namoasthuthae! **(1)**

Namasthae Garudaaroodae Koalaasoora Bayangari
Sarvapaapa Harae Devi
Mahaalakshmi Namoasthuthae! **(2)**

Sarvagnae Sarva Varathae Sarva Dhusta Bayangari
Sarva Dhukka Harae Devi
Mahaalakshmi Namoasthuthae! **(3)**

Siddhi Buddhi Prathae Devi
Bukthi Mukthi Prathaayini
Manthra Moortthae Sathaa Devi
Mahaalakshmi Namoasthuthae! **(4)**

Aathyantha Rahithae Devi
Aathi Sakthi Mahaeswari
Yoagagnae Yoagasambhoo Devi
Mahaalakshmi Namoasthuthae! **(5)**

Sthoola Sookshma Mahaa Rowthrae
Mahaa Sakthi Mahoatharae
Mahaa Paapa Harae Devi
Mahaalakshmi Namoasthuthae! **(6)**

Pathmaasana Sthithae Devi
Parabbrahma Swaroopini
Paramaesi Jaganmaathaa
Mahaalakshmi Namoasthuthae! **(7)**

Swaethaambara Tharae Devi
Naanaalankaara Bhooshithae
Jagath Sthithae Jaganmaathaa
Mahaalakshmi Namoasthuthae! **(8)**


Sakthi


Aiyappan

# Vishnu

***Here are some holy celebrations of Lord Vishnu!***

*Together with Brammaa and Sivaa, Vishnu forms the principal trinity of Hindu religious practice. Vishnu is regarded as the preserver and protector. When humanity is threatened by chaos or evil, he descends into the world in one of his incarnations or avatars to restore righteousness.*

***Raama Navami (Mar-Apr)** is celebrated for the birth of Raaman, the 7th avatar of Vishnu. He is held as an emblem for being an ideal king and human through his righteousness, good conduct, and virtue. The festival falls on the 9th day of the bright fortnight in the month of Chitthirai.*

***Krishna Jeyanthi or Gokulaashtami (Aug-Sep)** is celebrated for the birth of Krishnan, the 8th avatar of Vishnu, on the 8th day (Ashtami) of the dark fortnight (Krishna Paakshaa).*

***Vaikunta Aekaathasi (Dec-Jan)** Demon Muraasuraa was once a nightmare to the Devas, owing to a boon from Bramaa. Devas sought the assistance of Vishnu, who traveled to Simhavati cave, where he was pursued by the demon. Vishnu summoned Yogamaayaa, a goddess created from his divine energy, who slew the Asuraa. Vishnu offered the goddess the epithet 'Aekaathasi', and declared that she would be capable of vanquishing the sins of all the people of Earth. As per beliefe, those who fast on the occasion and worship Aekaathasi would attain Vaikuntam.*

---

YouTube Id: WbWjg12osts

## Aathi Saeshaa Anantha

**ஆதி சேஷா அனந்த சயனா**
**ஸ்ரீநிவாசா ஸ்ரீ வெங்கடேசா! (ஆதி)**

ரகுகுல திலகா ரகு ராமச்சந்திரா
சீதாபதே ஸ்ரீ ராமச்சந்திரா
யதுகுல பூஷணா யசோத நந்தனா
ராதாபதே கோபால கிருஷ்ணா! **(ஆதி)**

குண்டலி பூஷணா கைலாச வாசா
கௌரிபதே சிவ சம்போ சங்கரா
சாகர லங்கனா ஸ்ரீ ராம தூதா
அஞ்சனி புத்ரா ஸ்ரீ ஆஞ்சநேயா! **(ஆதி)**

ஸ்வேதாம்பர தரா ஸ்ரீ சித்விலாசா
ஷிர்டிபதே ஸ்ரீ சாயி நாதா
கலியுக தேவா கருநிஞ்ச ராவா
மங்காபதே ஸ்ரீ வெங்கடேசா! **(ஆதி)**

**Aathi Saeshaa Anantha Sayanaa**
**Sreenivaasaa Sree Venkataesaa! (Aathi)**

Raghukula Thilakaa Raghu Raamachandraa
Seethaapathae Sree Raamachandraa
Yathukula Booshanaa Yasoatha Nanthanaa
Raadhaapathae Goapaala Krishnaa! **(Aathi)**

Kundali Bhooshanaa Kailaasa Vaasaa
Gowreepathae Shiva Shamboa Sankaraa
Saagara Lankanaa Sree Raama Thoothaa
Anjani Puthraa Sree Aanjanaeyaa! **(Aathi)**

Swaethaambara Tharaa Sree Chithvilaasaa
Shiridipathae Sree Saayi Naathaa
Kaliyuga Thaevaa Karunincha Raavaa
Mangaapathae Sree Venkataesaa! **(Aathi)**

---

YouTube Id: yC1hSdCeQSc

## Thiruppathi Malai Vaazhum

**திருப்பதி மலை வாழும் வெங்கடேசா**
**திருமகள் மனம் நாடும் ஸ்ரீநிவாசா**
**ஏழு மலைவாசா!**

அன்பெனும் அகல் விளக்கை ஏற்றி வைத்தேன்
அதில் ஆசையெனும்
    நெய்யை ஊற்றி வைத்தேன்
என் மனம் உருகிடவே பாடிவந்தேன்
உன் ஏழுமலை ஏறி ஓடி வந்தேன்!
**(திருப்பதி)**
நினைத்ததை நடத்தி வைப்பாய் வைகுந்தா
மறைத்ததைப் பறித்திடுவாய் கோவிந்தா
உரைத்தது கீதை என்னும் தத்துவமே - அதை
உணர்ந்தவர் வாழ்ந்திடுவார் சத்தியமே!
**(திருப்பதி)**

**Thiruppathi Malai Vaazhum Venkataesaa**
**Thirumagal Manam Naadum Sreenivaasaa!**
**Aezhu Malaivaasaa!**

Anbenum Agal Vilakkai Aettri Vaitthaen
Athil Aasaiyenum
    Neiyyai Oottri Vaitthaen
En Manam Urugidavae Paadi Vanthaen
Un Aezhumalai Aeri Oadi Vanthaen!
**(Thiruppathi)**
Ninaitthathai Nadatthi Vaippaai Vaikunthaa
Maraitthathaip Paritthiduvaai Goavinthaa
Uraitthathu Geethai Ennum Thatthuvamae - Athai
Unarnthavar Vaazhnthiduvaar Satthiyamae!
**(Thiruppathi)**

## ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா

ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா
ஆலிலை வாசா நாராயணா
வேதம் நான்கைக் காத்திடவே
மீனாய் வந்தாய் நாராயணா!

பாற்கடல் அமிர்தம் வழங்கிடவே
கூர்மமாய் நின்றாய் நாராயணா
வளமார் பூமி மீட்டிடவே
வராகம் ஆனாய் நாராயணா!

இரணிய சம்ஹாரம் செய்திடவே
நரசிம்மம் ஆனாய் நாராயணா
மாவலி செருக்கை மாய்த்திடவே
வாமனன் ஆனாய் நாராயணா!

பாசத் தந்தை சொற்கேட்ட
பரசு ராமா நாராயணா
இராவண சம்ஹாரம் செய்திடவே
இராமனாய் நின்றாய் நாராயணா!

நலமாய் சோதரர் போற்றிடவே
பலராமர் ஆனாய் நாராயணா
கீதையால் வாதைப் போக்கிடவே
கிருஷ்ணன் ஆனாய் நாராயணா!

கலியுகக் கொடுமை பெருகையிலே
கல்கியாய்த் தோன்றுவாய் நாராயணா
துன்பம் தொல்லை முற்றுகையில்
துடைக்க எழுகின்ற நாராயணா!

## Hari Om Hari Om Naaraayanaa

Hari Om Hari Om Naaraayanaa
Aalilai Vaasaa Naaraayanaa
Vaetham Naangaik Kaatthidavae
Meenaai Vanthaai Naaraayanaa!

Paarkkadal Amirtham Vazhangidavae
Koormamaai Nindraai Naaraayanaa
Valamaar Bhoomi Meettidavae
Varaagam Aaanaai Naaraayanaa!

Irainiya Samhaaram Seithidavae
Narasimmam Aanaai Naaraayanaa
Maavali Serukkai Maaitthidavae
Vaamanan Aanaai Naaraayanaa!

Paasath Thanthai Sorkkaetta
Parasu Raamaa Naaraayanaa
Raavana Samhaaram Seithidavae
Raamanaai Nindraai Naaraayanaa!

Nalamaai Soatharar Poattridavae
Balaraamar Aanaai Naaraayanaa
Geethaiyaal Vaathaip Poakkidavae
Krishnan Aanaai Naaraayanaa!

Kaliyugak Kodumai Perugaiyilae
Kalkiyaaith Thoandruvaai Naaraayanaa
Thunbam Thollai Muttrugaiyil
Thudaikka Ezhugindra Naaraayanaa!

---

## ஸ்ரீநிவாசா கோவிந்தா

**கோவிந்தா ஹரி கோவிந்தா**
**கோகுல நந்தன கோவிந்தா!**

ஸ்ரீநிவாசா கோவிந்தா
ஸ்ரீ வெங்கடேசா கோவிந்தா! **(கோவிந்தா)**
பக்தவத்சலா கோவிந்தா
பகவதப் பிரியா கோவிந்தா! **(கோவிந்தா)**
நித்ய நிர்மலா கோவிந்தா
நீலமேக சியாமளா கோவிந்தா! **(கோவிந்தா)**

புராண புருஷா கோவிந்தா
பண்டரிகாக்ஷா கோவிந்தா! **(கோவிந்தா)**
நந்த முகுந்தா கோவிந்தா
நவநீத சோரா கோவிந்தா! **(கோவிந்தா)**
வேணு கோபாலா கோவிந்தா
வேங்கட விட்டலா கோவிந்தா! **(கோவிந்தா)**
அநாத ரக்ஷகா கோவிந்தா
ஆபத் பாண்டவா கோவிந்தா!
**(கோவிந்தா 4 முறை)**

## Sreenivaasaa Goavinthaa

**Goavinthaa Hari Goavinthaa**
**Goakula Nanthana Goavinthaa!**

Sreenivaasaa Goavinthaa
Sree Venkataesaa Goavinthaa! **(Goavinthaa)**
Bakthavathsalaa Goavinthaa
Bhagavathap Piriyaa Goavinthaa! **(Goavinthaa)**
Nithya Nirmalaa Goavinthaa
Neelamaega Siyaamalaa Goavinthaa! **(Goavinthaa)**

Puraana Purushaa Goavinthaa
Pandarikaakshaa Goavinthaa! **(Goavinthaa)**
Nantha Mukunthaa Goavinthaa
Navaneetha Choaraa Goavinthaa! **(Goavinthaa)**
Vaenu Goapalaa Goavinthaa
Vaenkata Vittalaa Goavinthaa! **(Goavinthaa)**
Anaatha Rakshakaa Goavinthaa
Aabath Paandavaa Goavinthaa!
**(Goavinthaa 4 Times)**

# Krishnan

## YouTube Id: 41-Y2bpes0M Maadu Maeikkum Kannae

***This song was composed by Oothukadu Venkata Kavi, an 18th-century renowned classical Carnatic musician.** He created beautiful melodies with a deep love for Krishnaa. This song is constructed in the style of a discussion between Krishnaa and his mother Yasoathaa, in which Yasoathaa asks Krishnaa not to go outside to play. In response, little Krishnaa convinces his mom and asks her not to stop him.*

**மாடு மேய்க்கும் கண்ணே - நீ**
**போக வேண்டாம் சொன்னேன்! (மாடு)**

காய்ச்சின பாலும் தரேன்
கல்கண்டு சீனி தரேன் **(காய்ச்சின)**
கை நிறைய வெண்ணெய் தரேன்
வெய்யிலிலே போக வேண்டாம் **(மாடு)**

காய்ச்சின பாலும் வேண்டாம்
கல்கண்டு சீனி வேண்டாம் **(காய்ச்சின)**
உல்லாசமாய் மாடு மேய்த்து
ஒரு நொடியில் திரும்பிடுவேன்
போகவேணும் தாயே, தடை சொல்லாதே நீயே!

யமுனா நதிக் கரையில்
எப்பொழுதும் கள்வர் பயம் **(யமுனா)**
கள்வர் வந்து உனை அடித்தால்
கலங்கிடுவாய் கண்மணியே **(மாடு மேய்க்கும்)**

கள்வனுக்கோர் கள்வன் உண்டோ?
கண்டதுண்டோ சொல்லும் அம்மா? **(கள்வ)**
கள்வர் வந்து எனை அடித்தால்
கண்ட துண்டம் ஆக்கிடுவேன்
போகவேணும் தாயே, தடை சொல்லாதே நீயே!

கோவர்த்தன கிரியில்
கோரமான மிருகங்கள் உண்டு **(கோவர்த்தன)**
சிங்கம் புலி கரடி வந்தால்
கலங்கிடுவாய் கண்மணியே **(மாடு மேய்க்கும்)**

காட்டு மிருகங்கள் எல்லாம்
என்னைக் கண்டால் ஓடி வரும் **(காட்டு)**
கூட்டமாக ஓடி வந்தால்
வேட்டை ஆடி வென்றிடுவேன்
போகவேணும் தாயே, தடை சொல்லாதே நீயே!

பிரியமுள்ள நந்தகோபர்
பாலன் எங்கே என்று கேட்டால் **(பிரியமுள்ள)**
என்னவென்று சொல்லிடுவேன்
ஏக்கமுடன் தேடிடுவார் **(மாடு மேய்க்கும்)**

வீதியிலே பாலருடன்
பந்து விளையாடுகிறேன் **(வீதியிலே)**
கண்ணே என்று குரல் கொடுத்தால்
ஓடி வந்து நின்றிடுவேன்
போகவேணும் தாயே, தடை சொல்லாதே நீயே!

**Maadu Maeikkum Kannae - Nee**
**Poaga Vaendaam Sonnaen! (Maadu Maeikkum)**

Kaaicchina Paalum Tharaen
Kalkandu Cheeni Tharaen **(Kaaicchina)**
Kai Niraiya Vennei Tharaen
Veiyyililae Poaga Vaendaam **(Maadu Maeikkum)**

Kaaicchina Paalum Vaendaam
Kalkandu Cheeni Vaendaam **(Kaaicchina)**
Ullaasamaai Maadu Maeitthu
Oru Nodiyil Thirumbiduvaen
Poagavaenum Thaayae, Thadai Sollaathae Neeyae!

Yamunaa Nathik Karaiyil
Eppozhuthum Kalvar Bayam **(Yamunaa)**
Kalvar Vanthu Unai Aditthaal
Kalangiduvaai Kanmaniyae **(Maadu Maeikkum)**

Kalvanukkoar Kalvan Undoa?
Kandathundoa Sollum Ammaa? **(Kalvanukkoar)**
Kalvar Vanthu Enai Aditthaal
Kanda Thundam Aakkiduvaen
Poagavaenum Thaayae, Thadai Sollaathae Neeyae!

Goavartthana Giriyil
Ghoaramaana Mirugangal Undu **(Goavarthana)**
Singam Puli Karadi Vanthaal
Kalangiduvaai Kanmaniyae **(Maadu Maeikkum)**

Kaattu Mirugangal Ellaam
Ennaik Kandaal Oadi Varum **(Kaattu)**
Koottamaaga Oadi Vanthaal
Vaettai Aadi Vendriduvaen
Poagavaenum Thaayae, Thadai Sollaathae Neeyae!

Piriyamulla Nanthagoapar
Baalan Engae Endru Kaettaal **(Piriyamulla)**
Ennavendru Solliduvaen
Aekkamudan Thaediduvaar **(Maadu Maeikkum)**

Veethiyilae Baalarudan
Panthu Vilaiyaadugiraen **(Veethiyilae)**
Kannae Endru Kural Kodutthaal
Oadi Vanthu Nindriduvaen
Poagavaenum Thaayae, Thadai Sollaathae Neeyae!

# Krishnan

***Here are some gems from Kaviyarasar Kannathaasan's "Krishna Gaanam" Collection!*** *If his bond with Krishnan could be compared to that of Bhaarathiyaar, his passion could match that of Aandaal. The mystic poetry of Aandaal "Thiruppaavai" had a lasting impact on him, and he renamed himself as Kannathaasan!*

YouTube Id: wUitrcZnUUI

## Guruvaayoorukku Vaarungal

**குருவாயூருக்கு வாருங்கள்**
**ஒரு குழந்தை சிரிப்பதைப் பாருங்கள்**
**ஒருவாய் சோறூட்டும் தாயின் முன்**
**உட்கார்ந்திருப்பதைக் காணுங்கள்!**

கண்ணனின் மேனி கடல் நீலம்
அவன் கண்களிரண்டும் வான் நீலம்
கடலும் வானும் அவனே என்பதைக்
காட்டும் குருவாயூர்க் கோலம்! **(குருவா..)**

சந்தியா காலத்தில் நீராடி அவன்
சந்நிதி வருவார் ஒரு கோடி
மந்திரக் குழந்தைக்கு வாகை சாட்டு
மாலைகள் இடுவார் குறை ஒடி! **(குருவா..)**

உச்சிக்காலத்தில் சிருங்காரம் அவன்
ஒவ்வொரு அழகுக்கும் அலங்காரம்
பச்சைக் குழந்தையைப் பார்க்கும் போதே
பாவையர் தாய்மை ரீங்காரம்! **(குருவா..)**

மாலை நேரத்தில் ஸ்ரீ வேலி
அவன் மாளிகை முழுவதும் நெய்வேலி
நெய்விளக்கேற்றி பொய்யிருள் அகற்று
நித்தம் தருவாள் ஸ்ரீதேவி! **(குருவா..)**

சாத்திரம் தந்த கண்ணனுக்கு
ராத்திரி பூஜை ஜகஜோதி
பாத்திரம் கண்ணன் பால் போல்
மக்கள் பக்தியில் பிறந்த உயர்நீதி! **(குருவா..)**

**நாராயண நாராயண ஹரி ஹரி**
**நாராயண நாராயண! (4 முறை)**

**Guruvaayoorukku Vaarungal**
**Oru Kuzhanthai Sirippathaip Paarungal**
**Oruvaai Soaroottum Thaayin Mun**
**Utkaarnthiruppathaik Kaanungal!**

Kannanin Maeni Kadal Neelam
Avan Kangalirandum Vaan Neelam
Kadalum Vaanum Avanae Enbathaik
Kaattum Guruvaayoork Koalam! **(Guru..)**

Santhiyaa Kaalatthil Neeraadi Avan
Sannithi Varuvaar Oru Koadi
Manthira Kuzhanthaikku Vaagai Saattu
Maalaigal Iduvaar Kurai Oadi! **(Guru..)**

Uchikkaalatthil Sirungaaram Avan
Ovvoru Azhagukkum Alangaaram
Pacchaik Kuzhanthaiyaip Paarkkum Poathae
Paavaiyar Thaaimai Reengaaram! **(Guru..)**

Maalai Naeratthil Sree Vaeli
Avan Maaligai Muzhuvathum Neivaeli
Neivilakkaettri Poiyyirul Agattru
Nittham Tharuvaal Sreethaevi! **(Guru..)**

Saatthiram Thantha Kannanukku
Raatthiri Poojai Jagajoathi
Paatthiram Kannan Paal Poal
Makkal Bakthiyil Pirantha Uyarneethi! **(Guru..)**

**Naaraayana Naaraayana Hari Hari**
**Naaraayana Naaraayana! (4 Times)**

---

YouTube Id: OQM7SEby7nc

## Aayarpaadi Maaligaiyil

**ஆயர்பாடி மாளிகையில்**
**தாய் மடியில் கன்றினைப் போல்**
**மாயக் கண்ணன் தூங்குகின்றான்...**
**தாலேலோ!**
அவன் வாய் நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தைக் காட்டியபின்
ஒய்வெடுத்துத் தூங்குகின்றான்...
ஆராரோ!
**(ஆயர்பாடி மாளிகையில்)**

**Aayarpaadi Maaligaiyil**
**Thaai Madiyil Kandrinaip Poal**
**Maayak Kannan Thoongugindraan...**
**Thaalaeloa!**
Avan Vaai Niraiya Mannai Undu
Mandalatthaik Kaattiyapin
Oaiveduthuth Thoongugindraan...
Aaraaroa!
**(Aayarpaadi Maaligaiyil)**

பின்னலிட்ட கோபியரின்
கன்னத்திலே கன்னமிட்டு
மன்னவன் போல் லீலை செய்தான்...
தாலேலோ!
அந்த மந்திரத்தில் அவர் உறங்க
மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா...
ஆராரோ! **(மண்டலமே)**
நாகப்படம் மீதிலவன்
நர்த்தனங்கள் ஆடியதில்
தாகமெல்லாம் தீர்த்துக் கொண்டான்...
தாலேலோ!
அவன் மோக நிலை கூட
ஒரு யோக நிலை போலிருக்கும்
யாரவனைத் தூங்கவிட்டார்...
ஆராரோ! **(யாரவனை)**
கண்ணனவன் தூங்கி விட்டால்
காசினியே தூங்கி விடும்
அன்னையரே துயிலெழுப்ப வாரீரோ!
அவன் பொன்னழகைப் பார்ப்பதற்கும்
போதை முத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ! **(கன்னி..)**
**(ஆயர்பாடி மாளிகையில்)**

Pinnalitta Goapiyarin
Kannatthilae Kannamittu
Mannavan Poal Leelai Seithaan...
Thaalaeloa!
Antha Manthiratthil Avar Uranga
Mayakkathilae Ivan Uranga
Mandalamae Uranguthammaa...
Aaraaroa! **(Mandalamae)**
Naagappadam Meethilavan
Nartthanangal Aadiyathil
Dhaagamellaam Theerthuk Kondaan...
Thaalaeloa!
Avan Moaga Nilai Kooda
Oru Yoaga Nilai Poalirukkum
Yaaravanaith Thoongavittaar...
Aaraaroa! **(Yaaravanai)**
Kannanavan Thoongi Vittaal
Kaasiniyae Thoongi Vidum
Annaiyarae Thuyilezhuppa Vaareeroa!
Avan Ponnazhagaip Paarppatharkkum
Boathai Muttham Peruvatharkkum
Kanniyarae Goapiyarae Vaareeroa! **(Kanni..)**
**(Aayarpadi Maaligaiyil)**

---

YouTube Id: dEXQv00Tur0

## Pullaanguzhal Koduttha

**புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே**
**எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களே!**
வண்டாடும் கங்கை மலர்த் தோட்டங்களே
எங்கள் மதுசூதனன் புகழ் பாடுங்களே!
**(புல்லாங்குழல்)**
பன்னீர் மலர் சொரியும் மேகங்களே
எங்கள் பரந்தாமன் விழி அழகைப் பாடுங்களே
தென்கோடித் தென்றல் தரும் ராகங்களே
எங்கள் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி
புகழ் பாடுங்களே! **(எங்கள் ஸ்ரீகிருஷ்ண)**
**(புல்லாங்குழல்)**
குருவாயூர் தன்னில் அவன் தவழ்கின்றவன்
ஒரு கொடியோடு மதுராவை ஆள்கின்றவன்
அந்தத் திருவேங்கடத்தில்
அவன் அருள்கின்றவன்
அந்த ஸ்ரீரங்கத்தில் பள்ளி
கொள்கின்றவன்! **(அந்த ஸ்ரீரங்கத்தில்)**
**(புல்லாங்குழல்)**
பாஞ்சாலி புகழ் காக்கத் தன் கை கொடுத்தான்
அந்த பாரதப் போர்முடிக்க சங்கை எடுத்தான்
பாண்டவர்க்கு உரிமையுள்ள
பங்கைக் கொடுத்தான்
நாம் படிப்பதற்குக் கீதை எனும்
பாடம் கொடுத்தான்! **(நாம் படிப்பதற்கு)**
**(புல்லாங்குழல்)**

**Pullaanguzhal Koduttha Moongilgalae**
**Engal Purushoatthaman Pugazh Paadungalae!**
Vandaadum Gangai Malarth Thoattangalae
Engal Mathusoothanan Pugazh Paadungalae!
**(Pullaanguzhal)**
Panneer Malar Soriyum Maegangalae
Engal Paranthaaman Vizhi Azhagaip Paadungalae
Thenkoadith Thendral Tharum Raagangalae
Engal Sreekrishna Moorthi
Pugazh Paadungalae! **(Engal Sreekrishna)**
**(Pullaanguzhal)**
Guruvaayoor Thannil Avan Thavazhgindravan
Oru Kodiyoadu Mathuraavai Aalgindravan
Anthath Thiruvaengadatthil
Avan Arulgindravan
Antha Sreerangatthil Palli
Kolgindravan! **(Antha Sreerangatthil)**
**(Pullaanguzhal)**
Paanjaali Pugazh Kaakkath Than Kai Kodutthaan
Antha Baarathap Poarmudikka Sangai Edutthaan
Paandavarkku Urimaiyulla
Pangaik Kodutthaan
Naam Padippatharkkuk Keethai Enum
Paadam Kodutthaan! **(Naam Padippatharkku)**
**(Pullaanguzhal)**


Sakthi


Aiyappan

# Krishnan

**YouTube Id: GoaaVM80XSw** **Theeraatha Vilayaattup Pillai**

*Mahaakavi Baarathiyaar, through his play of words, has magically captured the playfulness of Lord Krishnaa in this piece of a gem!*

**தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்**
**தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை!**
**(தீராத)**

தின்னப் பழம் கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்!
**(தீராத)**
தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழும் நேரத்திலே கிள்ளி விடுவான்!
**(தீராத)**
அழகுள்ள மலர்கொண்டு வந்தே - என்னை
அழ அழச்செய்து பின் “கண்ணை மூடிக்கொள்
குழலிலே சூட்டுவேன்” என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்!
**(தீராத)**
பின்னலைப் பின்னின்று இழுப்பான் - தலை
பின்னே திரும்புமுன்னே சென்று மறைவான்
வண்ணப் புதுச்சேலை தனிலே - புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்!
**(தீராத)**
புல்லாங்குழல் கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்பு நற்கீதம் படிப்பான்
கள்ளர் மயங்குவது போலே அதைக்
கண்மூடி வாய் திறந்தே கேட்டிருப்போம்!
**(தீராத)**
அங்காந்திருக்கும் வாய் தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும்பைப் போட்டு விடுவான்
எங்காகிலும் பார்த்தது உண்டோ? கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை ஒன்றோ?
**(தீராத)**
விளையாட வாவென்று அழைப்பான் - வீட்டில்
வேலை என்றால் அதைக் கேளாதிழுப்பான்
இளையாரொடு ஆடிக் குதிப்பான் - எம்மை
இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான்!
**(தீராத)**
அம்மைக்கு நல்லவன் கண்டீர்! மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கும் அஃதே
எம்மைத் துயர் செய்யும் பெரியோர் - வீட்டில்
யாவர்க்கும் நல்லவன் போலே நடப்பான்!
**(தீராத)**
கோளுக்கு மிகவும் சமர்த்தன் - பொய்மை
சூத்திரம் பழிசொலக் கூசாக் சழக்கன்
ஆளுக்கு இசைந்தபடி பேசித் - தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகாதடிப்பான்!
**(தீராத)**

**Theeraatha Vilayaattup Pillai – Kannan**
**Theruvilae Pengalukku Oayaatha Thollai!**
**(Theeraatha)**

Thinnap Pazham Kondu Tharuvaan – Paathi
Thingindra Poathilae Thattip Parippaan
Ennappan Ennaiyan Endraal – Athanai
Ecchir Paduthik Kaditthuk Koduppaan!
**(Theeraatha)**
Thaenottha Pandangal Kondu – Enna
Seithaalum Ettaatha Uyaratthil Vaippaan
Maanottha Pennadi Enbaan – Sattru
Manamagizhum Naeratthilae Killi Viduvaan!
**(Theeraatha)**
Azhagulla Malarkondu Vanthae – Ennai
Azha Azhaccheithu Pin “Kannai Moodikkol
Kuzhalilae Choottuvaen” Enbaan – Ennaik
Kurudaakki Malarinaith Thoazhikku Vaippaan!
**(Theeraatha)**
Pinnalaip Pinnindru Izhuppaan – Thalai
Pinnae Thirumbumunnae Chendru Maraivaan
Vannap Puthucchaelai Thanilae – Puzhuthi
Vaaricchorinthae Varutthik Kulaippaan!
**(Theeraatha)**
Pullaanaguzhal Kondu Varuvaan – Amuthu
Pongith Thathumbum Narkkeetham Padippaan
Kallar Mayanguvathu Poalae Athaik
Kanmoodi Vaai Thiranthae Kaettiruppoam!
**(Theeraatha)**
Angaanthirukkum Vaai Thanilae – Kannan
Aaraezhu Katterumbaip Paottu Viduvaan
Engaagilum Paartthathu Undoa? Kannan
Engalaich Cheigindra Vaedikkai Ondroa!
**(Theeraatha)**
Vilaiyaada Vaavendru Azhaippaan – Veettil
Vaelai Endraal Athaik Kaelaathizhuppaan
Ilaiyaarodu Aadik Kuthippaan – Emmai
Idayirp Pirinthupoai Veetilae Solvaan!
**(Theeraatha)**
Ammaikku Nallavan Kandeer! Mooli
Atthaikku Nallavan, Thanthaikkum Ahthae
Emmaith Thuyar Seiyum Periyoar – Veettil
Yaavarkkum Nallavan Poalae Nadappaan!
**(Theeraatha)**
Koalukku Migavum Samartthan – Poimai
Sootthiram Pazhisolak Koosaach Chazhakkan
Aalukku Isainthapadi Paesith – Theruvil
Atthanai Pengalaiyum Aagaathadippaan!
**(Theeraatha)**

# Krishnan

## YouTube Id: bXZOcjqCY-8 Kaakkaich Chiraginilae

***Another one of Baarathiyaar's most popular and classic poems is "Kaakkaich Chiraginile" (in the feathers of a crow).*** *The beautiful lyrics were made immortal by the melodious music of L Vaidyanathan and the sonorous voice of KJ Yesudas in the film "Aezhaavathu Manithan".*

காக்கைச் சிறகினிலே
நந்தலாலா - நின்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா!
பார்க்கும் மரங்களெல்லாம்
நந்தலாலா - நின்றன்
பச்சைநிறம் தோன்றுதையே நந்தலாலா!
கேட்கும் ஒலியிலெல்லாம்
நந்தலாலா - நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா!
தீக்குள் விரலை வைத்தால்
நந்தலாலா - நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா!

Kaakkaich Chiraginilae
Nanthalaalaa - Nindran
Kariyaniram Thoandruthaiyae Nanthalaalaa!
Paarkkum Marangalellaam
Nanthalaalaa - Nindran
Pacchainiram Thoandruthaiyae Nanthalaalaa!
Kaetkkum Oliyilellaam
Nanthalaalaa - Nindran
Geetham Isaikkuthadaa Nanthalaalaa!
Theekkul Viralai Vaitthaal
Nanthalaalaa - Ninnaith
Theenduminbam Thoandruthadaa Nanthalaalaa!

## YouTube Id: MC-oZ7uQ2rI Chinnach Chinna Patham

**சின்னச் சின்ன பதம் வைத்துக்
கண்ணா நீ வா வா வா
மணிவண்ணா நீ வா வா வா
வண்ண வண்ண உடை உடுத்திக்
கண்ணா நீ வா வா வா
மணிவண்ணா நீ வா வா வா! (சின்ன)**

மல்லிகை முல்லை மலராலே
அர்ச்சனை செய்வோம் நீ வா வா வா
மாதவனே ஆதவனே
யாதவனே நீ வா வா வா! **(சின்ன)**
திரௌபதி மானம் காத்தவனே
தீனசரண்யா நீ வா வா வா
காலமெல்லம் உன்னருளை
வேண்டுகிறொம் நீ வா வா வா! **(சின்ன)**
கண்ணில் தெரியும் காட்சியெல்லாம்
கமலக்கண்ணா உன் தோற்றம்
கண்ணழகா மணிவண்ணா
கண்ணா நீ வா வா வா! **(சின்ன)**

**Chinnach Chinna Patham Vaitthuk
Kannaa Nee Vaa Vaa Vaa
Manivannaa Nee Vaa Vaa Vaa
Vanna Vanna Udai Udutthik
Kannaa Nee Vaa Vaa Vaa
Manivannaa Nee Vaa Vaa Vaa! (Chinna)**

Malligai Mullai Malaraalae
Arcchanai Seivoam Nee Vaa Vaa Vaa
Maathavanae Aathavanae
Yaathavanae Nee Vaa Vaa Vaa! **(Chinna)**
Dhraupathi Maanam Kaatthavanae
Dheenasaranyaa Nee Vaa Vaa Vaa
Kaalamellaam Unnarulai
Vaendugiroam Nee Vaa Vaa Vaa! **(Chinna)**
Kannil Theriyum Kaatchiyellaam
Kamalakkannaa Un Thoattram
Kannazhagaa Manivannaa
Kannaa Nee Vaa Vaa Vaa! **(Chinna)**

## YouTube Id: MjMsBPAj6EQ Raama Naama Thaaragam

***'Thaaraga Manthiram'*** *helps us cross the ocean of 'Samsaaraa' and the cycles of birth & death.*

**ராமராம ராமராம
ராமநாம தாரகம்
ராமகிருஷ்ண வாசுதேவ
பக்திமுக்தி தாயகம்!**
ஜானகி மனோகரம் சர்வலோக நாயகம்
சங்கராதி சேவ்யமான புண்யநாம கீர்த்தனம்!
**(ராமராம)**
வீரசூர வந்திதம் ராவணாதி நாசகம்
ஆஞ்சநேய ஜீவநாம ராஜமந்த்ர ரூபகம்!
**(ராமராம)**

**Raamaraama Raamaraama
Raamanaama Thaaragam
Raamakrishna Vaasudeva
Bakthimukthi Thaayagam!**
Jaanaki Manoaharam Sarvaloaga Naayagam
Sankaraathi Saevyamaana Punyanaama Keertthanam!
**(Raamaraama)**
Veerasoora Vanthitham Raavanaathi Naasakam
Aanjanaeya Jeevanaama Raajamanthra Roopakam!
**(Raamaraama)**


Sakthi


Aiyappan

# Krishnan

YouTube Id: B-4rwaN6m4I **Kurai Ondrum Illai**

*"Kurai Ondrum Illai" (I have no grievances) is a song written by C. Rajagopalachari, fondly known as Rajaji.* *The song set in Carnatic music was written in gratitude to Lord Krishnaa, visualized as a compassionate mother. The song became very famous after it was sung by MS Subbulakshmi.*

**குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா**
**குறை ஒன்றும் இல்லை கண்ணா!**
**குறை ஒன்றும் இல்லை கோவிந்தா!**

கண்ணுக்குத் தெரியாமல்
நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல்
நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா!

வேண்டியதைத் தந்திட
வேங்கடேசன் நின்றிருக்க
வேண்டியது வேறில்லை
மறைமூர்த்தி கண்ணா!
மணிவண்ணா! மலையப்பா!
கோவிந்தா! கோவிந்தா!

திரையின் பின் நிற்கின்றாய்
கண்ணா! **(திரையின்)**
உன்னை மறை ஓதும் ஞானியர்
மட்டுமே காண்பார்! **(உன்னை)**
என்றாலும் குறை ஒன்றும்
எனக்கில்லை கண்ணா!

குன்றின் மேல் கல்லாகி
நிற்கின்ற வரதா! **(குன்றின்)**
குறை ஒன்றும் இல்லை
மறை மூர்த்தி கண்ணா! **(குறை)**
மணிவண்ணா! மலையப்பா!
கோவிந்தா! கோவிந்தா!

கல்லினார்க்கு இறங்கி கல்லிலே இறங்கி
சிலையாகக் கோவிலில்
நிற்கின்றாய் கேசவா! **(சிலை)**
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா!

யாரும் மறுக்காத மலையப்பா
உன் மார்பில் **(யாரும்)**
ஏதும் தர நிற்கும் கருணைக் கடலன்னை
என்றும் இருந்திட
ஏது குறை எனக்கு **(என்றும்)**
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா!
மணிவண்ணா! மலையப்பா!
கோவிந்தா! கோவிந்தா!

**Kurai Ondrum Illai Maraimoortthi Kannaa**
**Kurai Ondrum Illai Kannaa!**
**Kurai Ondrum Illai Goavinthaa!**

Kannukkuth Theriyaamal
Nirkkindraai Kannaa
Kannukkuth Theriyaamal
Nindraalum Enakku
Kurai Ondrum Illai Maraimoortthi Kannaa!

Vaendiyathaith Thanthida
Vaenkataesan Nindrirukka
Vaendiyathu Vaerillai
Maraimoortthi Kannaa!
Manivannaa! Malaiyappaa!
Goavinthaa! Goavinthaa!

Thiraiyin Pin Nirkkindraai
Kannaa **(Thiraiyin)**
Unnai Marai Oathum Gnaaniyar
Mattumae Kaanbaar **(Unnai)**
Endraalum Kurai Ondrum
Enakkillai Kannaa!

Kundrin Mael Kallaagi
Nirkkindra Varathaa **(Kundrin)**
Kurai Ondrum Illai
Marai Moortthi Kannaa! **(Kurai)**
Manivannaa! Malaiyappaa!
Goavinthaa! Goavinthaa!

Kallinaarkku Irangi Kallilae Irangi
Silaiyaagak Koavilil
Nirkkindraai Kaesavaa **(Silaiyaaga)**
Kurai Ondrum Illai Maraimoortthi Kannaa!

Yaarum Marukkaatha Malaiyappa
Un Maarbil **(Yaarum)**
Aethum Thara Nirkkum Karunaik Kadalannai
Endrum Irunthida
Aethu Kurai Enakku **(Endrum)**
Kurai Ondrum Illai Maraimoortthi Kannaa!
Manivannaa! Malaiyappaa!
Goavinthaa! Goavinthaa!

# Aiyappan

***Here is one holy celebration of Lord Aiyappan!***

***Makara Vilakku (Jan)*** *is an annual festival held on Makara Sankaraanthi (Pongal) at the Sabarimalai Temple. The festival includes the Thiru Aabharanam (sacred ornaments) procession and a congregation at Sabarimalai. It has been practiced since the past by the Malaya Raayaa tribe who are believed to be the descendants of Malayamaan Kaari in the forest of Ponnambala Maedu (the place where Makara Vilakku appears).*

YouTube Id: 2CNBmiThnQY

## Bhagavaan Charanam

**பகவான் சரணம், பகவதி சரணம்**
**சரணம் சரணம் ஐயப்பா!**
**பகவதி சரணம், பகவான் சரணம்**
**சரணம் சரணம் ஐயப்பா!**

அகமும் குளிரவே அழைத்திடுவோமே
சரணம் சரணம் ஐயப்பா!
பகலும் இரவும் உன் நாமமே
ஸ்மரணம் ஸ்மரணம் ஐயப்பா!
கரிமலை வாசா பாப வினாசா
சரணம் சரணம் ஐயப்பா!
கருத்தினில் வருவாய்
  கருணையைப் பொழிவாய்
சரணம் சரணம் ஐயப்பா! **(பகவான்)**

மஹிஷி சம்ஹாரா மதகஜ வாகனா
சரணம் சரணம் ஐயப்பா!
சுகுண விலாசா சுந்தர ரூபா
சரணம் சரணம் ஐயப்பா!
பாலபிஷேகம் உனக்கப்பா - இந்த
பாலனைக் கடைக்கண் பாரப்பா!
ஆறு வாரமே நோன்பிருந்தோம்
பேரழகா உனைக் காணவந்தோம்! **(பகவான்)**

இருமுடிக்கட்டு சபரிமலைக்கு
சபரிமலைக்கு இருமுடிக்கட்டு!
நெய்யபிஷேகம் சுவாமிக்கே
சுவாமிக்கே நெய்யபிஷேகம்!
முத்திரைத் தேங்காய் உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எனக்கப்பா
கற்பூர தீபம் உனக்கப்பா - உன்
பொற்பத மலர்கள் எனக்கப்பா! **(பகவான்)**

நெய்யபிஷேகம் உனக்கப்பா - உன்
திவ்ய தரிசனம் எனக்கப்பா
தையினில் வருவோம் ஐயப்பா
அருள் செய்யப்பா, மனம் வையப்பா!
தேவன் பாதம் தேவி பாதம்
சேவடி சரணம் ஐயப்பா
நாவினில் தருவாய் கீதமப்பா
தேவை உன்திருப் பாதமப்பா! **(பகவான்)**

**Bhagavaan Charanam, Bhagavathi Charanam**
**Charanam Charanam Aiyappaa!**
**Bhagavathi Charanam, Bhagavaan Charanam**
**Charanam Charanam Aiyappaa!**

Agamum Kuliravae Azhaitthiduvoamae
Charanam Charanam Aiyappaa
Pagalum Iravum Un Naamamae
Smaranam Smaranam Aiyappaa!
Karimalai Vaasaa Paabha Vinaasaa
Charanam Charanam Aiyappaa
Karutthinil Varuvaai
  Karunayaip Pozhivaai
Charanam Charanam Aiyappaa! **(Bhagavaan)**

Mahishi Samhaaraa Mathagaja Vaahanaa
Charanam Charanam Aiyappaa
Suguna Vilaasaa Sunthara Roopaa
Charanam Charanam Aiyappaa!
Paalabishaegam Unakkappaa - Intha
Baalanaik Kadaikkan Paarappaa
Aaru Vaaramae Noanbirunthoam
Paerazhagaa Unaik Kaanavanthoam! **(Bhaga..)**

Irumudikkattu Sabarimalaikku
Sabarimalaikku Irumudikkattu!
Neiyabishaegam Swaamikkae
Swaamikkae Neiyabishaegam!
Mutthiraith Thaengaai Unakkappaa
Thitthikkum Naamam Enakkappaa
Karppoora Dheepam Unakkappaa - Un
Porppaatha Malargal Enakkappaa! **(Bhaga..)**

Neiyabishaegam Unakkappaa - Un
Dhivya Tharisanam Enakkappaa
Thaiyinil Varuvoam Aiyappaa
Arul Seiyappaa - Manam Vaiyappaa!
Thaevan Paatham Thaevi Paatham
Saevadi Charanam Aiyappaa
Naavinil Tharuvaai Geethamappaa!
Thaevai Unthirup Paathamappaa! **(Bhagavaan)**


Vishnu

# Aiyappan


Others

## YouTube Id: HYF_dr0f798 Harivaraasanam in Tamil

***Harivaraasanam is a Manippravaalam (Sanskritised Malayaalam) Ashtakam sung for Aiyappan at the Sabarimala Temple.*** *The song became popular through the 1st stanza in the Keerthanam known as Hariharaathmaja Ashtakam. The song was written by Konnakath Janakiyamma in 1923. It is sung every night when the temple doors are closed after performing the Athazhapooja - serving the last meal of the day to Aiyyappan. It is known as the Urakku Paattu - or the song that sends Aiyappan to sleep. In 1975, the song became popular when it appeared in the famous Malayalam Film Swaami Aiyappan, with music from Devarajan Master and sung by KJ Yesudas.*

**சரணம் ஐயப்பா! சரணம் ஐயப்பா!**
**சரணம் ஐயப்பா! சுவாமி சரணம் ஐயப்பா!**

உன்னதமான சிம்மாசனத்திலே
ஐயன் உலகை மயக்கிடும் புன்னகை வீச
பரிரதம் மீதில் வருகின்ற பரிதி
ஐயன் ஐயனின் பாதம் பூஜிப்பான்!
**(சரணம்)**
எதிரியை அழித்து ஆனந்த நடனம்
செய்திடும் எந்தன் ஐயப்ப சுவாமி
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**
சரண கோஷத்தை கேட்பதனாலே
மனதினில் மகிழ்ச்சி அடையும் சுவாமியே
உலகினைக் காத்து ரட்சித்து அருளி
உளம்தனில் நின்று நடமாடும் சுவாமியே!
**(சரணம்)**
அருணோதயத்தை போல் ஒளி மயமான
ஜோதி உடையவன் எந்தன் பூத நாயகன்
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**
சத்ய நாதனின் பிரிய நாயகன்
தன்னைச் சரணடைந்தோர்க்கு
கற்பகம் இவனே
ஒளிமிகும் வடிவம் தனமருளும் ஆற்றலும்
உடையவன் எந்தன் ஐயப்ப சுவாமி!
**(சரணம்)**
ஓம்காரம் என்னும் பிரணவ ரூபமே
இசைகளின் மீது காதல் கொண்ட நாதமே
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**
வெள்ளைக்குதிரையாம் வாகனம் மீதில்
ஏறி பவனி வந்திடும் அழகு நாயகா
கதையும் பானமும் ஏந்தும் பாலகா
வேதங்கள் போற்றும் எந்தன் சத்யசாகரா!
**(சரணம்)**

**Charanam Aiyappaa! Charanam Aiyappaa!**
**Charanam Aiyappaa! Swaami Charanam Aiyappaa!**

Unnathamaana Simmaasanatthilae
Aiyan Ulagai Mayakkidum Punngai Veesa
Pariratham Meethil Varugindra Parithi
Aiyan Aiyanin Paatham Poojippaan!
**(Charanam)**
Ethiriyai Azhitthu Aanantha Nadanam
Seithidum Enthan Aiyappa Swaami
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**
Charana Koashatthai Kaetpathanaalae
Manathinil Magizhcchi Adaiyum Swaamiyae
Ulaginaik Kaatthu Ratchitthu Aruli
Ulamthanil Nindru Nadamaadum Swaamiyae!
**(Charanam)**
Arunoathayatthaip Poal Oli Mayamaana
Joathi Udaiyavan Enthan Bhootha Naayagan
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**
Sathya Naathanin Piriya Naayagan
Thannaich Charanadainthoarkku
Karppagam Ivanae
Olimigum Vadivam Thanamarulum Aattralum
Udaiyavan Enthan Aiyappa Swaami!
**(Charanam)**
Oamkaaram Ennum Pranava Roopamae
Isaigalin Meethu Kaathal Konda Naathame
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**
Vellaik Kuthiraiyaam Vaaganam Meethil
Aeri Bhavani Vanthidum Azhagu Naayagaa
Gathaiyum Paanamum Aenthum Baalagaa
Vaethangal Poattrum Enthan Sathyasaagaraa!
**(Charanam)**

குருவினைப் போலே பிரியமானவன்
கானங்கள் மீதும் மோகம் கொண்டவன்
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**
மூன்று புவனமும் பூஜித்து வணங்கும்
சகல தெய்வத்தின் அம்சமானவன்
முப்பத்து முக்கோடி தேவர்களாலும்
பூஜிக்கும் எங்கள் வரம்தரும் ஐயன்!
**(சரணம்)**
மூன்று கண்களைக்
கொண்ட நாதனானவன்
வேத ரூபமாய் விளங்கும் சீலனானவன்
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**
சம்சார சாகரமென்னும்
    பயத்தை அழிப்பவன்
தந்தையைப் போல
    அடியார்க்கு அருள்பவன்
உலகம் முழுதையும் தன் மாயையினாலே
மோகிக்கச் செய்து
    மகிழ்ச்சி கொள்பவன்!
**(சரணம்)**
திருநீரு தரித்து
வெள்ளை யானை மீதினில்
பவனி வந்திடும் எந்தன் ஐயனாம்
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**
மதுரம் மிகுந்த மிருதுவான புன்னகை
வீசும் அழகியமுகமும் கொண்ட ஐயனே
இளமை மென்மையும் மயங்க வைத்திடும்
மோகன ரூபம் கொண்ட பாலனே!
**(சரணம்)**
யானை வாகனம் சிம்ம வாகனம்
குதிரை வாகனம் ஏறி பவனி வருபவன்
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**
ஜனங்களின் மீது பிரியம் கொண்டவன்
நினைத்ததை உடனே அளிக்க வல்லவன்
வேதங்கள் நான்கும்
    அவன் அணிகலனாகும்
ஆகமப் பரம்பொருளாகப்
    போற்றும் வேத நாயகன்
அந்த ஹரிஹரசுதனை ஐயன் ஐயனை
சரணடைகின்றேன் சரணம் ஐயப்பா!
**(சரணம்)**

Guruvinaip Poalae Piriyamaanavan
Gaanangal Meethum Moagam Kondavan
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**
Moondru Bhuvanamum Poojitthu Vanangum
Sagala Theivatthin Amsamaanavan
Muppatthu Mukkoadi Thaevargalaalum
Poojikkum Engal Varamtharum Aiyan!
**(Charanam)**
Moondru Kangalaik
Konda Naathanaanavan
Vaetha Roopamaai Vilangum Seelanaanavan
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**
Samsaara Saagaramennum
    Bayatthai Azhippavan
Thanthaiyaip Poala
    Adiyaarkku Arulbavan
Ulagam Muzhuthaiyum Than Maayaiyinaalae
Moagikkach Cheithu
    Magizhchi Kolbavan!
**(Charanam)**
Thiruneeru Tharitthu
Vellai Yaanai Meethinil
Bhavani Vanthidum Enthan Aiyanaam
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**
Mathuram Miguntha Miruthuvaana Punnagai
Veesum Azhagiyamugamum Konda Aiyanae
Ilamai Menmaiyum Mayanga Vaitthidum
Moagana Roopam Konda Baalanae!
**(Charanam)**
Yaanai Vaaganam Simma Vaaganam
Kuthirai Vaaganam Aeri Bhavani Varubavan
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**
Janangalin Meethu Piriyam Kondavan
Ninaitthathai Udanae Alikka Vallavan
Vaethangal Naangum
    Avan Anigalanaagum
Aagamap Paramporulaagap
    Poattrum Vaetha Naayagan
Antha Hariharasuthanai Aiyan Aiyanai
Charanadaigindraen Charanam Aiyappaa!
**(Charanam)**

# Aiyappan

YouTube Id: zu6Cqc-Gz8w

## Pallikkattu Sabarimalaikku

இருமுடி தாங்கி ஒரு மனதாகி
குருவெனவே வந்தோம்
இருவினை தீர்க்கும் எமனையும் வெல்லும்
திருவடியைக் காண வந்தோம்!

**பள்ளிக்கட்டு சபரிமலைக்கு!**
**கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை!**
**சுவாமியே ஐயப்போ!**
**சுவாமி சரணம்! ஐயப்ப சரணம்!**

நெய்யபிஷேகம் சுவாமிக்கே
கற்பூர தீபம் சுவாமிக்கே
ஐயப்பன் மார்களும் கூடிக்கொண்டு
ஐயனை நாடிச் சென்றிடுவார்
சபரி மலைக்குச் சென்றிடுவார்!
சுவாமியே ஐயப்போ! ஐயப்போ சுவாமியே!

கார்த்திகை மாதம் மாலை அணிந்து
நேர்த்தியாகவே விரதம் இருந்து
பார்த்த சாரதியின் மைந்தனே - உனைப்
பார்க்க வேண்டியே தவமிருந்து **(பார்த்த)**
இருமுடி எடுத்து எரிமேலி வந்து
ஒரு மனதாகிப் பேட்டைத் துள்ளி
அருமை நண்பராம் வாவரைத் தொழுது
ஐயனின் அருள் மலை ஏறிடுவார்!
சுவாமியே ஐயப்போ! ஐயப்போ சுவாமியே!

அழுதை ஏற்றம் ஏறும் போது
ஹரிஹரன் மகனைத் துதித்துச் செல்வார்
வழி காட்டிடவே வந்திடுவார்
ஐயன் வன்புலி ஏறி வந்திடுவார்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணை வருவார்
கரிமலை இறக்கம் வந்த உடனே
திருநதி பம்பையைக் கண்டிடுவார்!
சுவாமியே ஐயப்போ! ஐயப்போ சுவாமியே!

கங்கை நதிப் போல் புண்ணிய
நதியாம் பம்பையில் நீராடி
சங்கரன் மகனைக் கும்பிடுவார்
சஞ்சலமின்றி ஏறிடுவார்
நீலி மலை ஏற்றம்
சிவ பாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே
அருட்காவலனாய் இருப்பார்
தேகபலம் தா பாதபலம் தா **(தேகபலம்)**
தேகபலம் தா என்றால் அவரும்
தேகத்தைத் தந்திடுவார்

Irumudi Thaangi Oru Manathaagi
Guruvenavae Vanthoam
Iruvinai Theerkkum Emanaiyum Vellum
Thiruvadiyaik Kaana Vanthoam!

**Pallikkattu Sabarimalaikku!**
**Kallum Mullum Kaalukku Metthai!**
**Swaamiyae Aiyappoa!**
**Swaami Charanam! Aiyappa Charanam!**

Neiyabishekam Swaamikkae
Karppoora Dheepam Swaamikkae
Aiyappan Maargalum Koodikkondu
Aiyanai Naadich Chendriduvaar
Sabari Malaikkuch Chendriduvaar!
Swaamiyae Aiyappoa! Aiyappoa Swaamiyae!

Kaartthigai Maatham Maalai Aninthu
Naertthiyaagavae Viratham Irunthu
Paarttha Saarathiyin Mainthanae - Unaip
Paarkka Vaendiyae Thavamirunthu **(Paarttha)**
Irumudi Edutthu Erimaeli Vanthu
Oru Manathaagip Paettaith Thulli
Arumai Nanbaraam Vaavaraith Thozhuthu
Aiyanin Arul Malai Aeriduvaar!
Swaamiyae Aiyappoa! Aiyappoa Swaamiyae!

Azhuthai Aettram Aerum Poathu
Hariharan Maganaith Thuthitthuch Chelvaar
Vazhi Kaattidavae Vanthiduvaar
Aiyan Vanpuli Aeri Vanthiduvaar
Karimalai Aettram Kadinam Kadinam
Karunaik Kadalum Thunai Varuvaar
Karimalai Irakkam Vantha Udanae
Thirunathi Pambaiyaik Kandiduvaar!
Swaamiyae Aiyappoa! Aiyappoa Swaamiyae!

Gangai Nathip Poal Punniya
Nathiyaam Pambaiyil Neeraadi
Sankaran Maganaik Kumbiduvaar
Sanjalamindri Aeriduvaar
Neeli Malai Aettram
Siva Baalanum Aettriduvaar
Kaalamellaam Namakkae
Arutkaavalanaai Iruppaar
Thaegabalam Thaa Paathabalam Thaa **(Thaega)**
Thaegabalam Thaa Endraal Avarum
Thaegatthaith Thanthiduvaar

பாதபலம் தா என்றால் அவரும்
பாதத்தைத் தந்திடுவார்
நல்ல பாதையைக் காட்டிடுவார்!
**சுவாமியே ஐயப்போ! ஐயப்போ சுவாமியே!**

சபரி பீடமே வந்திடுவார்
சபரி அன்னையைப் பணிந்திடுவார்
சரங்குத்தி ஆளில் கன்னி மார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரி மலைதனை நெருங்கிடுவார்
பதினெட்டுப் படி மீது ஏறிடுவார்
கதியென்று அவனைச் சரணடைவார்
மதி முகம் கண்டே மயங்கிடுவார்
ஐயனைத் துதிக்கையிலே
தன்னையே மறந்திடுவார்!
**(பள்ளிக்கட்டு சபரிமலைக்கு)**

Paathabalam Thaa Endraal Avarum
Paathatthaith Thanthiduvaar
Nalla Paathaiyaik Kaattiduvaar!
**Swaamiyae Aiyappoa! Aiyappoa Swaamiyae!**

Sabari Peedamae Vanthiduvaar
Sabari Annaiyaip Paninthiduvaar
Sarangutthi Aalil Kanni Maargalum
Saratthinaip Poattu Vanangiduvaar
Sabari Malaithanai Nerungiduvaar
Pathinettup Padi Meethu Aeriduvaar
Kathiyendru Avanaich Charanadaivaar
Mathi Mugam Kandae Mayangiduvaar
Aiyanaith Thuthikkaiyilae
Thannaiyae Maranthiduvaar!
**(Pallikkattu Sabarimalaikku)**

---

## பழநியிலே முருகனுக்கு

பழனியிலே முருகனுக்கு அரகரோகரா
சபரியிலே ஐயனுக்கு சரணம் ஐயப்பா
அரகரோகரா சரணம் ஐயப்பா
அங்கே அரகரோகரா இங்கே சரணம் ஐயப்பா!

பழனியிலே முருகனுக்கு காவடிகட்டு
சபரியிலே ஐயனுக்கு இருமுடிகட்டு
இங்கே சபரியிலே ஐயனுக்கு இருமுடிகட்டு
அங்கே காவடிகட்டு இங்கே இருமுடிகட்டு!

பழனியிலே முருகனுக்கு பாலபிஷேகம்
சபரியிலே ஐயனுக்கு நெய்யபிஷேகம்
இங்கே சபரியிலே ஐயனுக்கு நெய்யபிஷேகம்
அங்கே பாலபிஷேகம் இங்கே நெய்யபிஷேகம்!

பழனியிலே முருகனுக்கு பலப்பல படிகள்
சபரியிலே ஐயனுக்கு பதினெட்டுப் படிகள்
இங்கே சபரியிலே ஐயனுக்கு 18 படிகள்
அங்கே பலப்பல படிகள் இங்கே 18 படிகள்!

பழனியிலே முருகனுக்கு அரகரோகரா
சபரியிலே ஐயனுக்கு சரணம் ஐயப்பா
அங்கே அரகரோகரா இங்கே சரணம் ஐயப்பா
அங்கே காவடிகட்டு இங்கே இருமுடிகட்டு!
அங்கே பாலபிஷேகம் இங்கே நெய்யபிஷேகம்!
அங்கே பலப்பல படிகள் இங்கே 18 படிகள்!

அரகரோகரா சுவாமி அரகரோகரா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
வரணும் ஐயப்பா இங்கே வரணும் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா!

## Pazhaniyilae Muruganukku

Pazhaniyilae Muruganukku Aragaroagaraa
Sabariyilae Aiyanukku Charanam Aiyappaa
Aragaroagaraa Charanam Aiyappaa
Angae Aragaroagaraa Ingae Charanam Aiyappaa!

Pazhaniyilae Muruganukku Kaavadikattu
Sabariyilae Aiyanukku Irumudikattu
Ingae Sabariyilae Aiyanukku Irumudikattu
Angae Kaavadikattu Ingae Irumudikattu!

Pazhaniyilae Muruganukku Paalabishaegam
Sabariyilae Aiyanukku Neiyabishaegam
Ingae Sabariyilae Aiyanukku Neiyabishaegam
Angae Paalabishaegam Ingae Neiyabishaegam!

Pazhaniyilae Muruganukku Palappala Padigal
Sabariyilae Aiyanukku Pathinettup Padigal
Ingae Sabariyilae Aiyanukku Pathinettup Padigal
Angae Palappala Padigal Ingae Pathinettup Padigal!

Pazhaniyilae Muruganukku Aragaroagaraa
Sabariyilae Aiyanukku Charanam Aiyappaa
Angae Aragaroagaraa Ingae Charanam Aiyappaa!
Angae Kaavadikattu Ingae Irumudikattu!
Angae Paalabishaegam Ingae Neiyabishaegam!
Angae Palappala Padigal Ingae 18 Padigal!

Aragaroagaraa Swaami Aragaroagaraa
Charanam Aiyappaa Swaami Charanam Aiyappaa
Varanum Aiyappaa Ingae Varanum Aiyappaa
Charanam Aiyappaa Swaami Charanam Aiyappaa!

# Aiyappan



YouTube Id: 20mYTW5_X5g

## Engae Manakkuthu

**சாமி ஐயப்பா! சரணம் ஐயப்பா!**
**சரணம் ஐயப்பா! சாமி ஐயப்பா!**
**சாமியே ஐயப்போ! ஐயப்போ சாமியே!**
**சாமியே ஐயப்போ! ஐயப்போ சாமியே!**

**எங்கே மணக்குது?**
**சந்தனம் எங்கே மணக்குது?**
**ஐயப்ப சாமி கோவிலிலே**
**சந்தனம் மணக்குது!**
என்ன மணக்குது?
மலையில் என்ன மணக்குது?
இன்பமான ஊதுவத்தி அங்கே மணக்குது
நல்ல இன்பமான ஊதுவத்தி
அங்கே மணக்குது! **(எங்கே மணக்குது)**

எங்கே மணக்குது?
நெய்யும் எங்கே மணக்குது?
வீர மணிகண்டன் சன்னதியில்
நெய்யும் மணக்குது
திருநெய்யும் மணக்குது
பன்னீரும் மணக்குது
ஆண்டவனின் சன்னதியில்
அருளும் மணக்குது
ஐயன்மார்கள் உள்ளத்திலே
அன்பு மணக்குது
இந்த ஐயன்மார்கள் உள்ளத்திலே
அன்பு மணக்குது! **(எங்கே மணக்குது)**

பள்ளிக்கட்டைச் சுமந்துகிட்டா
பக்தி பிறக்குது
அந்தப் பனிமலையில் ஏறிடவே
சக்தி பிறக்குது
பகவானைப் பார்த்துவிட்டா
பாவம் பறக்குது
பதினெட்டாம் படிதொட்டால்
வாழ்வும் இனிக்குது
அந்தப் பதினெட்டாம் படிதொட்டால்
வாழ்வும் இனிக்குது! **(எங்கே)**

**சாமி திந்தக்க தோம் தோம்!**
**ஐயப்ப திந்தக்க தோம் தோம்! (சாமி திந்த..)**

பேட்டைத்துள்ளி ஆடும்போது
மனமும் துள்ளுது
ஐயன் பேரழகைக் காண உள்ளம்
ஆசை கொள்ளுது
காட்டுக்குள்ளே சரண கோஷம்
வானைப் பிளக்குது

**Swaami Aiyappaa! Charanam Aiyappaa!**
**Charanam Aiyappaa! Swaami Aiyappaa!**
**Swaamiyae Aiyappoa! Aiyappoa Swaamiyae!**
**Swaamiyae Aiyappoa! Aiyappoa Swaamiyae!**

**Engae Manakkuthu?**
**Chanthanam Engae Manakkuthu?**
**Aiyappaswaami Koavililae**
**Chanthanam Manakkuthu!**
Enna Manakkuthu?
Malaiyil Enna Manakkuthu?
Inbamaana Oothuvatthi Angae Manakkuthu
Nalla Inbamaana Oothuvatthi
Angae Manakkuthu! **(Engae Manakkuthu)**

Engae Manakkuthu?
Neiyum Engae Manakkuthu?
Veera Manikandan Sannathiyil
Neiyum Manakkuthu
Thiruneiyum Manakkuthu
Panneerum Manakkuthu
Aandavanin Sannathiyil
Arulum Manakkuthu
Aiyanmaargal Ullatthilae
Anbu Manakkuthu
Intha Aiyanmaargal Ullatthilae
Anbu Manakkuthu! **(Engae Manakkuthu)**

Pallikkattaich Chumanthukittaa
Bakthi Pirakkuthu
Anthap Panimalaiyil Aeridavae
Sakthi Pirakkuthu
Baghavaanaip Paartthuvittaa
Paavam Parakkuthu
Pathinettaam Padithottaal
Vaazhvum Inikkuthu
Anthap Pathinettaam Padithottaal
Vaazhvum Inikkuthu! **(Engae Manakkuthu)**

**Swaami Thinthakka Thoam Thoam!**
**Aiyappa Thinthakka Thoam Thoam! (Swaami)**

Paettaitthulli Aadumpoathu
Manamum Thulluthu
Aiyan Paerazhagaik Kaana Ullam
Aasai Kolluthu
Kaattukkullae Sarana Goasham
Vaanaip Pilakkuthu

# Hanumaan

வீட்டை மறந்து பக்தர் கூட்டம்
காட்டிலிருக்குது
தம் வீட்டை மறந்து பக்தர் கூட்டம்
காட்டிலிருக்குது! **(எங்கே மணக்குது)**

பூங்காவனத் தோப்புக்குள்ளே
பவனி வருகிறான்
வேங்கையின் மேல் ஏறிவந்து
வரமும் கொடுக்கிறான்
நோன்பிருந்து வருவோரைத்
தாங்கி நிற்கிறான்
ஒங்கார நாதத்திலே எழுந்து வருகிறான்
அவன் ஒங்கார நாதத்திலே
எழுந்து வருகிறான்! **(எங்கே)**

Veettai Maranthu Bakthar Koottam
Kaattilirukkuthu
Tham Veettai Maranthu Bakthar Koottam
Kaattilirukkuthu! **(Engae Manakkuthu)**

Poongaavanath Thoapukkullae
Bhavani Varugiraan
Veangaiyin Mael Aerivanthu
Varamum Kodukkiraan
Noanbirunthu Varuvoaraith
Thaangi Nirkkiraan
Oangaara Naathatthilae Ezhunthu Varugiraan
Avan Oangaara Naathatthilae
Ezhunthu Varugiraan! **(Engae Manakkuthu)**

---

***Here is a holy celebration of Lord Hanumaan!***

***Hanumaan Jeyanthi (Jan)** is celebrated for the birth of Hanumaan, who is an ardent devotee of Raaman, and is revered as a symbol of strength.*

---

## YouTube Id: prPP-Bz0yrk Aanjanaeya Veeraa

***Hanumaan is our hero, the son of the Wind God Vaayu.** Brave Lord of the Monkeys. Victory to Seetha & Ram, and Radha & Krishna.*

**ஆஞ்சநேய வீரா அனுமந்த சூரா**
**வாயு குமாரா வானர வீரா! (ஆஞ்சநேய)**

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய் ஜெய் ராம்
சீதாராம் ஜெய் ராதே ஷ்யாம்!
**(ஸ்ரீராம் 4 முறை)**
**(ஆஞ்சநேய)**

**Aanjanaeya Veeraa Anumantha Sooraa**
**Vaayu Kumaaraa Vaanara Veeraa! (Aanjanaeya)**

Sreeraam Jeyaraam Jai Jai Raam
Seethaaraam Jai Raadhae Shyaam!
**(Sreeraam 4 Times)**
**(Aanjanaeya)**

---

## YouTube Id: 5AOk0tbomRY Jai Jai Hanumaan

**ஜெய் ஜெய் ஹனுமான் ஜெய ஹனுமான்!**
**ஜெய் ஜெய் ஹனுமான் ஜெய ஹனுமான்!**

மாருதி ராயா ஜெய ஹனுமான்!
மகானு பாவா ஜெய ஹனுமான்!
வாயு குமாரா ஜெய ஹனுமான்!
வானர வீரா ஜெய ஹனுமான்!
அஞ்சனி புத்ரா ஜெய ஹனுமான்!
அதி பலவந்தா ஜெய ஹனுமான்!
ஸ்ரீராம தூதா ஜெய ஹனுமான்!
ஸ்ரீராம பக்தா ஜெய ஹனுமான்!
ஸ்ரீராம பக்தா ஜெய ஹனுமான்!

**ஜெய் ஜெய் ஹனுமான் ஜெய ஹனுமான்!**
**ஜெய் ஜெய் ஹனுமான் ஜெய ஹனுமான்!**

**Jai Jai Hanumaan Jeya Hanumaan!**
**Jai Jai Hanumaan Jeya Hanumaan!**

Maaruthi Raayaa Jeya Hanumaan!
Mahaanu Bhaavaa Jeya Hanumaan!
Vaayu Kumaaraa Jeya Hanumaan!
Vaanara Veeraa Jeya Hanumaan!
Anjani Puthraa Jeya Hanumaan!
Athi Balavanthaa Jeya Hanumaan!
Sreeraama Thoothaa Jeya Hanumaan!
Sreeraama Bakthaa Jeya Hanumaan!
Sreeraama Bakthaa Jeya Hanumaan!

**Jai Jai Hanumaan Jeya Hanumaan!**
**Jai Jai Hanumaan Jeya Hanumaan!**

# Hanumaan

YouTube Id: rPCDwzf_Hbw

## Hanumaan Chaaleesaa

***"Hanumaan Chaaleesaa" was written by Thulasi Daas.** The word "chaaleesaa" is derived from the number 40 in Hindi, as the song has got 40 verses. It is said in the 39th verse that whoever chants it with full devotion to Hanumaan, will have Hanumaan's grace. It is popular belief that chanting the Chaaleesa invokes Hanumaan's divine intervention in grave problems. The series of verses in this song recounts the story of commitment and devotion of Lord Hanumaan to Lord Raaman. It preaches the eternal feeling of love and sacrifice, holding the god in your heart.*

ஜெய ஹனுமானே! ஞான குணக்கடலே!
உலகத்தின் ஒளியே வானரர் கோனே! **(01)**

ராம தூதனே! ஆற்றலின் வடிவமே!
அஞ்சனை மைந்தனே! வாயு புத்திரனே! **(02)**

மாபெரும் வீரனே! பெருந்திறல் வடிவே!
ஞானம் அருள்வாய் நன்மை தருவாய்! **(03)**

தங்கமேனியனே, பட்டாடை அணிபவனே!
மின்னும் குண்டலமுடன்
அலைமுடியும் கொண்டவனே! **(04)**

இடி, கொடிமிளிரும்
கரங்கள் கொண்டோனே!
முஞ்சைப் பூணூல் தோளணிவோனே! **(05)**

சிவனின் அம்சமே! கேசரி மகனே!
உனதொளி வீரத்தை
உலகமே வணங்குமே! **(06)**

பேரறிவாளியே! நற்குணவாரியே!
ராம சேவைக்கென
மகிழ்வுடன் பணிவோனே! **(07)**

உன் மனக் கோவிலில் ராமனின் வாசம்!
ராமனின் புகழைக் கேட்பது பரவசம்! **(08)**

நுண்ணிய உருவாய்
அன்னைமுன் தோன்றினாய்!
கோர உருவினில்
இலங்கையை எரித்தாய்! **(09)**

அசுரரை அழித்த பெரும் பலசாலியே!
ராம காரியத்தை முடித்த மாருதியே! **(10)**

சஞ்சீவி கொணர்ந்தே
இலக்குவனை எழுப்பிட
விஞ்சிய அன்புடன்
ராமன் உனைத் தழுவினார்! **(11)**

Jeya Hanumaanae! Gnaana Gunakkadalae!
Ulagatthin Oliyae Vaanarar Koanae! **(01)**

Raama Thoothanae! Aattralin Vadivamae!
Anjanai Mainthanae! Vaayu Putthiranae! **(02)**

Maaberum Veeranae! Perunthiral Vadivae!
Gnaanam Arulvaai Nanmai Tharuvaai! **(03)**

Thanga Maeniyanae, Pattaadai Anibavanae!
Minnum Kundalamudan
Alaimudiyum Kondavanae! **(04)**

Idi, Kodi Milirum
Karangal Kondoanae!
Munjaip Poonool Thoalanivoanae! **(05)**

Sivanin Amsamae! Kaesari Maganae!
Unatholi Veeratthai
Ulagamae Vanangumae! **(06)**

Paerarivaaliyae! Narkkunavaariyae!
Raama Sevaikkena
Magizhvudan Panivoanae! **(07)**

Un Manak Koavilil Raamanin Vaasam!
Raamanin Pugazhaik Kaetpathu Paravasam! **(08)**

Nunniya Uruvaai
Annaimun Thoandrinaai!
Koara Uruvinil
Ilangaiyai Eritthaai! **(09)**

Asurarai Azhittha Perum Balasaaliyae!
Raama Kaariyatthai Mudittha Maaruthiyae! **(10)**

Sanjeevi Konarnthae
Ilakkuvanai Ezhuppida
Vinjiya Anbudan
Raaman Unaith Thazhuvinaar! **(11)**

# Hanumaan

ராமன் உன்னைப் பெரிதும் புகழ்ந்து
பரதனைப் போல நீ உடனுறை என்றார்! **(12)**

ஆயிரம் நாவுடை
ஆதிசேஷனுன் - பெருமையைப்
புகழ்வதாய் அணைத்தே சொன்னார்! **(13)**

சனகாதி முனிவரும் பிரம்மாதி தேவரும்
ஈசனும் நாரதர் கலைமகள் சேஷனும் **(14)**

எமன், குபேரன்,
திசைக் காவலரும், புலவரும்
உன் பெருமைதனை சொல்ல முடியுமோ? **(15)**

சுக்ரீவனுக்கு அரசை அளித்திட
ராமனின் நட்பால் உதவிகள் செய்தாய்! **(16)**

உன் அறிவுரையை வீடணன் கொண்டதால்
அரியணை அடைந்ததை இவ்வுலகறியும்! **(17)**

தொலைவினில் ஒளிரும்
ஞாயிறைக் கண்டே
சுவைதரும் கனியெனப்
பிடித்து விழுங்கினாய்! **(18)**

வாயினில் ராமனின் மோதிரம் கவ்வியே
ஆழியைக் கடந்ததில்
வியப்பெதும் உண்டோ! **(19)**

உலகினில் முடியாக் காரியம் யாவையும்
நினதருளாலே முடிந்திடும் எளிதாய்! **(20)**

ராம ராச்சியத்தின் வாயிற்காவலன் நீ!
நுழைந்திட இயலுமோ
நின்னருள் இன்றி! **(21)**

உனைச் சரணடைந்தால்
இன்பங்கள் நிச்சயம்!
காவலாய் நீவர ஏதிங்கு அச்சம்! **(22)**

நின்னால் மட்டுமே நின்திறல் அடங்கும்!
மூவுலகும் அதன் முன்னே நடுங்கும்! **(23)**

பூதப் பிசாசுகள் நெருங்கிட வருமோ!
மகா வீரனுன் திருநாமம் சொல்வாரை! **(24)**

நோய்களும் அகலும் துன்பங்கள் விலகும்!
பலமிகு நின்திரு நாமம் சொல்லிட! **(25)**

தொல்லைகள் தொலைந்திட
அனுமன் அருள்வான்!
மனம், வாக்கு, செயலால்
தியானிப்பவர்க்கே! **(26)**

Raaman Unnaip Perithum Pugazhnthu
Parathanaip Poal Nee Udanurai Endraar! **(12)**

Aayiram Naavudai
Aathi Saeshanun - Perumaiyaip
Pugazhvathaai Anaitthae Sonnaar! **(13)**

Sanakaathi Munivarum Brammaathi Thaevarum
Eesanum Naarathar Kalaimagal Saeshanum **(14)**

Eman, Kubaeran,
Thisaik Kaavalarum, Pulavarum
Un Perumaithanai Solla Mudiyumoa? **(15)**

Sukreevanukku Arasai Alitthida
Raamanin Natpaal Uthavigal Seithaai! **(16)**

Un Arivuraiyai Veedanan Kondathaal
Ariyanai Adainthathai Ivvulagariyum! **(17)**

Tholaivinil Olirum
Gnaayiraik Kandae
Suvaitharum Kaniyenap
Piditthu Vizhunginaai! **(18)**

Vaayinil Raamanin Moathiram Kavviyae
Aazhiyaik Kadanthathil
Viyappethum Undoa? **(19)**

Ulaginil Mudiyaak Kaariyam Yaavaiyum
Ninatharulaalae Mudinthidum Elithaai! **(20)**

Raama Raacchiyatthin Vaayirkkaavalan Nee!
Nuzhainthida Iyalumoa
Ninnarul Indri! **(21)**

Unaich Charanadainthaal
Inbangal Nicchayam!
Kaavalaai Neevara Aethingu Accham! **(22)**

Ninnaal Mattumae Ninthiral Adangum!
Moovulagum Athan Munnae Nadungum! **(23)**

Boothap Pisaasugal Nerungida Varumoa!
Mahaa Veeranun Thirunaamam Solvaarai! **(24)**

Noaigalum Agalum Thunbangal Vilagum!
Balamigu Ninthiru Naamam Sollida! **(25)**

Thollaigal Tholainthida
Anuman Arulvaan!
Manam, Vaakku, Seyalaal
Thiyaanippavarkkae! **(26)**

# Hanumaan

தவம்புரி பக்தர்க்கு வரங்கள் நல்கிடும்
ராமனின் பணிகளை நீயே செய்தாய்! **(27)**

வேண்டிடும் பக்தர்கள் ஆசைகள் நிறைவுறும்!
அழியாக் கனியாம் அனுபூதி பெறுவார்! **(28)**

நான்கு யுகங்களும் நின்புகழ் பாடிடும்!
நின்திரு நாமமே உலகினில் சிறந்திடும்! **(29)**

ஞானியர் நல்லோரைக் காப்பவன் நீயே!
தீயவை அழிப்பாய்! ராமனின் கனியே! **(30)**

எட்டு சித்திகளும் ஒன்பது செல்வங்களும்
கேட்டவர்க்கு அருள்வரம்
சீதை உனக்களித்தார்! **(31)**

ராம பக்தியின் சாரமே நின்னிடம்!
என்றும் அவனது சேவகன் நீயே! **(32)**

நின்னைப் பற்றியே ராமனை அடைவார்!
தொடர்வரும் பிறவித்
துன்பம் துடைப்பார்! **(33)**

வாழ்வின் முடிவினில் ராமனடி சேர்வார்!
ஹரியின் பக்தராய்ப்
பெருமைகள் பெறுவார்! **(34)**

மறுதெய்வம் மனதில் நினையா பக்தரும்
அனுமனைத் துதித்தே
அனைத்தும் பெறுவார்! **(35)**

துன்பங்கள் தொலையும்
துயரங்கள் தீர்ந்திடும்!
வல்லிய அனுமனை தியானிப்பவர்க்கே! **(36)**

ஆஞ்சநேயனே வெற்றி! வெற்றி வெற்றி!
விஞ்சிடும் குருவே! எமக்கருள் புரிவாய்! **(37)**

நூறுமுறை இதைத் துதிப்பவர் எவரோ
அவர்தளை நீங்கியே
ஆனந்தம் அடைவார்! **(38)**

அனுமனின் நாற்பதைப் படிப்பவர் எல்லாம்
சிவனருள் பெற்றே சித்திகள் அடைவார்! **(39)**

அடியவன் துளசீ தாசன் வேண்டுவான்
அனைவர் உள்ளிலும்
திருமால் உறையவே! **(40)**

Thavampuri Baktharkku Varangal Nalgidum
Raamanin Panigalai Neeyae Seithaai! **(27)**

Vaendidum Bakthargal Aasaigal Niraivurum!
Azhiyaak Kaniyaam Anuboothi Peruvaar! **(28)**

Naangu Yugangalum Ninpugazh Paadidum!
Ninthiru Naamamae Ulaginil Siranthidum! **(29)**

Gnaaniyar Nalloaraik Kaappavan Neeyae!
Theeyavai Azhippaai! Raamanin Kaniyae! **(30)**

Ettu Siddhigalum Onbathu Selvangalum
Kaettavarkku Arulvaram
Seethai Unakkalitthaar! **(31)**

Raama Bakthiyin Saaramae Ninnidam!
Endrum Avanathu Saevagan Neeyae! **(32)**

Ninnaip Pattriyae Raamanai Adaivaar!
Thodarvarum Piravith
Thunbam Thudaippaar! **(33)**

Vaazhvin Mudivinil Raamanadi Saervaar!
Hariyin Baktharaaip
Perumaigal Peruvaar! **(34)**

Marutheivam Manathil Ninaiyaa Baktharum
Anumanaith Thuthitthae
Anaitthum Peruvaar! **(35)**

Thunbangal Tholaiyum
Thuyarangal Theernthidum!
Valliya Anumanai Thiyaanippavarkkae! **(36)**

Aanjanaeyanae Vettri! Vettri Vettri!
Vinjidum Guruvae! Emakkarul Purivaai! **(37)**

Noorumurai Ithaith Thuthippavar Evaroa
Avarthalai Neengiyae
Aanantham Adaivaar! **(38)**

Anumanin Naarppathaip Padippavar Ellaam
Sivanarul Pettrae Siddhigal Adaivaar! **(39)**

Adiyavan Thulasee Thaasan Vaenduvaan
Anaivar Ullilum
Thirumaal Uraiyavae! **(40)**

# Other Bhajans

YouTube Id: PdBrgAK8sHQ

## Navagraha Sloakam

**ஞாயிறு:** சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி!
சூரியா போற்றி! சுதந்திரா போற்றி!
வீரியா போற்றி! வினைகள் களைவாய்!

**திங்கள்:** எங்கள் குறைகள்
எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி! திருவருள் தருவாய்!
சந்திரா போற்றி! சத்குரு போற்றி!
சங்கடம் தீர்ப்பாய்! சதுரா போற்றி!

**செவ்வாய்:** சிறப்புறு மணியே
செவ்வாய்த் தேவே!
குறையிலாதருள்வாய் குணமுடன் வாழ!
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி!
அங்காரகனே, அவதிகள் நீக்கு!

**புதன்:** இதமுற வாழ இன்னல்கள் நீக்கு!
புத பகவானே பொன்னடி போற்றி!
பதம் தந்தாள்வாய் பண்ணொலியானே!
உதவியே அருளும் உத்தமா போற்றி!

**வியாழன்:** குணமிகு வியாழக்
குரு பகவானே!
மணமுடன் வாழ மகிழ்வுடன் அருள்வாய்!
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா!
கிரக தோஷமின்றி கடாஷித் தருள்வாய்!

**வெள்ளி:** சுக்கிரமூர்த்தி சுபமிக ஈவாய்!
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்!
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே!
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கு அருளே!

**சனி:** சங்கடம் தீர்க்கும் சனி பகவானே!
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்!
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தா தா!

**இராகு:** அரவெனும் இராகு
அய்யனே போற்றி!
கரவாது அருள்வாய் கஷ்டங்கள் நீக்கி!
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி!
இராகுக்கனியே ரம்மியா போற்றி!

**கேது:** கேதுத் தேவே கீர்த்தித் திருவே!
பாதம் போற்றி! பாவங்கள் தீர்ப்பாய்!
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் இரஷி!

**Gnaayiru:** Seelamaai Vaazhach Cheerarul Puriyum
Gnaalam Pugazhum Gnaayirae Poattri!
Sooriyaa Poattri! Suthanthiraa Poattri!
Veeriyaa Poattri! Vinaigal Kalaivaai!

**Thingal:** Engal Kuraigal
Ellaam Theerkkum
Thingalae Poattri! Thiruvarul Tharuvaai!
Chanthiraa Poattri! Sathguru Poattri!
Sangadam Theerppaai! Chathuraa Poattri!

**Chevvaai:** Sirappuru Maniyae
Chevvaai Thaevae!
Kuraiyilaatharulvaai Gunamudan Vaazha!
Mangalach Chevvaai Malaradi Poattri!
Angaaraganae, Avathigal Neekku!

**Pudhan:** Idhamura Vaazha Innalgal Neekku!
Putha Bhagavaanae Ponnadi Poattri!
Patham Thanthaalvaai Pannoliyaanae!
Uthaviyae Arulum Utthamaa Poattri!

**Viyaazhan:** Gunamigu Viyaazhak
Kuru Bhagavaanae!
Manamudan Vaazha Magizhvudan Arulvaai!
Prahaspathi Viyaazhap Paraguru Naesaa!
Graha Thoashamindri Kadaakshith Tharulvaai!

**Velli:** Chukkira Moorthi Subhamigu Eevaai!
Vakkiramindri Varamigath Tharuvaai!
Vellich Chukkira Vitthaga Vaenthae!
Allik Koduppaai Adiyaarkku Arulae!

**Sani:** Sangadam Theerkkum Sani Baghavaanae!
Mangalam Ponga Manam Vaittharulvaai!
Saccharavindri Saagaa Neriyil
Icchagam Vaazha Innarul Thaa Thaa!

**Raagu:** Aravenum Raagu
Aiyanae Poattri!
Karavaathu Arulvaai Kashtangal Neekki!
Aaga Arulpuri Anaitthilum Vettri!
Raaguk Kaniyae Rammiyaa Poattri!

**Kaethu:** Kaethuth Thaevae Keerthith Thiruvae!
Paatham Poattri! Paavangal Theerppaai!
Vaatham Vambu Vazhakkugal Indri
Kaethuth Thaevae Kaenmaiyaai Rakshi!

# Mangalam

*"**Mangalam**" is a musical composition that asks gods to shower goodness through a song of praise about them, typically at the end of a concert or Bhajan recital. Some are like a "naamavali" or garland of names, some describe the appearance of the deities and their adornments, and some hail the worthiness and qualities of the gods. All bhajan recitals begin with "Kadavul Vaazhtthu", and gets wrapped up with "Mangalam" songs.*

## YouTube Id: Mila0IpEG-k — Kallaap Pizhaiyum

***This is from Arunagirinaathar's "Aegamba Maalai" about Kaanchi Aegambar (Sivan).** The song seeks forbearance of all the mistakes such as: The blunder of not learning; the blunder of not contemplating; the blunder of not being kind enough; the blunder of not remembering; the blunder of not chanting the 5 syllables lord Sivaa (na ma si vaa ya); the blunder of not hailing lord's name; the blunder of not worshiping; the blunders of all kinds!*

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும்,
கசிந்துருகி
நில்லாப் பிழையும், நினையாப் பிழையும்,
நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும், துதியாப் பிழையும்,
தொழாப் பிழையும்,
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சி ஏகம்பனே!
சொல்லால் வருங்குற்றஞ்
சிந்தையால் வருந்தோடஞ்செய்த
பொல்லாத தீவினை
பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுஞ்
தீங்குகளாயவு மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சி ஏகம்பனே!

Kallaap Pizhaiyum, Karuthaap Pizhaiyum,
Kasinthurugi
Nillaap Pizhaiyum, Ninaiyaap Pizhaiyum,
Nin Anjezhutthai
Sollaap Pizhaiyum, Thuthiyaap Pizhaiyum,
Thozhaap Pizhaiyum,
Ellaap Pizhaiyum Porutharulvaai
Kacchi Aegambanae!
Sollaal Varunguttranj
Sinthaiyaal Varunthoadanjeitha
Pollaatha Theevinai
Paarvaiyirp Paavangal Punniyanool
Allaatha Kaelviyaik Kaettidum
Theengugalaayavu Mattru
Ellaap Pizhaiyum Porutharulvaai
Kacchi Aegambanae!

## YouTube Id: v0FT2hbxP1Q — Vaan Mugil Vazhaathu Peiga

***This is from "Kantha Puraanam", by Kacchiyappa Sivaacchaariyaar,** chanted before retiring to bed. Let the cloud in the sky cause rainfall; fertility from the mountains flow out; the king rule according to proper rules; all beings live without any wants; the Dharmaas of the Vaethaas increase; the Yagnaas done with true penance flourish; the justice of the great Saivaa tradition shine all over the world;*

வான் முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க
நல்தவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்!

**ஹரஹர நமப் பார்வதி**
**பதயே ஹரஹர மகாதேவா**
**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!**

Vaan Mugil Vazhaathu Peiga!
Malivalam Surakka Mannan
Koan Murai Arasu Seiga!
Kuraivilaathu Uyirgal Vaazhga!
Naanmarai Arangal Oanga
Nalthavam Vaelvi Malga!
Maenmai Kol Saiva Neethi
Vilanguga Ulagamellaam!

**Harahara Namap Paarvathi**
**Pathayae Harahara Mahaathaevaa**
**Thennaadudaiya Sivanae Poattri**
**Ennaattavarkkum Iraivaa Poattri!**

# Mangalam

## YouTube Id: qLAUq7U0gZg — Om Mangalam

**ஓம் மங்களம் ஓங்கார மங்களம்**
**ஓம் நமச்சிவாய நாத மங்களம்!**
"ந" மங்களம் நகார மங்களம்
நாதபிந்து கலாதீத வேத மங்களம் **(ஓம்)**
"ம" மங்களம் மகார மங்களம்
மகா தேவ தயா சிந்து ஈச மங்களம் **(ஓம்)**
"சி" மங்களம் சிகார மங்களம்
சித்தி புத்தி ஆத்மரூப வேத மங்களம் **(ஓம்)**
"வா" மங்களம் வகார மங்களம்
வாதபேத ரூபநாத பிரம்ம மங்களம் **(ஓம்)**
"ய" மங்களம் யகார மங்களம்
எல்லா ரூபம் நினதே வேத மங்களம்! **(ஓம்)**

**Om Mangalam Oangaara Mangalam**
**Om Namacchivaaya Naatha Mangalam!**
"Na" Mangalam Nagaara Mangalam
Naathabinthu Kalaatheetha Vaetha Mangalam **(Om)**
"Ma" Mangalam Magaara Mangalam
Mahaa Thaeva Dhayaa Sinthu Eesa Mangalam **(Om)**
"Si" Mangalam Sigaara Mangalam
Siddhi Buddhi Aathmaroopa Vaetha Mangalam **(Om)**
"Vaa" Mangalam Vagaara Mangalam
Vaathabaetha Roopanaatha Bramma Mangalam **(Om)**
"Ya" Mangalam Yagaara Mangalam
Ellaa Roopam Ninathae Vaetha Mangalam! **(Om)**

---

## YouTube Id: uEL20QNDLtg — Naatha Vinthu (Pazhani)

***This is another song from Arunagirinaathar's "Thiruppugazh", sung in praise of Lord Murugan, residing in Thiru Aavinankudi (Pazhani).***

நாத விந்து கலாதீ நமோநம
வேத மந்த்ர சொரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம - வெகுகோடி!
நாம சம்பு குமாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்த மயூரா நமோநம - பரசூரர்!

சேத தண்ட விநோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம - கிரிராஜ!
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம - அருள்தாராய்!

ஈதலும் பல கோலால பூஜையும்
ஓதலும் குண ஆசார நீதியும்
ஈரமும் குரு சீர்பாத சேவையும் - மறவாத!
ஏழ் தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக - வயலூரா!

ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயிலையில் - ஏகி!
ஆதி அந்த உலாவாசு பாடிய
சேரர் கொங்கு வைகாவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் -
பெருமாளே!

Naatha Vinthu Kalaathee Namoanama
Vaetha Manthra Swaroopaa Namoanama
Gnaana Panditha Saamee Namoanama - Vegukoadi!
Naama Sambu Kumaaraa Namoanama
Boaga Anthari Baalaa Namoanama
Naaga Bantha Mayooraa Namoanama - Parasoorar!

Saetha Thanda Vinoathaa Namoanama
Geetha Kinkini Paathaa Namoanama
Theera Sambhrama Veeraa Namoanama - Giriraaja!
Dheepa Mangala Joathee Namoanama
Thooya Ambala Leelaa Namoanama
Thaeva Kunjari Baagaa Namoanama - Arulthaaraai!

Eethalum Pala Koalaala Poojaiyum
Oathalum Guna Aachaara Neethiyum
Eeramum Guru Seerpaatha Saevaiyum - Maravaatha!
Aezh Thalam Pugazh Kaavaeriyaal Vilai
Choazha Mandala Meethae Manoahara
Raaja Gembheera Naadaalu Naayaga - Vayalooraa!

Aatharam Payil Aaroorar Thoazhamai
Chaerthal Kondavaroadae Munaalinil
Aadal Vembari Meethaeri Maakayilaiyil - Aegi!
Aathi Antha Ulaavaasu Paadiya
Chaerar Kongu Vaikaavoor Nanaadathil
Aavinankudi Vaazhvaana Thaevarkal -
Perumaalae!




















brightsun
Printing - Graphics - Photos - Signs
(416) 845-6565